
# பொருளியல் நோக்கு

மார்ச் 1997



## உற்பத்தித் திறன்

மக்கள் வங்கி வெளியீடு

# முன்னோட்டம்

இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு பிற்பட்ட காலம் தொடக்கம் 1970 களின் ஆரம்பம் வரையில், பண்டங்களின் உற்பத்தியிலும் சேவைகளின் விநியோகத்திலும் கூட்டு நிறுவனங்களே (குறிப்பாக, அரச துறை நிறுவனங்களே) முதன்மைப் பங்கினை வகித்து வருகின்றன என மூன்றாவது மண்டலத்தைச் சேர்ந்த பெரும்பாலான நாடுகள் நம்பிக் கொண்டிருந்தன. அடிப்படைச் சேவைகளை போதியளவில் வழங்குவதற்கும், நீண்ட கால அடிப்படையிலான பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் திறந்த சந்தை முறைக்கு ஆற்றல் இருப்பதில்லை என்றே இந்நாடுகளைச் சேர்ந்த பெரும்பாலான திட்ட வல்லுனர்களும் கொள்கை கர்த்தாக்களும் எண்ணி வந்தனர். இந்த அரச தலையீட்டுக் கொள்கைகள் காரணமாக, பொருளாதார வளங்களை நிர்வகிப்பதில் ஏகபோக நிலையை அனுபவித்து வந்த பொதுத் துறை நிறுவனங்கள் அந்நாடுகளில் வேரூன்றின.

எனினும், தனி நபர்களுக்கும் தனியார் துறை நிறுவனங்களுக்கும் பொருளாதார முடிவுகளை எடுக்கக்கூடிய ஆற்றலை வழங்கும் விதத்தில் சந்தையை திறந்து விடுவதன் மூலம் உற்பத்தித் திறனையும் வளர்ச்சியையும் துரிதப்படுத்த முடியும் என்ற கருத்துக்கு 1970 களின் பிற்பகுதியில் அங்கீகாரம் கிடைத்தது. உள்நாட்டுக் கைத்தொழில்களை பாதுகாத்துக் கொள்ளும் கொள்கை, மிதமிஞ்சிய அளவிலான விதிமுறைகள் மற்றும் மத்தியமயப்படுத்தப்பட்ட நிர்வாகம் என்பவற்றின் கீழ் செயல்பட்டு வந்த மூன்றாவது மண்டலத்தைச் சேர்ந்த பெரும்பாலான பொருளாதாரங்களுக்கூடாக வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்திக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை வரவர நலிவடையத் தொடங்கி இருந்தது. மேலும், இந்நாடுகளில் உற்பத்தித் திறனிலும் இடையறாத வீழ்ச்சி ஏற்பட்டுக் கொண்டு வந்தது. இந்தப் பின்புலத்தில் பொதுத் துறை குறித்து அவநம்பிக்கை தோன்றியதுடன், திறந்த சந்தை குறித்த புதிய நம்பிக்கை துளிர்க்கத் தொடங்கியிருந்தது. மறுபுறத்தில், குறைந்த உற்பத்தித் திறன், பொருளாதார வளர்ச்சியில் மந்த நிலையை எடுத்து வரக்கூடிய விதத்தில் வளங்களின் வீண் விரயத்தை பிரதிபலிப்பதாகவும் இருந்தது. எனவே, உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கென சந்தையை தளைகளிலிருந்து விடுவித்தல், கட்டுப்பாடுகளை நீக்குதல் மற்றும் மத்தியமயப்படுத்தப்பட்டுள்ள பாரிய நிறுவனங்களை மறுசீரமைப்பு செய்தல் என்பவற்றின் அடிப்படையில் கொள்கைகள் நெறிப்படுத்தப்பட்டன. 1980 களின் தொடக்கத்தில் ஆரம்பமாகிய இந்த செயல்முறை பிற்பாடு உலக அளவிலான உற்பத்தி இயக்கமொன்றின் நிலையை எட்டியது. இப்பொழுது வெற்றிகரமான தொழில் முயற்சியாளர் ஒருவரை மதிப்பிடும் மிக முக்கியமான ஒரேயொரு காரணியாக உற்பத்தித் திறன் மட்டுமே இருந்து வருகின்றது. இந்த அளவுகோலின் அடிப்படையிலேயே நிறுவனங்களும் தொழில் அமைப்புக்களும் இப்பொழுது மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன.

பொருளாதாரம் திறந்த சந்தை அமைப்பொன்றை நோக்கி நெறிப்படுத்தப்படும் பொழுது ஒரு போட்டிச் சூழல் ஏற்படுகின்றது என்றும், பண்டங்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதில் அனைத்துத் தொழில் முயற்சியாளர்களும் வளங்களை உரியளவில் சரியான விதத்தில் முதலீடு செய்வதாகவும் நம்பப்படுகின்றது. மனித மூலவளங்கள், பௌதீக வளங்கள் மற்றும் நிதி ஆதாரங்கள் என்பவற்றை பயனுள்ள விதத்தில் பயன்படுத்திக் கொள்ளும் பொழுது சிறந்த பெறுபேறுகள் கிட்டுகின்றன. இதன் பிரகாரம், "உற்பத்தித் திறன்" என்ற பதத்துக்கு மனித, பௌதீக மற்றும் நிதி வளங்கள் என்பவற்றை பயன்படுத்தும் அளவு, பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பன கிடைக்கும் அளவு என்பவற்றுக்கிடையிலான விகிதாசாரம் என வரைவிலக்கணம் வழங்க முடியும். போட்டித் திறனை அதிகரித்தல் மற்றும் ஒட்டு மொத்த பொருளாதார சமூக அபிவிருத்தியை எடுத்து வருதல் ஆகியன தொடர்பான ஆற்றலை உற்பத்தித் திறன் வளர்ச்சி மட்டுமே தொழில் முனைவோருக்குப் பெற்றுக் கொடுக்க முடியும். போட்டியை எதிர்கொண்டு, திறந்த சந்தையில் தாக்குப் பிடித்து நிற்பது என்பது உற்பத்தித் திறனை அதிகரித்துக் கொள்வதில் உள்ள ஈடுபாட்டினையே பிரதிபலிக்கின்றது. இந்த அணுகுமுறை, நேற்றிலும் பார்க்க இன்று மேலும் நல்ல முறையில் உழைப்பதற்கு தொழில் முனைவோருக்குத் தூண்டுதலை அளிக்கின்றது. உற்பத்தித் திறன் வளர்ச்சி, செயல்திறனை வளர்த்துக் கொள்வதிலுள்ள ஈடுபாடு மற்றும் கூட்டாக உழைத்தல் என்பவற்றின் மீது தங்கியுள்ளது. புதிய சிந்தனையையும் புதிய தொழில்நுட்பத்தையும் உபயோகித்து, மாறிவரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அனுசரித்துச் செல்வது இந்த நிகழ்வுப்போக்கில் ஒரு முக்கிய கூறாக இருந்து வருகின்றது. எனவே, இந்த வகையில், உற்பத்தித் திறன் என்பது முகாமை சார்ந்த ஒரு உள்ளீடாக இருந்து வரவில்லை; அதற்கு மாறாக, மக்களின் பங்கேற்பினை அடிப்படையாகக் கொண்ட ஒரு செயல்முறை என்ற கருதுகோளை அது இன்று எட்டிக் கொண்டுள்ளது. மனித வலு, மூலதனம், இயந்திர உபகரணங்கள் மற்றும் ஏனைய உற்பத்தி உள்ளீடுகள் என்பவற்றின் சரியான, செயல்திறன் மிக்க பகிர்வுக்கூடாக உற்பத்தித் திறன் வளர்ச்சியில் வணிக முயற்சிகளின் செயல்பாட்டுக்கு ஒரு புதுப் பொலிவு கிடைக்கின்றது. எனவே, இந்த நிலையில், உற்பத்தித் திறன் வளர்ச்சியில் மனித உறவுகள் என்ற விடயமே முக்கிய ஸ்தானத்தைப் பெறுகின்றது. பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிலும், முடிவுகளை எடுப்பதிலும் கூட்டு முயற்சி இங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. வெற்றிகரமான உற்பத்தித் திறன் வளர்ச்சிப் படிமுறை ஒன்றுக்கு பின்வரும் முன் நிபந்தனைகள் நிறைவு செய்யப்படுவது அவசியமாகும்:

- உற்பத்தித் திறன் வளர்ச்சி என்பது கடந்த காலம், நிகழ்காலம் என்பவற்றிலும் பார்க்க, எதிர்காலத்தை முக்கியமாக கருத்தில் கொண்டு சாதித்துக் கொள்ளக்கூடிய ஒரு நீண்டகால குறிக்கோளாக உள்ளது.

- மேல் மட்ட முகாமைத்துவத்தின் முன்னோடிப் பங்களிப்பின் கீழ் உற்பத்தித் திறன் வளர்ச்சியை மேம்படுத்த முடியும்.

- உற்பத்தித் திறன் வளர்ச்சி நிகழ்ச்சித்திட்டமொன்றை செயல்படுத்தும் பொழுது முகாமையாளர்கள் அதில் சுறுசுறுப்புடன் பங்கேற்க வேண்டும்.

- உற்பத்தித் திறன் தொடர்பான பிரச்சினைகளை தீர்த்து வைப்பதிலும், பகுப்பாய்வு செய்வதிலும் அனைத்துவிதமான தொழில்நுட்ப முறைகளையும் முழு அளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

- தொழில் முயற்சிகள் நிலைத்திருப்பதற்கு உயர் மட்டத்திலான உற்பத்தித் திறனின் அவசியம் குறித்து பயிற்சிகளுக்கூடாக ஊழியர்களுக்குத் தெளிவுபடுத்துதல் வேண்டும்.

போட்டிச் சூழலில் நிலைத்திருக்கும் பொருட்டு, உற்பத்தித் திறனை மேம்படுத்திக் கொள்ளும் விஷயத்தில் அனைத்துத் தொழில் முயற்சிகளும் பல்வேறுவிதமான முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றன. இது ஒருபுறமிருக்க, மனித சக்திக்குப் பதிலாக கம்ப்யூட்டர் தொழில்நுட்பத்தின் பிரயோகம் மற்றும் தொழிற்சாலைகளில் ரோபோக்கள் என்றழைக்கப்படும் மனித இயந்திரங்களை உபயோகித்தல் போன்ற புதிய வழிமுறைகள் சிக்கல் மிகுந்த ஒரு பிரச்சினையாக உருவாகியுள்ளது. உதாரணமாக, ஊழியத்தின் உற்பத்தித் திறனை மதிப்பிடுவதற்கு உழைப்பு நேரம் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது. உழைக்கும் ஒரு மணி நேரத்துக்கு கிடைக்கும் சராசரி உற்பத்தியை கணக்கிடும் பொழுது உழைப்பில் ஈடுபடுத்தப்படாதவர்களின் (வேலையற்றோரின்) அளவுகோலுக்குள் வராத உற்பத்திகள் கவனத்தில் எடுக்கப்படுவதில்லை. எனவே, அதி நவீன இயந்திரங்கள் மற்றும் முகாமை நுட்பங்கள் என்பவற்றின் பிரயோகத்தின் மூலம் மட்டும் உற்பத்தித் திறன் இலக்குகளை ஓர் இரவுக்குள் சாதித்துக் கொள்ள முடியாது. அதனைப் படிப்படியான ஒரு ஒழுங்கிலேயே சாதித்துக் கொள்ள முடியும். எனவே, முதலாவதாக உற்பத்தித் திறன் குறித்த ஒரு விழிப்புணர்வையும் ஓர் ஈடுபாட்டையும் மக்களிடையே ஏற்படுத்த வேண்டும்.

'பொருளியல் நோக்கு' சஞ்சிகையின் இந்த இதழ், இன்றைய உலகமயமாக்கல் சூழ்நிலையில் பரவலாகப் பேசப்பட்டும் விவாதிக்கப்பட்டும் வரும் "உற்பத்தித் திறன்" (Productivity) என்ற முக்கியமான விடயத்தை வாசகர்களின் கவன மையத்துக்கு எடுத்து வருகின்றது. இவ்விதழில் பிலிப் தோமஸ் எழுதியுள்ள கட்டுரையில் இலங்கையின் உற்பத்தித் திறன் தொடர்பான சாதக பாதக நிலைமைகள் அலசி ஆராயப்பட்டுள்ளன. உற்பத்தித் திறன் வளர்ச்சியில் முன்னுரிமை துறைகள் குறித்து எஸ். தோரதெனிய எழுதுகிறார். கலாநிதி என். ஆர். டி சில்வா, சுனில் விஜயசிங்க மற்றும் டப். ஆர். டி அல்விஸ் போன்ற கட்டுரையாளர்கள் உற்பத்தித் திறன் என்ற சிக்கலான விடயத்தின் பல்வேறு பரிமாணங்களையும் இங்கு முன் வைக்கின்றார்கள்.

மலர் 22 இதழ் 12 மார்ச் 1997


# பொருளியல் நோக்கு


SD 17,095


## உள்ளே

### சிறப்புக் கட்டுரைகள்/நிரல்கள்


| | | |
|---|---|---|
| சுதத்த ரணசிங்க | 25 | பொதுத் துறையில் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதில் உள்ள சவால்கள் |
| என்.ஆர்.டீ.சில்வா | 29 | உற்பத்தித் திறன் விருத்தியும் அதனோடிணைந்த தர மேம்பாடும் |


### விசேஷ அறிக்கை
### உற்பத்தித் திறன்


| | | |
|---|---|---|
| பிலிப் தோமஸ் | 2 | இலங்கையில் உற்பத்தித திறன் : பேரண்டப் பொருளியல் சூழல் |
| டீ.எஸ். தோரதெனிய | 9 | உற்பத்தித் திறன் தசாப்தத்துக்கான முன்னுரிமைகள் |
| சுனில் விஜேசிங்க | 16 | உற்பத்தித் திறன் மற்றும் தரம் என்பவற்றுக்கு ஊடாக நிறுவன மேம்பாடு |
| டப். ஆர். டீ.அல்விஸ் | 19 | உற்பத்தித் திறன் மீது தொழில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றின் தாக்கங்கள் |
| | | கைத்தொழில் உற்பத்தித் துறைக்கான தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் |
| பிராங்ளின் அமரசிங்க | 23 | தேசிய உற்பத்தித் திறனை விருத்தி செய்வதில் உள்ள இடையூறுகள் |


### அடுத்து வரும் இதழ்கள்

- உணவும் உணவுப் பாதுகாப்பும்
- சுகாதார சேவைகள்

அட்டைப் படம் : நயனானந்த விஜேகுலதிலக


வெளியீடு: ஆராய்ச்சிப் பகுதி
மக்கள் வங்கி, தலைமையலுவலகம்,
சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை
கொழும்பு 2.
இலங்கை.


பொருளியல் நோக்கு கருத்துக்களையும் அறிக்கைகளையும் புள்ளிவிவரத்தரவுகளையும் உரையாடல்களையும் பல்வேறு கோணங்களிலிருந்து அளிப்பதன் மூலம் பொருளாதாரத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் ஆர்வத்தினைத் தூண்டி அறிவினை வளர்ப்பதைக் குறிக்கோளாகக் கொண்ட இதழாகும்.

பொருளியல் நோக்கு வெளியீடு மக்கள் வங்கியின் முழு ஒரு சமூகப்பணித்திட்டமாகும். எனினும், அதன் பொருளடக்கம் பல்வேறு ஆசிரியர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைக் கொண்டதாயிருக்கும். அவை வங்கியின் கொள்கைகளையோ உத்தியோகபூர்வமான கருத்துக்களையோ பிரதிபலிப்பவையல்ல. எழுத்தாளரின் பெயருடன் பிரசுரிக்கப்படும் சிறப்புக் கட்டுரைகள் அவ்வாசிரியர்களின் சொந்தக் கருத்துக்களாகும். அவை அவர்கள் சார்ந்துள்ள நிறுவனங்களைப் பிரதிபலிப்பனவுமாகா. இக்கட்டுரைகள் பற்றிய கருத்துரைகளும் குறிப்புக்களும் வரவேற்கப்படுகின்றன.

பொருளியல் நோக்கு மாதந்தோறும் வெளியிடப்படும். அதனை சந்தா செலுத்தியோ அல்லது விற்பனை நிலையங்களிலிருந்தோ பெற்றுக்கொள்ள முடியும்.

# இலங்கையில் உற்பத்தித் திறன்

## பேரண்டப் பொருளியல் சூழல்

பேராசிரியர் பிலிப் எஸ். தோமஸ்

உற்பத்தித் திறன் தொடர்பாக செயல்திறனின் இரு தனித்துவ அம்சங்கள் வலியுறுத்தப் படுகின்றன. முதலாவதாக, ஒரு நிறுவனத்தின் உள்ளக வெற்றி, அதன் உள்ளீட்டு, வெளியீட்டு தொடர்புகள் மற்றும் அதன் உற்பத்திப் பொருளின் தரம் என்பவற்றின் மீது தாக்கத்தை எடுத்துவரும் சில விடயங்கள் உள்ளன. இந்த வகையில் ISO 9000, 5S மற்றும் தர கற்றுக்கள் போன்ற நிகழ்ச்சித் திட்டங்களில் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. ஒரு நிறுவனத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட வெளிக் காரணிகளை இரண்டாவது அம்சம் உள்ளடக்குகின்றது. ஒவ்வொரு நிறுவனமும் செயற்படும் ஒட்டுமொத்த வணிக அல்லது பொருளாதார சூழலை இது குறிக்கின்றது. இந்த வெளி பொருளாதார சூழலே இக்கட்டுரையில் கவனத்தில் எடுக்கப்படுகிறது.

### 1. பொருளாதாரத்தின் பல அம்சங்கள் சரியானவையே

இலங்கையின் பொருளாதாரம் தொடர்பாக எடுத்துக் கூறக்கூடிய ஏராளமான "நல்ல செய்திகள்" உள்ளன. உள்நாட்டு இராணுவ மோதல் இடம் பெற்று வந்த போதிலும் கூட, இதே அபிவிருத்தி மட்டத்தைக் கொண்டிருக்கும் வேறுபல நாடுகளின் பொருளாதாரங்களிலும் பார்க்க இலங்கையின் பொருளாதாரம் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றது. ஒரு சில துறைகளைப் பொறுத்த வரையில் பெருமளவுக்கு வளர்ச்சி யடைந்த நாடுகளின் அளவுகளுக்கு இணையாக அது உள்ளது. எனினும், நாம் குறிப்பிட்ட ஒரு புள்ளிவிவர விளக்கத்தில் மட்டும் முழு அளவில் தங்கியிருக்கும் விடயத்தில் மிகவும் கவனமாக இருக்க வேண்டியுள்ளது.

1. 1948 இல் சுதந்திரம் கிடைத்ததன் பின்னர் பிறப்பின் போதான ஆயுள் எல்லை 50% க்கும் மேல் அதிகரித்து 72 வருடங்களை எட்டியுள்ளது. நடுத்தர வருமான நாடுகளில் இது 67 ஆகும்.

2. இலங்கையின் எழுத்தறிவு விகிதம் 1991 இல் 86.7% என மதிப்பிடப் பட்டிருந்தது. இது வளர்முக உலகிலேயே மிக உயர்ந்த எழுத்தறிவு விகிதமாக உள்ளது.

3. குடித்தொகை வளர்ச்சி (கிழக் காசியாவை ஒத்த வகையில்) வருடாந்தம் 1.3% ஆக மட்டுமே இருந்து வருகின்றது.

4. சிசு மரண விகிதம் 1000 க்கு 16 மட்டுமேயாகும். நடுத்தர வருமான நாடுகளில் இது 1000 க்கு 40 ஆக உள்ளது.

5. ஆரம்ப பாடசாலை நுழைவு நடுத்தர வருமான நாடுகளின் 89% த்துடன் ஒப்பிடும் பொழுது இலங்கையில் 99% ஆக இருந்து வருகின்றது.

6. பொருளாதாரம் பெருமளவுக்குப் பன்முகப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக, மொ.உ.உ. யின் 20% மும், ஏற்றுமதிகளின் 25% மும், ஊழியர் படையின் 45% மும் மட்டுமே வேளாண்மைத் துறையுடன் சம்பந்தப்பட்டுள்ளன.

7. ஏற்றுமதிகள் வருடாந்தம் 17% ஆக விரிவடைந்து கொண்டு வருகின்றன.

8. பாரம்பரியமற்ற ஏற்றுமதிகள் வருடாந்தம் 20% த்தால் வளர்ச்சி கண்டு வருகின்றன.

9. 1992 இல் 16% ஆக இருந்த வேலையின்மை விகிதம் இப்பொழுது 12% ஆக வீழ்ச்சி கண்டுள்ளது.

10. மொ.உ.உ. ஆண்டொன்றுக்கு 4% க்கும் அதிகமாக அதிகரித்து வருகின்றது.

11. தலைக்குரிய மெய் வெளியீடு ஆண்டொன்றுக்கு 2.9% த்தால் அதிகரித்து வருகின்றது.

12. இங்கு குறிப்பிடவேண்டிய மிக முக்கியமான ஒரு விடயம் திறந்த போட்டியிடும் பொருளாதார மொன்றை உருவாக்குவது தொடர்பாக நாடு கொண்டுள்ள அர்ப்பணிப்புணர்வாகும். இந்த முயற்சியில், வளர்ச்சியின் உந்து விசை என்ற முறையில் செயல முனைப்பு மிகுந்த தனியார் துறையின் மீது அதி களவுக்கு அழுத்தம் காட்டப்பட்டு வருகின்றது.

### 2. பொருளாதாரத்தின் சில அம்சங்கள் "தவறானவை" ஆக இருந்து வருவதுடன் உற்பத்தித் திறன் மீது பாதகமான தாக்கத்தை எடுத்து வருகின்றது.

உண்மையிலேயே பெருமளவுக்கு "மோசமான செய்திகளும்" உள்ளன. இலங்கையின் சராசரி வருமானம் ஆளொருவருக்கு ரூ 40000 அல்லது அ.டொ.710 ஆக இருந்து வருகின்றது. இது 40 50 வருடங்களுக்கு முன்னர் இலங்கையிலும் பார்க்க வறியவையாக இருந்த சில அயல் நாடுகளின் அளவுகளிலும் பார்க்கக் குறைவாக உள்ளது. 1994 இல் சராசரி வருமானம் இந்தோனேசியாவில் 880 அ.டொலர்களாகவும் மலேசியாவில் 3480 அ.டொலர்களாகவும் கொரியாவில் 8260 அ.டொலர்களாகவும் இருந்து வந்தது. சிங்கப்பூரின் தலைக்குரிய வருமானம் (இலங்கையின் அளவிலும் பார்க்க 31 மடங்கு அதிகமாக) சுமார் 22000 அ.டொலர்களாக இருந்தது. எனினும், வாழ்க்கைத் தரம் அல்லது ரூபாவினால் உண்மையில் எவ்வளவு பொருட்களை வாங்க முடியும் என்பதை அளவிடும் கொள்வனவுச் சக்தி என்பவற்றின் அடிப்படையில் நோக்கும்பொழுது இலங்கையின் தலைக்குரிய உற்பத்தி 3400 அ.டொலர்களை அண்மித்ததாக இருந்து வருவதாக சிலர் நம்புகின்றனர்.

இந்த கொள்வனவு சக்தி அளவுகோலை பிரயோகித்து நோக்கும் பொழுது கூட சிங்கப்பூரின் வாழ்க்கைத் தரம் இலங்கையின் வாழ்க்கைத் தரத்திலும் பார்க்க 7 மடங்கு மேம்பட்டதாகத் தென்படுகின்றது. இலங்கையின் தலைக்குரிய வருமானம் 710 டொலர்களாக இருந்தாலும் சரியே 3400 டொலர்களாக இருந்தாலும் சரியே எப்படியிருந்தாலும் அது மிகவும் தாழ்ந்த மட்டத்தில் உள்ளது என பகுப்பாய்வாளர்கள் கருதுகின்றனர். ஏனெனில், உலக வங்கி வரிசைப் படுத்தியுள்ள 51 குறை வருமான நாடுகளில் இலங்கையும் இடம் பெற்றுள்ளது. இலங்கை மக்களில் சுமார் 40 சதவீதத்தினர் வறுமைக் கோட்டுக்கு கீழேயே வாழ்ந்து வருவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

- இலங்கையை 5% (அல்லது அதற்கு மேலான) வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்வதற்காக என்ன செய்ய முடியும்?
- தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் எவை?

கடந்த மூன்று மாத காலத்தின் போது இலங்கையின் அரசாங்கத் துறை, வணிகம், வங்கித்தொழில், கைத்தொழில், வேளாண்மை மற்றும் தொழிற்சங்கத் துறை போன்றவற்றைச் சேர்ந்த 100 க்கும் மேற்பட்ட தலைவர்களை சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. இவர்களுடன் மேலே எடுத்துக் காட்டப்பட்ட இரு கேள்விகள் தொடர்பாகவும் மிக ஆழமான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன. வேறுபட்ட கருத்துகள் இவர்களால் முன்வைக்கப்பட்டன என்பது உண்மைதான். ஆனால், பின்வருவனவே நாடு எதிர்நோக்கியிருக்கும் மிக முக்கியமான பிரச்சினைத் துறைகளாக இருக்கின்றன என்பது குறித்த ஒரு பொதுவான கருத்தொற்றுமை பெருமளவுக்கு நிலவி வருவதனை என்னால் அவதானிக்க முடிந்தது.

## பணவீக்கம்

இலங்கையில் இப்பொழுது பணவீக்கம் ஆண்டொன்றுக்கு 16% ஆக இருந்து வருகின்றது. கடந்த தசாப்தத்தின் போது பின்வரும் நாடுகளில் நிலவிவந்த பணவீக்க விகிதத்திலும் பார்க்க இது குறைவாகும். உக்ரேயின் 29%, ஆர்ஜன்டீனா 317%, பெரு 492%, பிரேசில் 900%, நிகாராகுவா 1311%.

எனவே, இலங்கையில் நிலவிவரும் குறைந்த பணவீக்க விகிதம் பொருளாதாரம் தொடர்பான "நல்ல செய்திகள்" பட்டியலில் ஏன் சேர்க்கப்படவில்லை? இதற்கான பதில் மிகத் தெளிவானதாகும். ஏனெனில், இந்த நாடுகள் விசேஷ அக்கறைக்குரிய நாடுகளாக இருந்து வருவதுடன், அவை எந்த விதத்திலும் இலங்கைக்கான முன் மாதிரிகளாக இருந்துவர முடியாது.

கடந்த தசாப்தத்தின்போது அனைத்து வளர்முக நாடுகளிலும் பணவீக்கம் சராசரியாக 10% ஆக மட்டுமே இருந்து வந்துள்ளது. இந்தியா 9%, பாகிஸ்தான் 9%, பங்களாதேஷ் 7%, சிங்கப்பூர் மற்றும் மலேசியா 4% க்கும் கீழ். நாம் முன்மாதிரிகளாகக் கொள்ள வேண்டிய நாடுகளின் விகிதங்களுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது, இலங்கையில் நிலவி வரும் 16% பணவீக்கம் மிக உயர்ந்த ஒரு மட்டமாகவே தென்படுகிறது. எனவே, இந்த வகையில், இலங்கைப் பொருளாதாரத்தின் வருங்கால வளர்ச்சியைப் பொறுத்தவரையில் பணவீக்கம் முதன்மை அச்சுறுத்தலாக இருந்து வருகின்றது.

பணவீக்கத்தின் தவறு என்ன? அது செலவுகளை உயர்த்துவதுடன், ஏற்றுமதிகளின் போட்டித் திறனை நலிவடையச் செய்து, இறக்குமதிகளின் கவர்ச்சியை கூட்டுகின்றது. இவை இரண்டும் வணிகத் துறையின் வெளியீடு, இலாபங்கள், முதலீடு மற்றும் வேலைவாய்ப்பு ஆகிய அனைத்திலுமே பாதிப்புக்களை எடுத்து வருகின்றன. பணவீக்கம் சார்புரீதியான விலைகளில் திரிபுகளை எடுத்து வருவதுடன், ஊக்குவிப்புக்களை மாற்றி, அதற்கூடாக சந்தை விலை முறையின் செயல்பாட்டை பலவீனமாக்கி விடுகின்றது. மேலும், மூலவளங்களின் பொருத்தமான பகிர்விற்கு வசதி செய்து கொடுக்கும் சந்தையின் ஆற்றலின் மீதும் அது பாதிப்பினை எடுத்து வருகின்றது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பேரண்டப் பொருளாதாரக் கொள்கைகள் இன்மை பெரும்பாலான குறை வருமான நாடுகள் பின்பற்றி வந்துள்ள தவறான கொள்கைகளில் ஒன்றாகும். துரித வளர்ச்சி கண்டு வரும் நாடுகளின் அநேகமாக அனைத்துக் கொள்கைப் பட்டியல்களிலும் இக் கொள்கை முதன்மை ஸ்தானத்தில் இருந்த வந்திருப்பதனை அவதானிக்க முடிகிறது.

அனைமைக் காலங்களில், பெரும்பாலான நாடுகளில் மிதமிஞ்சிய அளவிலான நிதிப் பற்றாக்குறையே பணவீக்கம் தோன்றுவதற்கான முக்கியமான காரணமாக இருந்து வந்துள்ளது. அதாவது, இந்நாடுகள் அரசாங்கத்தின் வருவாயிலும் பார்க்க அதிகளவை செலவு செய்து வந்துள்ளன. இலங்கையில் அண்மைக் காலத்தில் வறட்சி, மின்வெட்டு மற்றும் தொழிலாளர் அமைதியின்மை போன்ற வளங்கள் பக்கக் காரணிகள் பணவீக்கத்துக்கு பங்களிப்புச் செய்து வந்திருந்த போதிலும், இதற்கான அடிச்சாடான நீண்டகாலக் காரணம் வரவு செலவு பற்றாக்குறையே எனக் கருதப்படுகிறது. இந்த நிதிப் பற்றாக்குறை மொ.உ.உ. யின் 9% ஆக உள்ளது. இது வளர்முக நாடுகளில் சராசரியாக 2% ஆகக் காணப்படுகிறது. இப்பற்றாக்குறை இந்தியாவைப் பொறுத்தவரையில் 6% மட்டுமே ஆகும். ஆனால், கடந்த 5 வருட காலத்தின் போது பல கிழக்காசிய நாடுகளில் வரவு செலவுத் திட்ட மிகைகள் காணப்பட்டுள்ளன.

இலங்கையைப் பொறுத்த வரையில் வடக்கிலும் கிழக்கிலும் இடம் பெற்று வரும் போர், செலவு அதிகரிப்புக்குப் பங்களிப்புச் செய்து வரும் மிக முக்கியமான காரணமாக இருக்க முடியும். பணவீக்கம் கட்டுக்குள் வைத்திருக்கப்பட வேண்டுமானால் ஏனைய துறைகளிலான அரசாங்கச் செலவுகள் குறைக்கப் பட்டிருத்தல் வேண்டும். வேறு சில நாடுகளில் அரசாங்கங்கள் செலவு குறைப்பில் வெற்றி கண்டுள்ளன. ஆனால், அவை உள் கட்டமைப்பு வசதிகளின் பராமரிப்பு மற்றும் விரிவாக்கம் போன்ற தவறான விடயங்களில் வெட்டுக்களை மேற்கொண்டதன் மூலமே இக் குறைப்பினைச் செய்துள்ளன. இதன் காரணமாக பாதைகள், தொலைத் தொடர்பு வசதிகள், ரெயில் போக்குவரத்து போன்றவை புறக்கணிக்கப்பட்டதுடன், இது அவற்றின் நீண்டகால உற்பத்தித் திறன், அபிவிருத்தி என்பவற்றில் பாதகமான தாக்கங்களை எடுத்து வந்தது. உண்மையிலேயே வரவுசெலவுத்திட்ட வெட்டுக்களை ஒரு கோடரியால் மேற்கொள்ள முடியாது. (தேவையற்றவற்றை மட்டுமே அப்புறப்படுத்தும்) அறுவை மருத்துவரின் கத்தியால் மட்டுமே அதனை மேற் கொள்ள வேண்டும்.

வரவுசெலவுத்திட்ட பற்றாக் குறை பண நிரம்பலின் அதிகரிப்பின் மூலம் நிதிப்படுத்தப்படும்பொழுது பெருமளவுக்கு பணவீக்கம் தோன்றக் கூடிய வாய்ப்பு நிலவுகிறது. பண நிரம்பலின் ($M^2$) வருடாந்த அதிகரிப்பு 1990-1994 காலப்பிரிவின் 16 சதவீதத்திலிருந்து தற்பொழுது சுமார் 11 சதவீதமாக வீழ்ச்சி கண்டிருந்த போதிலும் வருடாந்த அதிகரிப்பு மிகையான அளவிலேயே இருந்து வருகின்றது. ஆண்டொன்றுக்கு பணவீக்கத்தை சுமார் 8% அளவில் வைத்துக் கொள்ளும் குறித்துரைக்கப் பட்ட இலக்கு நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். மொ.உ.உ யின் உண்மையான வளர்ச்சி விகிதத்துடன் இணைந்த விதத்தில் பண நிரம்பலை அதிகரிப்பதே இதன் கோட்பாடாகும். இது தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள ஒரு யோசனை, மத்திய வங்கியை பெருமளவுக்கு தன்னாதிக்கம் கொண்ட ஒரு அமைப்பாக ஆக்குவதாகும். அந்த நிலையில், அது அன்றாட அரசியல் நிர்ப்பந்தங்களிலிருந்து விடுபட்டு பேரண்டப் பொருளியல் உறுதிப்பாட்டை பராமரிப்பதில் தனது முழுக் கவனத்தையும் செலுத்த முடியும். இந்த விடயம் தொடர்பாக நியூஸிலாந்து அண்மையில் பாரிய சீர்திருத்தங்களை அறிமுகம் செய்து வைத்தது. இலங்கை அதிகாரிகள் இவற்றை கவனத்தில் எடுப்பது நல்லது.

நிதியமைச்சும் மத்திய வங்கியும் பணவீக்கப் பிரச்சினையை முழுவதும் நன்கு புரிந்து கொண்டுள்ளன. அப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கும் அவை தம்மாலான அனைத்தையும் செய்து வருகின்றன. சிறந்த அரசிறை மற்றும் நாணயக் கொள்கைகளை செயற்படுத்துவதற்கு அவசியமான அரசியல் கருத்தொற்றுமையை வளர்த்தெடுக்கக் கூடிய விதத்தில் இவற்றின் முயற்சிகளுக்குப் பரவலாக ஆதரவு வழங்கப்படுவது அவசியமாகும்.

நான் கலந்துரையாடல்களை மேற்கொண்டவர்களில் ஒரு சிலர், எமது செலாவணி விகிதம் பொருத்த மற்றது என வாதிட்டனர். வேறு இடங்களில் நிலவிவரும் குறைந்த மட்ட பணவீக்கத்தையும் போட்டியிடுபவர்களின் நாணயங்களின் மிகத் தீவிரமான பெறுமதி இறக்கத்தையும் ஒன்றாக இணைக்கும் பொழுது ஏற்றுமதியாளர்கள் சர்வதேச விலைகளுக்கு ஈடு கொடுப்பது மிகவும் சிரமமாக உள்ளது என்பதனை அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். இது மிகவும் கவனமான பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய ஒரு கண்ணோட்டமாகும். எனினும், மத்திய வங்கியின் நிர்வகிக்கப்பட்ட மிதக்கும் செலாவணி விகிதக் கொள்கை சிறந்த முறையில் செயற்பட்டு வருகின்றது. உலக பொருளாதாரத்தில் இலங்கையின் போட்டித் திறனை அதிகரிப்பதற்கான மிக உறுதியான, தாக்கமான அணுகுமுறை என்ற முறையில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதிலும் பணவீக்க மட்டத்தை குறைத்துக் கொள்வதிலும் முழு அளவில் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

## குறைந்த மட்ட சேமிப்பும் முதலீடும்

மூலதன உருவாக்கத்துக்கு மிகவும் அத்தியாவசியமாக இருப்பவை சேமிப்புக்களும் முதலீடுகளும் ஆகும். இவை இரண்டும் போதியளவில் கிடைக்காமையே வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் மந்தமான வளர்ச்சி என்பவற்றுக்கான மிக முக்கியமான காரணமாக உள்ளது. இலங்கையின் உள்நாட்டுச் சேமிப்பு மொ.உ.உ யில் 15 சதவீதம் மட்டுமேயாகும். இது குறை வருமான, நடுத்தர வருமான, உயர்வருமான நாடுகளின் சராசரி விகிதத்திலும் பார்க்க குறைவாக இருந்து வருவதுடன், கிழக்காசிய நாடுகளின் சராசரி அளவின் அரைவாசிப் பகுதியிலும் பார்க்கக் குறைவாக உள்ளது. சிங்கப்பூரில் இது 51% ஆக இருந்து வருகின்றது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

சேமிப்புக்கள் குறைவாக இருந்து வருவதற்கான காரணங்கள் சிக்கலானவையாகும். எனினும், நிதிச் சந்தையின் செயல்திறனை விருத்தி செய்வதில் அதிகளவில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அதன் விரிவாக்கத்துக்குப் பெருமளவுக்கு ஊக்கமளிக்கப் படுதல் வேண்டும். தற்போதைய வங்கிகளின் சேவைகளை விரிவாக்குவதன் மூலம் அதிகளவிலான சேமிப்புக்களை உருவாக்கவும் ஒன்று திரட்டவும் முடியும். மக்கள் வங்கி தற்பொழுது புதிதாகத் திறக்கப் பட்டிருக்கும் சுமார் 125 சேமிப்பு நிலையங்களுக் கூடாக இதனை மேற்கொண்டு வருகின்றது. மேலும், தேசிய சேமிப்பு வங்கி உயர் அளவிலான தபால் கந்தோர் சேமிப்புத் திட்டமொன்றை ஏற்கனவே செயற் படுத்தி வருகின்றது. எவ்வாறிருப் பினும், பங்களாதேஷின் கிராமின் வங்கி பரீட்சார்த்த முயற்சியுடன் துவக்கப்பட்ட "நுண்மட்ட கடன்" என்று அழைக்கப் படும் மாற்று பொறிமுறை வேறு பல நாடுகளில் வெற்றிகரமான முறையில் பின்பற்றப்பட்டுள்ளது. அதனை இங்கும் விரிவாக்க முடியும்.

கடந்த காலத்தில் சேமிப்புக் களுக்கான வரி ஊக்குவிப்புக்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டு, திருத்தப்பட்டு பின்னர் மாற்றி அமைக்கப் பட்டன. அதன் காரணமாக, சேமிப்பு தொடர்பான ஊக்கம் தளர்வடைந் துள்ளது. சேமிப்புக்கு ஆதரவான ஒரே சீரான சேமிப்பு வரிச் சலுகை முறை ஒன்று நல்ல பெறுபேறுகளை எடுத்து வர முடியும். சேமிப்புக்களை அதிகரிப்பதற்கான தனியார் துறையும் பொதுத் துறையும் இணைந்து தொலைக்காட்சி மற்றும் ஏனைய தொடர்பு சாதனங்கள் என்பவற்றுக் கூடாக மிக விரிவான அளவிலான ஒரு பிரசார முயற்சியை மேற்கொள்ள முடியும்!

அதே வேளையில், பேரண்டப் பொருளியல் மட்டத்தில் பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதன் மூலமும், நுண்மட்டத்தில் (விலைத் திரிபுகளை குறைப்பதன் மூலமும் வளைந்து கொடுக்கும் தன்மையை அதிகரிக்கச் செய்வதன் மூலமும்) சந்தைகளின் செயற்பாட்டினை விருத்தி செய்வதன் மூலமும் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான ஊக்கு விப்புக்களை மேம்படுத்தும் விஷயத்திலும் அதேயளவுக்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட வேண்டும். அடிக்கடி (மானியங்கள் அல்லது வரி வரவுகள் போன்ற) புதிய முதலீட்டு ஊக்குவிப்புக்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தப்பட்டு வருவதுடன், அது வரவு செலவுத்திட்டப் பற்றாக் குறையை மேலும் மோசமடையச் செய்கிறது. அதிகமதிகமான ஊக்கு விப்புக்களுக்குப் பதிலாக தற்பொழுது காணப்படும் முதலீட்டுக்கான இடையூறுகளையும் தடங்கல்களையும் அகற்றுவது மிகவும் பயனுள்ளதாக (செலவு குறைந்ததாகவும்) இருக்க முடியும். அத்தகைய இடையூறுகளும் தடங்கல்களும் இங்கு கீழே கலந்துரை யாடப்படுகின்றன.

முதலீடு பிரதானமாக உள்நாட்டுச் சேமிப்புக்களிலிருந்தே

நிதிப்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும், இதற்கு வேறு இரு மூலாதாரங்கள் குறைநிரப்பு செய்கின்றன. அதன் காரணமாக, முதலீடு மொ.உ.உ. யின் 27% ஆக - அதாவது, சேமிப்பின் அளவிலும் பார்க்க 12% உயர்வாக - இருந்து வருகின்றது. இந்த வேறுபடும் அளவில் சுமார் அரைவாசிப் பகுதி (5%) வெளிநாடுகளில் வேலை செய்து வரும் இலங்கையர்கள் அனுப்பும் பணத் தொகைகளிலிருந்தே கிடைக்கின்றது. மிகுதி 7% வெளிநாட்டு உதவி மற்றும் வெளிநாட்டு முதலீடு என்பவற்றின் வடிவங்களில் வருகின்றன. முதலீட்டு நிதிகளுக்கான இந்த இரு மூலாதாரங்களும் கூட போசித்து வளர்க்கப்பட்டு விரிவாக்கப் படுவது அவசியமாகும்.

## 3. உயர்வட்டி விகிதங்களும் உயர் மூலதனச் செலவுகளும்

கடன் பற்றாக்குறையும் அதன் விளைவான உயர்ந்த வட்டி வீதங்களும் தனியொரு பிரச்சினையாக அடிக்கடி எடுத்துக் காட்டப்பட்டு வந்தபோதிலும், அது நாம் ஏற்கனவே இங்கு குறிப்பிட்ட பணவீக்கம் மற்றும் குறைந்த மட்ட சேமிப்பு ஆகிய இரு பிரச்சினைகளினதும் உள்ளார்ந்த ஒரு பாகமாகவே இருந்து வருகின்றது. எனினும், ஏனைய நாடுகளின் கொடுகடன் சந்தைகளுடன் ஒப்பிட்டு நோக்கும்பொழுது இலங்கையின் வட்டி விகித வேறுபாடுகள் - அதாவது, வங்கிகள் கொடு கடனுக்கு அறவிடும் வட்டி விகிதத்துக்கும் சேமிப்புக்களுக்கு செலுத்தும் வட்டி விகிதத்துக்கும் இடையிலான வேறுபாடுகள் - கணிசமான அளவில் உயர்ந்தமட்டத்தில் இருந்து வருவதாகப் பலர் குறிப்பிட்டுள்ளனர். இந்தச் சூழ்நிலையில், சேமிப்புக்களுக்குச் செலுத்தப்படும் குறைவான வட்டி விகிதங்கள் சேமிப்பவர்களை ஊக்கமிழக்கச் செய்வதுடன், கடன்கள் தொடர்பாக அறவிடப்படும் உயர்வட்டி விகிதங்கள் முதலீட்டை ஊக்கமிழக்கச் செய்கின்றது.

மேலும், நிதிப் பற்றாக்குறையை நிதிப்படுத்துவதற்காக அரசாங்கம் கடன்களை எடுப்பது, அவசியமான முதலீட்டு நிதிகளை பெற்றுக் கொள்வதற்கான தனியார்துறையின் வாய்ப்புக்களை குறைத்து விடுகின்றது. இந்நிலையில், இத்தகைய நிதிகள் செலவு கூடியவையாக இருந்து வருகின்றன. கிராமப் பிரதேசங்களில் வாழ்ந்து வரும் சிறிய உற்பத்தியாளர்கள் மற்றும் முறைசாரா துறை போன்ற பிரிவினர்களின் முதலீட்டு நிதிகளுக்கான தேவைகளை நிறைவு செய்யும் விஷயத்தில் கடன் வசதிகள் போதியளவில் கிடைக்காமை முக்கியமான ஒரு பிரச்சினையாக இருந்து வருகின்றது. இந்த நிதிகள் உரிய விதத்தில் கிடைத்தால் மட்டுமே இத்துறைகளைச் சேர்ந்தவர்களின் உற்பத்தித் திறனை உயர்த்தி, வருமான ஏற்றத்தாழ்வுகளை குறைத்துவிட முடியும். தற்போதைய வங்கிச் சேவைகளை மேலும் விரிவாக்குவதும் நுண்மட்ட கடன் வசதிகளை விஸ்தரிப்பதும் இதற்கான தீர்வின் ஒரு கூறாக அமைய முடியும்.

## 4. மனித மூலவளங்கள்

மிக மோசமான ஊழிய நிர்வாக உறவுகள் காரணமாகத் தோன்றும் தொழிலாளர் அமைதியின்மை நிலை, வெளிச்சூழலின் மிக முக்கியமான, பெருமளவுக்குத் தொல்லை தரக்கூடிய அம்சங்களில் ஒன்றாக இருந்து வருகின்றது. வேலை கொள்வோரும் தொழிற்சங்கத் தலைவர்களும் கூட்டுப் பேரம் பேசல் தொடர்பாக பரஸ்பர அவநம்பிக்கையே நிலவி வருகின்றது. முடிவுகளை எடுப்பதில் தாமதம் ஏற்படும் பொழுது ஒருவரையொருவர் குற்றம் சாட்டி வருகின்றனர். ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் போன்றவற்றுக்கான வேலை கொள்வோரின் பங்களிப்புக்கள் மேற்கொள்ளப் படுவதில்லை என்றும், தொழிலாளர்களுக்கு உரிமையான சேமிப்புக்கள் மற்றும் வருங்கால ஓய்வூதிய நிதிகள் என்பவற்றை இந்தவகையில் வேலை கொள்வோர் கொள்ளையடித்து வருகின்றார்கள் என்றும் தொழிற் சங்கங்கள் (ஓரளவுக்கு நியாயமாக) குற்றம் சாட்டி வருகின்றன. மறுபுறத்தில், தொழிலாளர்கள் திறமையற்றவர்களாகவும், வேலையை முற்றிலும் புறக்கணிப்பவர்களாகவும் தொடர்ச்சியாக பல தினங்களுக்கு வேலைக்குச் சமுகமளிக்காதவர்களாகவும் இருந்து வந்தாலும் கூட அவர்களை வேலை நீக்கம் செய்வது அநேகமாக சாத்தியமற்றது என வேலை கொள்வோர் (ஓரளவுக்கு நியாயமாகவே) கூறிவருகின்றனர். இவை தகராறுகள் நிலவி வரும் பல விடயங்களில் ஒரு சிலவாகும்.

முகாமையாளர்கள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் என்போர் உயர்தரம் வாய்ந்தவர்களாக இருந்து வருவதனால் தொழில் உறவு தொடர்பான உண்மையான, சிக்கலான பல பிரச்சினைகளை தீர்த்து வைக்க முடியும் என நான் நம்புகின்றேன். இலங்கை உற்பத்தித் திறனை அதிகரித்து, வெகு விரைவில் நடுத்தர வருமான நாடுகளின் அணியில் சேர்ந்து கொள்ள வேண்டுமானால் இப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டே ஆக வேண்டும். இது தொடர்பாக பல பிரச்சினைகளை பகுப்பாய்வுக்காக இங்கு எடுத்துக் காட்ட முடியுமாயினும் ஒரு பிரச்சினையை மட்டும் எடுத்து நோக்குவோம். தொழில் பாதுகாப்பு (அல்லது பாதுகாப்பின்மை) மற்றும் வேலையில்லாத் திண்டாட்டம்: உண்மையிலேயே தான்தோன்றித்தனமான பதவி நீக்கங்களிலிருந்து தொழிலாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். ஆனால், தற்போதைய வேலையை முடிவுக்குக் கொண்டுவரும் சட்டமும் அது செயற்படுத்தப்பட்டு வரும் முறையும் எதிர் முரணான ஒரு பெறுபேற்றினையே எடுத்து வருகின்றது. வேலை வாய்ப்பைப் பாதுகாப்பதும் வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைப்பதும் சட்டத்தின் நோக்கமாக இருந்துவரும் அதே வேளையில், அது எதிர்மறையான தாக்கத்தையே கொண்டுள்ளது.

புதிய தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்தும் விஷயத்தில் முகாமையாளர்கள் பெருமளவுக்குத் தயக்கம் காட்டி வருகின்றார்கள், ஏனெனில், பிற்காலத்தில் அவர்களை வேலையிலிருந்து நீக்க வேண்டிய தேவை ஏற்பட்டால் அவ்விதம் செய்வது (நேரம் மற்றும் பணம் என்பவற்றின் அடிப்படையில்) செலவு கூடியதாக இருந்துவர முடியும் என்பதே இத்தயக்கத்துக்கான காரணமாகும். நான் கலந்துரையாடிய முகாமையாளர்களில் பெருந்தொகையானோர், சாத்தியமான சந்தர்ப்பங்களில் எல்லாம் தாம் மேலதிக ஊழியர்களுக்குப் பதிலீடாக இயந்திரங்களையும் தன்னியக்க முறைகளையும் பயன்படுத்துவதற்கே முயன்று வருவதாக வலியுறுத்திக் கூறினார்கள். எனவே, இந்த பிரஸ்தாப சட்டம் வேலை வாய்ப்புக்களை அதிகரிப்பதற்குப்

பதிலாக உருவாக்கப்பட வேண்டிய வேலை வாய்ப்புக்களின் எண்ணிக்கையை குறைத்து வருகின்றதென்றே கூற வேண்டியுள்ளது. இந்த நிலையில் அது எதிர்மறையான விதத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்துக்கான ஒரு முக்கிய பங்களிப்புக் காரணியாக செயற்பட்டு வருகின்றது.

சில வருடங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பின் (OECD) ஓர் ஆய்வின் முடிவுகள், இலங்கையில் தொழிலாளர் நிலை தொடர்பான முக்கியமான சில விடயங்களை முன்வைக்கின்றன. 1970 களின் நடுப்பகுதி தொடக்கம் 1990 வரையிலான சுமார் 15 வருட காலப்பிரிவில் ஐக்கிய அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் கிடைத்து வந்த வேலை வாய்ப்புக்களை இந்த ஆய்வு இலங்கையுடன் ஒப்பிட்டு நோக்கியது. இக் காலப் பிரிவின் தொடக்கத்தின் போது ஐரோப்பாவில் வேலையில்லாத் திண்டாட்டம் 3% ஆக மட்டுமே இருந்து வந்தது. காலப் பிரிவின் முடிவின் போது அது சுமார் 12% ஆக இருந்தது. இன்னமும் அந்த அளவிலேயே இருந்து வருகின்றது. ஏனெனில், புதிதாக தேறிய தொழில் வாய்ப்புக்கள் எதுவும் உருவாக்கப்படவில்லை. புதிதாக உருவாக்கப்பட்ட ஒரு சில தொழில்களும் கூட ஒழிக்கப்பட்ட தொழில்களை ஈடு செய்வனவாகவே இருந்து வந்தன. ஐக்கிய அமெரிக்காவைப் பொறுத்தவரையில் நிலைமை நேர்மாறானதாக இருந்தது. 1970 களின் நடுப்பகுதியில் அங்கு வேலையில்லாத் திண்டாட்டம் 12% ஆக இருந்து வந்தது. இந்த 15 வருட காலப் பிரிவின்போது அங்கு சுமார் 2 கோடி புதிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டன. (அதாவது, ஒழிக்கப்பட்ட தொழில்களிலும் பார்க்க 2 கோடி அதிக தொழில் வாய்ப்புக்கள்). இதன் விளைவாக, வேலையின்மை 6%க்கும் குறைந்த மட்டத்தில் வீழ்ச்சியடைந்ததுடன், இன்னமும் அது அவ்வாறே இருந்து வருகின்றது. எனது சொந்த மாநிலமான மிச்சிகனில் இது முன்னர் 20% ஆக இருந்து, அமெரிக்காவிலேயே மிகக்குறைந்த விகிதங்களிலொன்றான 5% ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

பொருளாதார ஒத்துழைப்புக்கும் அபிவிருத்திக்குமான தாபனத்தின் (OECD) பொருளியலாளர்கள், இரு தொழிற் சந்தைகளிலும் காணப்படும் வேறுபாடுகளே இதற்கான முக்கிய காரணம் எனத் தெரிவித்தனர். ஐரோப்பாவில் ஊழியச் சந்தை நெகிழ்வற்றதாக இருந்து வருகின்றது; தொழிலாளர்கள் உயர் அளவில் பாதுகாப்பினைப் பெற்றிருப்பதுடன், அவர்களை வேலையிலிருந்து நீக்குவதும் மிகவும் கடினமாகும். சம்பளம் தவிர்ந்த ஏனைய அனுகூலங்களும் மிக விரிவான அளவில் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையில், ஐரோப்பிய முறை, துரித வேகத்தில் அதிகரித்து வரும் வேலையற்றோரின் செலவில் வேலையில் இருப்பவர்களுக்க எண்ணற்ற அனுகூலங்களை வழங்கி வருகின்றது.

ஐக்கிய அமெரிக்காவில் 1970 களின் போது ஊழியச் சந்தை பெருமளவுக்கு நெகிழ்ச்சித் தன்மையுடன் கூடியதாக இருந்து வந்தது. அங்கு பெருமளவுக்கு அசையும் தன்மையுடன் கூடிய ஊழியர் படை இருந்து வந்ததுடன், அடுத்து வந்த 15 ஆண்டுகளில் இந்நிலைமை மேலும் தீவிரமடைந்தது. தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதனையும் வேலை நீக்கம் செய்வதனையும் அங்கு மிக எளிதில் மேற்கொள்ளலாம். வேலை வாய்ப்பு ஊழியத்தின் செலவிலேயே பெருமளவுக்குத் தங்கியுள்ளது. உற்பத்திச் செலவின் மிகப் பெரிய கூறும் அதுதான். இது மிகவும் எளிய படிப்பினையொன்றாகத் தோன்றுகின்றது.

எவ்வாறிருப்பினும், இலங்கையைப் போன்ற ஒரு நாட்டில் ஊழியச் சந்தையில் மாற்றங்களை எடுத்து வருவது சவால்கள் மிகுந்த ஒரு பணியாகவே தென்படுகின்றது. தொழில் ஆணையாளரின் முடிவெடுக்கும் நிகழ்வுப் போக்கினை விரைவுபடுத்துவதன் மூலம் இப்பிரச்சினையை கணிசமான அளவில் தீர்த்து வைக்க முடியும் எனச் சிலர் யோசனை தெரிவித்துள்ளனர். எனினும், தொழில் ஆணையாளரின் அலுவலகத்தில் ஊழியர் பற்றாக்குறை நிலவி வருவதுடன், பெருமளவுக்கு வேலையும் தேங்கியுள்ளது. வேறு சிலர் இங்கு நிலவும் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு சட்டத்தில் அடிப்படை மாற்றங்கள் எடுத்து வரப்பட வேண்டுமெனக் கருதுகின்றனர். தொழில் சட்டங்களை மீள உருவாக்குவதற்கும் அவற்றை தாக்கமான முறையில் செயற்படுத்துவதற்கான நிர்வாக வழிமுறைகளை அபிவிருத்தி செய்வதற்கும் பாரிய மட்டத்திலான நிர்வாகம் - தொழிலாளர் கூட்டு முயற்சியொன்று அவசியமாகும்.

தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்துக்கும் இடையில் சுமுகமான உறவுகள் நிலவி வரும் பல நிறுவனங்கள் இலங்கையில் செயற்பட்டு வருகின்றன. அந் நிறுவனங்களில் அண்மைக் காலத்தில் வேலை நிறுத்தம் போன்ற தொழிற்சங்க நடவடிக்கைகள் அறவே இடம் பெறவில்லை. இத்தகைய மாதிரி நிறுவனங்களின் படிப்பினைகளை ஏனையவர்களும் பகிர்ந்து கொள்ளும் பொருட்டு நிறுவன ரீதியான ஏற்பாடுகள் விருத்தி செய்யப்படுவது அவசியமாகும்.

முன்வைக்கப்பட்டுள்ள மற்றொரு யோசனை, இலங்கையில் நிலவிவரும் தொழிலாளர் அமைதியின்மையை பரிசீலனை செய்வதற்கென, துரித வளர்ச்சி கண்டு வரும் பொருளாதாரமொன்றிலிருந்து நல்ல அனுபவம் வாய்ந்த முன்னணி தொழிலாளர் தலைவர் ஒருவரை இங்கு வரவழைக்க வேண்டும் என்பதாகும். அத்தகைய ஒருவர் பயனுள்ள பல கருத்துக்களை வழங்க முடியும்.

தேசிய உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கு மட்டுமன்றி, வருமானப் பகிர்வின் அடிமட்டத்தில் உள்ளவர்களின் வருமானங்களையும் வாழ்க்கைத் தரங்களையும் மேம்படுத்துவதற்கும், மானிட மூலதன உருவாக்கம் மற்றும் திறன்களை விருத்தி செய்வதன் முக்கியத்துவம் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட விதத்தில் இறுதி யோசனை உள்ளது. பயிற்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக நிர்வாகமும் தொழிற் சங்கங்களும் இணைந்து செயற்பட வேண்டும்.

முகாமையாளர்கள், பொறியியலாளர்கள், வடிவமைப்பாளர்கள் போன்ற தேர்ச்சி பெற்றுள்ள மனித சக்தியில் பெருமளவுக்குத் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. பள்ளிக் கல்வியை விட்டுச் செல்பவர்கள் ஊழியர் படையின் உற்பத்திசார் உறுப்பினர்களாக பங்கேற்பதற்கு ஆயத்தமற்றவர்களாகவே உள்ளனர். இந்நிலை ஓரளவுக்கு நடைமுறைப் பயிற்சி இன்மை காரணமாகவே ஏற்பட்டுள்ளது. அது மட்டுமன்றி, பெரும்பாலான

மாணவர்கள் அரசாங்க சேவையில் தொழில் செய்ய விரும்புவதும் இந்நிலைமைக்கு பங்களிப்புச் செய்துள்ளது.

### 5. உள் கட்டமைப்பு வசதிகள் பற்றாக்குறை

பாதைகள், துறைமுகங்கள், புகையிரதப் பாதைகள், சக்தி, நீர் மற்றும் தொலைத்தொடர்பு என்பன வணிகத் துறைக்கும் அதே போல அரசாங்கத் தலைவர்களுக்கும் மிகுந்த முக்கியத்துவத்தை கொண்டுள்ள துறைகளாக இருந்து வருகின்றன. இங்கு எனது கவனத்துக்கு வந்த பிரச்சினைகள் உலகம் பூராவும் பொதுத்துறை தொழில் முயற்சிகள் எதிர் கொண்டுவரும் பிரச்சினைகளை ஒத்தவையாகவே உள்ளன. நிதி வளங்களின் பற்றாக்குறை மற்றும் அரசியல் தலையீடு என்பனவே முக்கியமான பிரச்சினைகளாகத் தோன்றுகின்றன.

*புகையிரதப் பாதைகள் :* இலங்கையில் புகையிரதப் பாதை அமைப்பை பராமரிப்பதற்கும், புதுப்பிப்பதற்கும் விஸ்தரிப்பதற்கும் தேவையான போதிய நிதி ஆதாரங்கள் வழங்கப்படுவதில்லை என்றே கூறவேண்டும். பயணிகள் போக்குவரத்து மற்றும் சரக்குப் போக்குவரத்து என்பன குறைந்த மட்டத்தில் விலையிடப்பட்டிருப்பது இந்நிலைமைக்கு ஓரளவுக்கு வழிகோலியுள்ளது. இலங்கையில் ரெயில் வண்டிகள் சார்பு ரீதியில் மிகக் குறைந்த மட்டத்திலான சரக்குகளையே காவிச் செல்கின்றன. சுதந்திர வர்த்தக வலயத்துக்கு அருகில் விமான நிலையத்தை ஒட்டி புகையிரதப் பாதை சென்ற போதிலும், சுதந்திர வர்த்தக வலயத்தின் ஏற்றுமதிப் பொருட்கள் அனைத்தும் லொறிகள் மூலமே (பாதை போக்குவரத்தில் நிலவிவரும் வாகன நெரிசலுக்கு மத்தியில்) கப்பற்படுத்துவதற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. புகையிரதப் பாதைகளை மேம்படுத்தும் வேலை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஓரளவுக்கு மின்மயமாக்கும் திட்டமும் இப்பொழுது கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது. எனினும், 21ம் நூற்றாண்டில் எமது ரெயில்வே அமைப்பு முக்கியமான ஒரு பங்கினை ஆற்றி வேண்டுமானால் இத்துறையில் மிகத் தீவிரமான மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

*பாதைகள்* இலங்கையில் பஸ் போக்குவரத்தை தனியார்மயமாக்கியுள்ள விதம் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனப் பரவலாக ஒரு கருத்தொற்றுமை நிலவி வருகின்றது. பஸ் வண்டிகளில் மிதமிஞ்சிய அளவில் ஆட்கள் ஏற்றிச் செல்லப்படுவதுடன், இவ்வண்டிகள் மிக வேகமாகவும் இயக்கப்பட்டு வருகின்றன. அவை சரியான முறையில் பராமரிக்கப்படுவதுமில்லை. இது மிகவும் சிக்கலான ஒரு பிரச்சினை என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. ஆனால், அதே வேளையில், பஸ் கட்டணங்கள் தொடர்பான கட்டுப்பாட்டு விதிமுறைகளும் இதில் மிக முக்கியமான ஒரு கூறாக இருந்து வருகின்றது. ஒரு மைல் நீளத்துக்கேனும் அதி வேக நெடுஞ்சாலை ஒன்றைக் கொண்டிராத ஒரேயொரு தென்கிழக்காசிய நாடு இலங்கையாகும் எனக் கூறப்பட்டு வருகின்றது. இது குறித்து ஏற்கனவே பல திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. வாகன நெரிசலைக் குறைப்பதற்கும் நேர விரயத்தையும் செலவுகளையும் குறைத்துக் கொள்வதற்கும் என பெருமளவுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டியுள்ளது.

*துறைமுகங்கள்:* துறைமுகங்களில் சரக்குகளை ஏற்றி இறக்குவதில் இடம்பெற்று வரும் தாமதங்கள் குறித்து நான் கலந்து கொண்ட பல கூட்டங்களில் வலியுறுத்தப்பட்டது. கொழும்பு மற்றும் காலி துறைமுகங்களை (ஓரளவுக்கு தனியார்மயமாக்கலுடன் இணைந்த விதத்தில்) நவீனமயமாக்கி, விரிவுபடுத்தும் திட்டம் இப்பொழுது கலந்தாராய்வுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. சிங்கப்பூர் துறைமுகத்தில் பயன்படுத்தப்படும் நவீன தகவல் தொழில்நுட்பம் காரணமாக கப்பல்கள் அங்கு தங்கி நிற்க வேண்டிய காலம் இப்பொழுது ஒரு நாள் அளவுக்குக் குறைக்கப்பட்டுள்ளது.

### 6. அதிகார வர்க்க கெடுபிடிகள் மற்றும் முடிவெடுப்பதில் ஏற்படும் தாமதங்கள்

சிவப்பு நாடா முறை அதனுடன் இணைந்த தாமதங்கள் மற்றும் இலஞ்சம் என்பவற்றுடன் வரவர அதிகரித்து வருகின்றது என்ற கருத்து வணிகத் துறையைச் சேர்ந்தவர்களிடையே இப்பொழுது நிலவி வருகின்றது. சுங்கம், பொது வசதிகள் மற்றும் நிலம் கையகப்படுதல் என்பவற்றில் காணப்படும் தேவையற்ற ஒழுங்கு விதிகளையும் கட்டுப்பாடுகளையும் மேலும் தளர்த்துவதை உள்ளிட்ட பல சீர்திருத்தங்கள் இப்பொழுது கவனத்தில் எடுக்கப்பட்டு வருகின்றன. உள்ளகக் கணக்கீட்டு, கணக்காய்வு முறைகளும் மேலும் பலப்படுத்தப்படுதல் வேண்டும்.

மேலும், முடிவுகளை எடுக்கும் விடயத்திலும் பெருமளவுக்குக் கால தாமதம் ஏற்பட்டு வருகின்றது. மிகவும் அற்பமான விடயங்களும் கூட படிப்படியாகப் பல அதிகாரிகளிடம் செல்கின்றன. தனது தொழிற்சாலையை விரிவுபடுத்துவதற்காக அரசாங்கத்திடமிருந்து 3 ஏக்கர் நிலத்தை பெற்றுக் கொள்வதற்கு மூன்று வருடத்துக்கும் மேலாக முயன்று வருவதாக ஒரு நிறுவனத்தின் முகாமையாளர் தெரிவித்தார். ஒரு வெளிநாட்டு முதலீட்டாளர் அரச அதிகாரிகளுடன் கடந்த 15 வருட காலமாக தொடர்புகளை கொண்டிருந்த போதிலும் அவருடைய ஒப்பந்தத்துக்கு இன்னமும் அத்தாட்சிப்படுத்தல் கிடைக்கவில்லை. இலங்கை முதலீட்டுச் சபை, அனைத்தையும் ஒரே இடத்தில் வழங்கும் ஒரு மையமாக இன்னமும் உருவாகவில்லை. முடிவெடுப்பதில் ஏற்படும் தாமதங்கள் புதிய முதலீடு, மேலதிக வேலை வாய்ப்பு, அதிகரித்தளவிலான வெளியீடு மற்றும் உயர்மட்ட ஏற்றுமதிகள் என்பவற்றுக்கு இடையூறாக இருந்து வருகின்றது.

அரசாங்கத்தை மீளக் கண்டுபிடிப்பதற்கும், அதிகாரிகளின் கெடுபிடிகளை ஒழிப்பதற்கும் குறிப்பாக, நியுஸிலாந்து, பிரிட்டன் போன்ற நாடுகளில் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிவில் அதிகாரிகளின் ஆயுள் கால பதவியை முடிவுக்குக் கொண்டு வருதல், சேவைத்துறை சார்ந்த திணைக்களங்களை செயற்பாட்டு ஒப்பந்தங்களில் வைத்தல், அவர்களது சம்பளத்தில் 20 சதவீதத்தை செயல்பாட்டின் அடிப்படையில் நிர்ணயித்தல், வரவு செலவு மற்றும் ஆளணி என்பவற்றில் பெருமளவுக்கு தற்றுணிவு அதிகாரத்தை வழங்குதல் என்பவற்றை உள்ளிட்ட மாற்றங்கள் இந் நாடுகளில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் ஜனாதிபதி குமாரதுங்க அவர்களும் நீதி, அரசியல்

யாப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் அவர்களும் பல்வேறு பொது உரைகளின் போதும் செயல்திறனற்ற நிலையையும், ஊழலையும் சகித்துக்கொண்டிருக்க முடியாது என்பதனை தெட்டத் தெளிவான முறையில் எடுத்துக் கூறியுள்ளனர். அதிர்ஷ்டவசமாக, அரசாங்க சேவையிலான சீர்திருத்தம் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலில் இப்பொழுது முக்கிய இடத்தை பிடித்துள்ளது.

## 7. சர்வதேச வர்த்தக தாராளமயமாக்கல்

இறக்குமதி, ஏற்றுமதி உரிமங்கள், அந்நியச் செலாவணி கட்டுப்பாடுகள், கைத்தொழில் உரிமங்கள், தனியார் மயமாக்கல், விலைக் கட்டுப்பாடுகள் மற்றும் சுங்கத் தீர்வைகள் என்பவற்றில் ஏற்கனவே விரிவான அளவிலான பொருளாதார தாராளமயமாக்கல் இடம் பெற்றுள்ளது. இவை அனைத்தும் பாராட்டத்தக்க நடவடிக்கைகளாகும். கடந்த ஒரு தசாப்த காலத்தின்போது இலங்கையின் பொருளாதாரம் சிறந்த முறையில் செயற்பட்டு வந்துள்ளமைக்கு இந்த மாற்றங்களும் ஓரளவுக்குப் பங்களிப்புச் செய்துள்ளன. தாராளமயமாக்கலின் வேகப்போக்கு தொடர்ந்தும் பராமரிக்கப்பட்டு வர வேண்டும். இன்னமும் நிலவி வரும் சில இறக்குமதி கோட்டாக்களும் தீர்வைக் கட்டுப்பாடுகளும் மேலும் தளர்த்தப்பட வேண்டியது அவசியமாகும்.

## முடிவுக் குறிப்புக்கள்

இந்த 07 பொருளாதார பிரச்சினைத் துறைகள் (அதாவது "மோசமான செய்திகள்") மேலே பட்டியலிடப்பட்டுக் காட்டப்பட்டுள்ளன. (இந்தப் பட்டியலுக்கு நிச்சயமாக மேலும் ஏழு விடயங்களை சேர்க்க முடியும்). இது இலங்கையின் பொருளாதாரம் தொடர்பான பெருமளவுக்கு இருண்ட, கலக்கமூட்டும் சித்திரமொன்றை முன்வைக்கின்றது. ஆனால், பல காரணங்களின் நிமித்தம் நாங்கள் இதற்கு நேர்மாறான சாதகமான ஒரு முடிவினை இங்கு எடுத்துக் காட்ட முடியும்.

(அ) இலங்கை புதிய நூற்றாண்டை மிகவும் உறுதியான ஒரு நிலையில் நின்று எதிர்கொள்கின்றது. இதில் மிக முக்கியமானது, திறந்த போட்டிப் பொருளாதாரமொன்றை எடுத்து வருவதில் நாடு காட்டிவரும் அர்ப்பணிப்பாகும். இந்த நிலையில் "சந்தையின் அற்புதம்" செயற்படுவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) துரித அபிவிருத்திக்கு அவசியமான மிக முக்கியமான மூலவளத்தை இலங்கை கொண்டுள்ளது என்பதனை எனது விரிவான பேட்டிகள் மூலம் நான் தெரிந்து கொண்டேன். அதாவது, இலங்கை, அறிவாற்றலும் படிப்பறிவும் பெருமளவுக்கு ஆர்வமும் கொண்ட மக்களை தாராளமாக தன்னகத்தே கொண்டுள்ளது. மனித மூலவளம் என்ற செல்வத்தை நாடு குறைவின்றி தன்னகத்தே கொண்டுள்ளது.

(இ) கப்பல்படுத்துதல், தொலைத் தொடர்பு, நிதி, மாநாட்டு மையங்கள் என்பன தொடர்பான உலக அளவிலான வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும், ஆடைகள் மற்றும் எண்ணெய் சுத்திகரிப்பு போன்ற சில குறிப்பிட்ட கைத்தொழில்களின் ஒரு மையமாக அபிவிருத்தி செய்வதற்கும் இலங்கையின் பூகோள அமைப்பு பெருமளவுக்குப் பொருத்தமானதாக உள்ளது.

(ஈ) மேலே எடுத்துக் காட்டப்பட்ட பிரச்சினைகள் நன்கு அறியப்பட்டவையாகும். இவற்றுக்கென சில தீர்வுகளும் உத்தேசிக்கப்பட்டுள்ளன. கடந்த ஆறு மாத காலத்தின் போது ஏற்கனவே சில தீர்வுகள் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, துறைமுகங்கள் மின்சக்தி நெருக்கடி, கல்வி அமைப்பு, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊழல் என்பன தொடர்பாக விசாரணைகள் மேற்கொண்டு, அறிக்கையிடுவதற்கென ஏற்கனவே பல ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த வருட வரவு செலவுத்திட்டம் தனியார் துறைக்கு சாதகமான பல வரி மாற்றங்களை உள்ளடக்கியிருந்தது. ஏற்கனவே பல ஆக்கபூர்வமான மாற்றங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

(உ) இறுதியாக, தொடர்ந்தும் உற்பத்தித் திறனை விருத்தி செய்து, மிகவும் தீவிரமான முறையில் உலகச் சந்தையில் நுழைவதைத்தவிர உண்மையில் இலங்கைக்கு வேறு மாற்று வழி எதுவுமில்லையென வாதிட முடியும். தினசரிப் பத்திரிகைகள் கீழே தரப்பட்டுள்ளவையைப் போன்ற பல தலைப்புக்களை பெருமளவுக்குக் கொண்டுள்ளன:

- ஷோசலிஸ்டுகள் விட்டுச் சென்ற பின்னர் பல் கேரியாவில் கொண்டாட்டம்.
- விமர்சனங்களுக்கு மத்தியிலும் உலகமயமாக்கல் முன்னோக்கிய பயணத்தை மேற்கொள்கிறது.
- பாகிஸ்தான் பொருளாதாரத்தில் மிகத் தீவிரமான மாற்றங்களை எடுத்துவருவதற்கு ஷெரீப் உறுதி.
- விமானப் பயணத்தை தாராளமயமாக்குவதற்கான தூதுக் குழு.
- வட கொரியா மேலைய உலகை நோக்கித் தனது பொருளாதாரத்தைத் திருப்புகிறது.

தனியார்மயமாக்கல், தாராளமயமாக்கல், தனியார் சந்தைகளில் பெருமளவுக்குத் தங்கியிருத்தல் மற்றும் திறந்த சர்வதேச வர்த்தகம் என்பன தொடர்பாக நாளாந்தம் பெருமளவுக்குக் கட்டுரைகள் வெளியிடப்பட்டு வருகின்றன. உலகெங்கிலும் நிகழ்ந்து வரும் இந்த மாபெரும் மாற்றங்களின் காரணமாக, இலங்கை இடையறாது விரிவடைந்து வரும் போட்டி உலக பொருளாதாரமொன்றுக்குள் தள்ளி விடப்பட்டுள்ளது. அது பொருளாதார பேரலை ஒன்றினால் அள்ளுண்டு செல்லப்படுவது போல் தெரிகிறது. இந்த அலையிலிருந்து நாம் தப்ப முடியாது. பொருளாதாரம் ஒரு பெரும் பாய்ச்சலுக்குத் தன்னை தயார் செய்து கொண்டுள்ளது. இந்த முன்னோக்கிய பாய்ச்சலில் அது நிச்சயமாக வெற்றி அடையும். தலைசிறந்த சுற்றுலாத் தலங்களையும், தொல்பொருள் சின்னங்

( 31 ஆம் பக்கம் பார்க்க)

# உற்பத்தித் திறன் தசாப்தம் தொடர்பான முன்னுரிமைகள்

டீ.எஸ். தோரதெனிய

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் பின்னர், போரினால் அழிவுற்றிருந்த நாடுகளின் பொருளாதாரங்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்கும், புனருத்தாரணம் செய்வதற்குமான உடனடித் தேவை எழுந்திருந்தது. இப்பின்னணியில் உற்பத்தித் திறன் குறித்த நவீன கருதுகோள் தோன்றி, உரிய அங்கீகாரத்தைப் பெற்றது. போரினால் அழிவுற்ற கைத்தொழில்களை மீளமைப்பதற்கு உதவுவதற்கென உருவாக்கப்பட்ட மார்ஷல் திட்டத்தின் அறிமுகத்துடன் 1940 இன் பிற்பகுதியில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் முதலாவது உற்பத்தித் திறன் அலை உருவாகியது. அக்கால கட்டத்தில் அநேகமாக அனைத்து மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் உற்பத்தித் திறன் மையங்கள் ஸ்தாபிக்கப்பட்டன.

ஜப்பான் 1955 இல் ஐ. அமெரிக்காவிலிருந்து தொழில்நுட்ப உதவியையும் நிதி உதவியையும் பெற்று இந்த இயக்கத்தில் சேர்ந்து கொண்டது. இந்நோக்கத்துக்காக "ஜப்பான் உற்பத்தித் திறன் மையம்" உருவாக்கப்பட்டது. இம்மையம் 1961 இல் ஜப்பானிய அரசாங்கத்துடன் இணைந்து, ஆசிய உற்பத்தித் திறன் மையத்தை (APO) ஆரம்பித்து வைத்தது. இந்த மையம் ஆசிய, பசுபிக் நாடுகளில் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதில் முனைப்பான ஒரு பங்கினை வகித்து வருகின்றது. இது ஒரு சிந்தனைக் குழாமாகவும், பிராந்திய ஆலோசனை அமைப்பாகவும், நிறுவனங்களைக் கட்டியெழுப்பும் ஒரு நிறுவனமாகவும் உற்பத்தித் திறன் தொடர்பான தகவல்களை பகிர்ந்தளிக்கும் ஒரு நிலையமாகவும் செயல்பட்டு வருகின்றது.

ஆசிய உற்பத்தித் திறன் மையத்தின் (ஆஉமை) ஸ்தாபிதத்தை உடனடுத்து, அதன் உறுப்பு நாடுகளில் தேசிய உற்பத்தித் திறன் தாபனங்கள் (NPO) ஸ்தாபிக்கப்பட்டன. இலங்கை, ஜப்பானிய அரசாங்கத்துடன் செய்து கொண்ட ஓர் இரு தரப்பு உடன்படிக்கை யின் பிரகாரம் 1966 இல் ஆஉமை இல் சேர்ந்து கொண்டது. கிழக்காசியாவில் ஓர் பொருளாதார வேங்கையாக இருந்து வருவதாகக் கருதப்பட்ட சிங்கப்பூர் 1969 இல் ஆஉமை இல் சேர்ந்தது. உற்பத்தித் திறன் விருத்தியில் இலங்கையை விடவும் வெகுதூரம் முன்னேறிச் சென்றிருந்த இந்தோனேசியா, மலேசியா ஆகிய நாடுகள் முறையே 1968 இலும் 1983 இலும் இம்மையத்தில் சேர்ந்து கொண்டன.

இலங்கை மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தத்தின் பின்னர் ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்துடன் இணைந்து 1968 இல் முகாமை அபிவிருத்தி மற்றும் உற்பத்தித் திறன் நிலையத்தை ஸ்தாபித்தது. இலங்கையில் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கான வசதிகளை வழங்கும் ஒரு நிறுவனமாக இது பங்காற்ற வேண்டியிருந்தது. இதுவே தேசிய வணிக முகாமை நிறுவனத்தின் முன்னோடி நிறுவனமாகும். சாவதேச தொழில் தாபனம் இதன் நிறைவேற்று முகவராக செயல்பட்டது. தற்பொழுது தேசிய வணிக முகாமை நிறுவனம் (தேவமுநி) இலங்கையின் தேசிய உற்பத்தித் திறன் அமைப்பாக கருதப்படுகின்றது. அது ஆசிய உற்பத்தித் திறன் மையத்துடனும், பிராந்தியத்தைச் சேர்ந்த ஏனைய நாடுகளில் இயங்கும் தேசிய உற்பத்தித் திறன் மையங்களுடனும் உறுதியான தொடர்புகளை பராமரித்து வருகின்றது.

தேசிய உற்பத்தித் திறன் தாபனம் ஆஉமை உடன் தொடர்புகளை பராமரித்து வருவதுடன், ஆஉமை யின் நிகழ்ச்சித்திட்டங்களை இந்நாட்டில் செயல்படுத்தும் முகவரகமாகவும் உள்ளது. ஏனைய அனைத்து உறுப்பு நாடுகளிலும் இந்தத் தேசிய தாபனங்கள் உற்பத்தித் திறன் இயக்கங்களை முன்னின்று நடத்தி, அது தொடர்பான திட்டங்களையும் கொள்கைகளையும் வழிகாட்டு நெறிமுறைகளையும் வழங்கி வந்தன.

காலப்போக்கில் தேசிய வணிக முகாமை நிறுவனத்தின் நடவடிக்கைகளில் முகாமைத்துவப் பயிற்சியும், கம்ப்யூட்டர் கல்வியும் முதன்மை ஸ்தானத்தைப் பெற்றுக் கொண்டன. அந்த நிலையில், உற்பத்தித் திறன் என்ற தலைப்பு ஓரிரு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் எப்போதாவது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் ஒரு விடயமாக பின்தள்ளப்பட்டுவிட்டது. இந்நிறுவனம் இலங்கையின் தேசிய உற்பத்தித் திறன் அமைப்பு என்ற முறையில் நாட்டின் உற்பத்தித் திறன் விருத்திக்கு அளித்து வந்துள்ள பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் இருக்கவில்லை. இதன் விளைவாக, ஆஉமை, தேவமுநி ஐ வளர்ச்சி குன்றிய ஒரு தேசிய உற்பத்தித் திறன் அமைப்பு எனக் கருதியதுடன், இந்நிறுவனத்தை சரியான பாதையில் இட்டுச் செல்லுவதற்கு உதவும் பொருட்டு நிபுணர்களை அனுப்புவதற்கு உத்தேசித்தது.

## இலங்கையின் உற்பத்தித் திறன் இயக்கம்

தேவமுநி இலங்கையின் தேசிய உற்பத்தித் திறன் அமைப்பு என்ற முறையில் 1993 இல் மூன்று நிகழ்ச்சித் திட்டங்களை துவக்கி வைத்ததன் மூலம் இலங்கையின் உற்பத்தித் திறன் இயக்கத்தை ஆரம்பித்து வைத்தது. ஆசிய உற்பத்தித் திறன் மையத்தின் செயலாளர் நாயகம், இலங்கையில் உற்பத்தித் திறன் இயக்கமொன்றை ஆரம்பித்து வைப்பதற்கான சாத்தியபாட்டைக் கண்டறியும் பொருட்டு 1993 இன் துவக்கத்தில் இலங்கைக்கு ஒரு தூதுக்குழுவுடன் விஜயம் செய்திருந்தார். இவ்விஜயத்தினை அடுத்து இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

கைத்தொழில் துறைக்கான தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் வழங்கும் திட்டம், பாடசாலைப்

பிள்ளைகளுக்கான உற்பத்தித் திறன் விழிப்புணர்வு மற்று திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், தேசிய உற்பத்தித் திறன் உடன்பாடு என்பன துவக்கி வைக்கப்பட்ட மூன்று நிகழ்ச்சித் திட்டங்களுமாகும். இந்நிகழ்ச்சித்திட்டங்கள் 1993, 1994, 1995 மற்றும் 1996 ஆகிய நான்கு வருடங்களிலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பட்டு வந்தன. பெருந்தொகையான உற்பத்தித் திறன் விழிப்புணர்வு மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள், போட்டிகள், மாதிரிக் கம்பெனிகள் நிகழ்ச்சித் திட்டம் என்பவற்றை இந்நிகழ்ச்சிகள் உள்ளடக்கியிருந்தன. மாதிரி கம்பெனிகள் திட்டம் இப்பொழுது மாநகர சபைகளையும் உள்ளடக்கி சுமார் 20 நிறுவனங்கள் வரையில் விரிவாக்கப் பட்டுள்ளது. இத்திட்டம் செயற் படுத்தப்பட்ட ஆடைத் தொழிற்சாலை களில் முன்னர் வேரூன்றியிருந்த "ஆடைத் தொழில் கலாச்சாரத்தை" மாற்றியமைப்பதிலும், தேயிலைத் தொழிற்சாலைகளில் காலனித்துவ பாரம்பரியத்தை மாற்றியமைப்பதிலும் இது வெற்றி கண்டுள்ளது.

இலங்கையில் உற்பத்தித் திறன் விருத்திக்கான உபாயங்களை வகுப்பதற் கென 1995 இன் தொடக்கத்தில் ஆஉமை த்தின் அனுசரணையுடன் வட்ட மேசை மாநாடொன்று நடாத்தப்பட்டது. நாட்டின் உற்பத்தித் திறன் இயக்கத்தில் இது பிறிதொரு மைல் கல்லாகும்.

1994 டிசம்பரில் இடம்பெற்ற இரண்டாவது தேசிய உற்பத்தித் திறன் மாநாட்டில் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் 1996 ஆம் வருடத்தை தேசிய உற்பத்தித் திறன் வருடமாக அரசாங்கத்தின் சார்பில் பிரகடனம் செய்தார். உற்பத்தித் திறன் மேம்பாட்டுக்கு அரசாங்கம், கைத்தொழில்துறை, கம்பெனிகள், கைத்தொழில் கழகங்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் என்பன கவனத்தல் எடுக்க வேண்டியுள்ள துறைகளை "உற்பத்தித் திறன் வருடத்துக்கான ஆவணம்" என்ற பிரசுரம் 1995 இன் ஆரம்பத்தில் விரிவாக எடுத்து விளக்கியது. இப்பொழுது அரசாங்கம் 1996 தொடக்கம் 2006 வரையுள்ள காலப் பிரிவை "உற்பத்தித் திறன் தசாப்தம்" எனப் பிரகடனம் செய்துள்ளது. உற்பத்தித திறன் விருத்தி தொடர்பான எமது முன்னுரிமைகளை வரையறை செய்துகொள்வதும், குறித்துரைக்கப்பட்ட ஒரு காலப் பிரிவுக்கு உற்பத்தித் திறன் தொடர்பான சுலோகங்களையும் கருப்பொருள்களையும் வைத்திருப் பதனையும் எடுத்து விள்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

உற்பத்தித் திறன் இயக்கம் 1993 இல் துவக்கப்படுவதற்கு முன்னர் "உற்பத்தித் திறன்" என்ற பதம் அறிவுசார் கலந்துரையாடல்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்ட ஒரு விடயமாக இருந்து வந்தது. உற்பத்தித் திறன் தொடர்பான கருதுகோள்களுக்கும் நடைமுறைகளுக்கும் அழுத்தம் கொடுக்காது சில இடங்களில் தெரிந்தோ தெரியாமலோ உற்பத்தித் திறன் நடைமுறைகள் பின்பற்றப்பட்டு வந்திருக்கலாம். தேவமுநி 1993 தொடக்கம் உற்பத்தித் திறன் நிகழ்ச்சித் திட்டங்கள் பலவற்றை வடிவமைத்து, திட்டமிட்டு, மேற்கொண்டு வந்துள்ளது. இவற்றுக்காக பாடசாலைப் பிள்ளைகள் தொடக்கம் முகாமையாளர்கள், தொழில்சார் வல்லுநர்கள் வரையிலான பரந்த பிரிவினரிடையே உற்பத்தித் திறன் தொடர்பான விழிப்புணர்வை அது தூண்டிவிட்டது. நிறுவன மட்டத்தில் உற்பத்தித் திறனை நடைமுறைப் படுத்துவதற்கும், அதனை அளவிடு வதற்கும், நிறுவனங்களின் போட்டித் திறனை விருத்தி செய்வதற்காக நிறுவனங்களுக்கிடையிலான ஒப்பீடுகளை மேற்கொள்வதற்கும் தேவமுநி முன்முயற்சியை எடுத்தது. தேவமுநி 1993 தொடக்கம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பல்வகைப்பட்ட உற்பத்தித் திறன் சார் நடவடிக்கைகளை கையாண்டு வந்த போதிலும், இந்நடவடிக்கைகள் ஒரு முறையான ஒழுங்கில் மேற்கொள்ளப்படவில்லை. இவ் வேலைகளை நான்கு ஆலோசகர்கள், வரையறுக்கப்பட்ட வசதிகள், மூலவளங்கள் என்பவற்றுக்கு மத்தியிலே மேற்கொண்டு வந்தனர்.

தேசிய உற்பத்தித் திறன் வருடம் பிரகடனப்படுத்தப்பட்டமையானது இலங்கையின் உற்பத்தித் திறன் இயக்கத்துக்கு பெருமளவுக்கு அவசியமாக இருந்த அரசாங்க ஆதரவை அதாவது, தேசிய மட்டத்திலான அங்கீகாரத்தை பெற்றுக் கொடுத்தது. உற்பத்தித் திறன் மேம்பாட்டுக்கென அரசாங்கம் நிதிகளை வழங்கியதுடன், உற்பத்தித் திறன் தசாப்தம் முழுவதிலும் இவ்வுதவி தொடரும். இவ்விதம் அரசாங்க உதவி கிடைக்கும் சந்தர்ப்பத்தில், உற்பத்தித் திறன் இயக்கம் நீடித்து நிலைப் பதற்கான வாய்ப்பு கிடைக்கின்றது. கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் செயலாளரின் தலைமையில் உற்பத்தித் திறன் வழிகாட்டுக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. உற்பத்தித் திறன் விருத்தியுடன் சம்பந்தப்பட்டுள்ள ஏனைய அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்கள் என்பவற்றுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள் வதற்கும், ஒத்த நிறுவனங்களின் உற்பத்தித் திறன் விருத்தி பணிகளுக்கு உதவுவதற்குமென இக்குழு அமைக்கப் பட்டுள்ளது. சுருக்கமாக சொல்வ தானால், பாரியளவிலான உற்பத்தித் திறன் விழிப்புணர்வு, மேம்பாட்டு இயக்கமொன்று துவக்கி வைக்கப்பட் டுள்ளது.

உற்பத்தித் திறன் என்பது 1996 இல் பெருமளவுக்கு கலந்துரையாடப் பட்ட விடயங்களில் ஒன்றாக இருந்து வந்துள்ளது. தேவமுநி தொடர்ந்தும் அதன் வழமையான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி வந்தது. இறுதி நிகழ்ச்சியாக மேதகு ஜனாதிபதி அவர்களின் அனுசரணையின் கீழ் தேசிய உற்பத்தித் திறன் மாநாடு தொடர்ச்சியாக நான்காவது வருடமாக நடைபெற்றது.

### அரசாங்க ஆதரவு

இலங்கையைப் போன்ற வளர்முக நாடொன்றின் உற்பத்தித் திறன் விருத்தி முயற்சிக்கு தேசிய மட்டத்திலும் கைத்தொழில் மட்டத்திலும் நெறிப்படுத்தப்பட்ட ஆதரவு, வழி காட்டுதல், கொள்கைகள் மற்றும் ஊக்குவிப்புக்கள் என்பன அவசிய மாகும். கொள்கை வகுப்போர் உற்பத்தித் திறன் விருத்தி தொடர்பாக ஈடுபாட்டினையும் அர்ப்பணிப்பையும் காட்ட வேண்டும். ஊழியர்கள், தொழிலாளர்கள் மற்றும் தொழிற் சங்கங்கள் ஆகிய தரப்பினரின் கூட்டு முயற்சிகளும் பங்கேற்பும் இதற்கு அவசியமாகும். இதற்கென நிறுவனங்களில் தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டு கட்டியெழுப்பப் படுவதுடன், முகாமை முறைகளும் விருத்தி செய்யப்படுதல் அவசியமாகும். தொழிலாளர் முகாமை ஒத்துழைப்பு, தொழிலாளர் தூண்டுதல், தொழிலாளர் பயிற்சியை மேம்படுத்துதல், மூத்தரப்பு ஒத்துழைப்பு மற்றும் சாதகமான

வேலைச் சூழல் என்பன இதற்கான ஏனைய முன்நிபந்தனைகளாகும்.

அரசாங்கம், தொழிற் சங்கங்கள், வேலை கொள்வோர், கல்வித்துறை என்பவற்றின் பிரதிநிதிகளின் பங்கேற்புடன் 1995 இன் ஆரம்பத்தில் நடாத்தப்பட்ட வட்டமேசை மாநாடு தேசிய உற்பத்தித் திறன் கொள்கை யொன்றை வகுப்பதற்கான ஒரு அரங்கினை வழங்கியது. மேலும், உற்பத்தித் திறன் விருத்தியில் அரசாங்கம், வேலை கொள்வோர், தொழிலாளர் மற்றும் தொழிற்சங்கங்கள் ஆகிய பிரிவுகள் வகிக்க வேண்டியிருக்கும் பங்கினை நிர்ணயித்துக் கொள்வதற்கான ஒரு வாய்ப்பையும் அது அளித்தது.

தற்பொழுது இடம்பெற்று வரும் நிறுவனங்களின் மீளமைப்பு, முதலீடுகள் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி என்பன உற்பத்தித் திறன் விருத்தியுடன் இணைந்த விதத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். இந் நடவடிக்கைகள் யாவும், மூலவளங்களை ஒதுக்குவது தொடக்கம் அமுலாக்கல் கட்டம் வரையில் முழுவதும் தாக்கமான விதத்திலும் செயல் திறனுடனும் மேற்கொள்ளப்படுவது அவசியமாகும்.

இன்றைய தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் என்பவற்றுடன் பொருந்திச் செல்லக்கூடிய விதத்தில் அரசாங்கம் உற்பத்தித் திறன் இயக்கத்தின் உள்ளடக்கத்தையும் திசைவழியையும் நிர்ணயித்தல் வேண்டும். அது நாடு தழுவிய உற்பத்தித் திறன் அணுகுமுறை யொன்றாக இருப்பது அவசியமாகும். ஒவ்வொரு நாட்டினதும் கைத்தொழில் மயமாக்கல் மட்டத்துக்கு ஏற்ப உற்பத்தித் திறன் தொடர்பான முன்னுரிமைகள் மாற்றமடைகின்றன. ஜப்பான், சிங்கப்பூர் மற்றும் தென் கொரியா போன்ற நாடுகளின் உற்பத்தித் திறன் தொடர்பான முக்கிய கவன மையம் இப்பொழுது மாற்றமடைந்துள்ளது. ஜப்பான் இப்பொழுது "சமூக உற்பத்தித் திறன்" என்ற ஒரு புதிய அணுகுமுறையை பின்பற்றி வருகிறது.

உற்பத்தித் திறன் இயக்கத்தின் வெற்றிக்கு அரசாங்கத்தின் தலைமைத்துவமும் அர்ப்பணிப்பும் ஒரு முன்நிபந்தனையாகும். உற்பத்தித் திறன் விருத்தி செய்யப்பட வேண்டிய முறை, அது எடுக்க வேண்டிய திசைவழி என்பன குறித்து அதனுடன் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரிடையேயும் ஒரு கருத்தொற்றுமை உருவாக வேண்டும். பணவீக்கத்தைத் தடுத்து நிறுத்துதல், பேரண்டப் பொருளாதார கொள்கை சீர்திருத்தங்கள், பொதுத் துறையின் செயல்திறனை விருத்தி செய்தல், ஊழல் மற்றும் முறைகேடுகளை ஒழித்தல், கல்வியையும் திறன்களையும் மேம்படுத்துதல், தொழில்நுட்ப உபயோகத்தைத் தூண்டுதல், சூழல் பாதுகாப்பு, சமூக, பௌதீக உள்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல், மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கான அடிப்படை வசதிகளை வழங்குதல் என்பன உற்பத்தித் திறன் விருத்தி தொடர்பாக அரசாங்கம் தலையிட வேண்டிய துறைகளாக உள்ளன.

எந்த ஒரு அரசாங்கமும் தனது மக்களுக்கு இந்த வசதிகளை வழங்கி வருகின்றது என ஒருவர் வாதிட முடியும். வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்ற காரணத்துக்காகவோ அல்லது சில சமூகக் குழுக்களைத் திருப்திப்படுத்துவதற்காகவோ வசதிகள் வழங்கப்படக்கூடாது. உற்பத்தித் திறன் விருத்தி நிகழ்வுப்போக்கில் இலஞ்சம், ஊழல், கையாடல் அல்லது செல்வாக்கை வளர்த்துக் கொள்ளல் என்பவற்றுக்கு இடமில்லை. வசதிகளை வழங்குவதில், அனைத்து பொருளாதார நடவடிக்கைத் துறைகளிலும் உற்பத்தித் திறனை விருத்தி செய்வது வழிகாட்டுக் கோட்பாடாக அமைய வேண்டும்.

இலங்கை, முதலில் உற்பத்தித் திறனை விருத்தி செய்து கொள்ள வேண்டிய முன்னுரிமைத் துறைகள் மற்றும் கைத்தொழில்கள் என்பவற்றை நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும். அத்துடன் நாடு ஒப்பீட்டு அனுகூலத்தையும் சிறப்புத் தேர்ச்சியையும் கொண்டுள்ள பண்டங்களையும் சேவைகளையும் அது அடையாளங் காண வேண்டும். கைத்தொழில், விவசாயம், சேவைகள் மற்றும் முறைசாராத் துறை ஆகிய அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கிய விதத்திலான தேசிய உற்பத்தித் திறன் கொள்கையொன்றை அரசாங்கம் வகுத்துக் கொள்ள வேண்டும். மேலும், நாட்டின் அபிவிருத்திக் கட்டம் மற்றும் ஏனைய குணாம்சங்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தித் திறன் விருத்தித் திட்டமொன்றும் உருவாக்கிக் கொள்ளப்படுதல் வேண்டும். தேசிய செல்வம், மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் நாட்டின் போட்டித் திறன் என்பவற்றை அபிவிருத்தி செய்து கொள்ளும் பொருட்டு அரசாங்கம் ஒருங்கிணைந்த உற்பத்தித் திறன் முயற்சியொன்றை மேம்படுத்த வேண்டியுள்ளது.

விவசாயம், கைத்தொழில், கடற்றொழில், காட்டுத்தொழில், கால்நடை வளர்ப்பு, பெருந்தோட்டத் துறை, வங்கித்தொழில், போக்குவரத்து, சுகாதாரம், விருந்தோம்பல், வர்த்தகம், அரசாங்க பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் மற்றும் ஏனைய சேவைகள் என்பவற்றில் செயல்படும் உற்பத்தித் திறன் முன்முயற்சியாளர்கள் தமது உற்பத்தித்திறன் கொள்கைகள், திட்டங்கள், முன்னுரிமைகள் மற்றும் எடுத்து வர விரும்பும் விருத்தி நிலை என்பவற்றை இனங்கண்டு கொள்ள வேண்டும். இவை தேசிய கொள்கையாக ஒருங்கிணைக்கப்பட முடியும். தேசிய உற்பத்தித் திறன் தாபனத்தில் அமைக்கப்படும் உற்பத்தித் திறன் கண்காணிப்பு அமைப்பினால் அல்லது உற்பத்தித் திறன் செயலகத்தினால் இதனை எளிதில் மேற்கொள்ளலாம். உற்பத்தித் திறன் துறையில் துறைகளுக்கிடையிலும் அமைச்சுக்களுக்கிடையிலும், குழுக்களுக் கிடையிலும் நிறுவனங்களுக்கிடையிலும் ஒத்துழைப்பு அவசியமாகும்.

### உற்பத்தித் திறன் முன்னுரிமைகள்

போரினால் முற்றிலும் நாசமாக்கப்பட்ட மேற்கைரோப்பிய நாடுகள் மற்றும் ஜப்பான் ஆகியவற்றின் பொருளாதாரங்கள், உற்பத்தித் திறன் கருதுகோள்கள் மற்றும் நடைமுறைகள் என்பவற்றைப் பயன்படுத்தி இரண்டாவது உலகப்போருக்குப் பின்னர் புனரமைத்து, புனருத்தாரணம் செய்யப்பட்டன என்பது யாவருமறிந்த ஓர் உண்மையாகும். அனைத்துப் பொருளாதார தொழில் முயற்சிகளிலும் உற்பத்தித் திறனை விருத்தி செய்வது என்பதே அக்கால கட்டத்தின் முக்கிய சுலோகமாக இருந்தது. வடக்கில் போரினால் அழிக்கப்பட்ட பொருளாதாரத்தை மீளமைப்புச் செய்யும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் உற்பத்தித் திறன் தொடர்பான கருதுகோள்களும் நுட்பங்களும் ஒரு முக்கிய பங்கினை வகிக்க முடியும். அரசாங்கம் இந்த

விடயத்தில் ஆழ்ந்த கவனம் செலுத்த வேண்டியுள்ளது. உற்பத்தித் திறன் தசாப்தத்தில் எமது சொந்த முன்னுரிமைகளை நாங்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும். கீழே தரப்பட்டுள்ள துறைகள் முன்னுரிமைத் துறைகளாக நமது கவனத்தை வேண்டி நிற்கின்றன. இது எமது நாட்டுக்கேயுரித்தான அணுகு முறையாக இருந்து வருவதுடன், எமது இன்றைய உற்பத்தித் திறன் தொடர்பான தேவைகளுக்கு பொருந்துகிறது.

### நிறுவன அபிவிருத்தி

கைத்தொழில்களுக்கும் நிறுவனங்களுக்கும் உற்பத்தித் திறன் விருத்தி உதவியை அமுல் செய்வதற்கான முதல்படி இலங்கையின் தேசிய உற்பத்தித் திறன் தாபனத்தை பலப்படுத்தி அபிவிருத்தி செய்வதாகும்.

நிறுவன அபிவிருத்தியும் வலைப் பின்னல் அமைப்பும்

(அ) தேசிய உற்பத்தித் திறன் மையத்தில் நுண்மட்ட அபிவிருத்தி

(ஆ) ஏனைய பல்வேறு நிறுவனங்களில் உற்பத்தித் திறன் பிரிவுகளை உருவாக்குவதன் மூலம் தேசிய மட்டத்தில் அபிவிருத்தி.

(இ) சர்வதேச மட்டத்தில் ஏனைய தேஉமை களுடனும் ஏனைய சர்வதேச முகவரகங்களுடனும் தொடர்புகள்

உற்பத்தித் திறன் மேம்பாட்டுக்கும் உயர்வுக்குமென தேவமுநி ல் முழுமையான உற்பத்தித் திறன் மையமொன்றை ஸ்தாபிக்கும் வகையில் தேவமுநி சட்டமூலம் 1991 இல் திருத்தப்பட்டது. ஆனால், . இது வரையில் தேவமுநி ல் உற்பத்தித் திறன் பிரிவொன்று மட்டுமே ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதற்கென அதிக அளவில் ஆட்சேர்ப்புச் செய்து, மனித வலுவினைப் பலப்படுத்திக்கொள்வது அவசியமாகும். தேஉமை ஐப் பலப்படுத்துவதில் உற்பத்தித் திறன் நிபுணர்கள் மற்றும் துணை ஆளணியினரைக் கொண்ட ஒரு குழுவும் ஏனைய வசதிகளும் வழங்கப்பட வேண்டும். இம்மையம் பயிற்சி, ஆலோசனை போன்ற உற்பத்தித் திறன் சேவைகளை வழங்குவதுடன், உற்பத்தித் திறன் குறித்த தரவு அடித்தளமொன்றையும், ஏனைய எழுத்தாக்கங்களையும் உருவாக்க வேண்டியுள்ளது.

### தேசிய உற்பத்தித் திறன் தாபனங்கள் (தேஉதா கள்)

ஆசிய உற்பத்தித் திறன் தாபனத்தின் உறுப்பு நாடுகளின் அனைத்து தேஉதா களும் தமது தாபனங்களின் பெயர்களுடன் 'உற்பத்தித் திறன்' என்ற சொல்லைப் பயன்படுத்தி வருகின்றன. ஜப்பானிய உற்பத்தித் திறன் மையம், இந்தியாவின் தேசிய உற்பத்தித் திறன் கவுன்சில், ஈரானிய தேசிய உற்பத்தித் திறன் தாபனம், சிங்கப்பூர் உற்பத்தித் திறன் மற்றும் கட்டளைகள் சபை, மலேசிய தேசிய உற்பத்தித் திறன் கூட்டுத்தாபனம், கொரியக் குடியரசின் கொரிய உற்பத்தித் திறன் மையம், சீன உற்பத்தித் திறன் மையம், ஹொங்கொங் உற்பத்தித் திறன் மையம், பங்களாதேஷ் தேசிய உற்பத்தித் திறன் தாபனம் என்பன இதற்கான சில உதாரணங்களாகும். தாய்லாந்தின் முகாமை அபிவிருத்தி மற்றும் உற்பத்தித் திறன் மையம் அந்நாட்டு கைத்தொழில் மேம்பாட்டு அமைச்சின் கீழ் செயற்பட்டு வருகிறது. இப்பொழுது அவர்கள் தாய்லாந்து உற்பத்தித் திறன் நிறுவனத்தை ஸ்தாபித்துள்ளார்கள். பிஜியில் பிஜி தேசிய உற்பத்தித் திறன் சபையும் பிஜி தேசிய பயிற்சிப் பேரவையும் கூட்டாக செயற்பட்டு வருகின்றன. நேபாளம் அதன் பொருளாதார சேவை மையத்துக்கு தேசிய உற்பத்தித் திறன் மற்றும் பொருளாதார அபிவிருத்தி மையம் என மறுபெயரிட்டுள்ளது.

இலங்கை, பாகிஸ்தான் மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளில் உற்பத்தித் திறன் விருத்தி தொடர்பான பணிகள் அவற்றுக்கென பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்டிருக்கும் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டு வரவில்லை. இப்பணிகளை இலங்கையில் தேவமுநியும், பாகிஸ்தானில் கைத்தொழில் தொழில்நுட்ப உதவி கூட்டுத்தாபனமும், வியட்நாமில் தர நியமங்கள் மற்றும் தரம் தொடர்பான பணியகமும் மேற்கொண்டு வருகின்றன.

தேவமுநி அதன் தொடக்கத்திலிருந்தே நிறுவனங்கள் கைத்தொழில், பொறியியல் கருவிகள் மற்றும் நுட்பங்கள் என்பவற்றுக் கூடாக தமது செயல்பாடுகளை சுமுகமாக மேற்கொள்வதற்கு உதவி வந்துள்ளது என்பது உண்மைதான். மனித வள மேம்பாடு, பொது முகாமை மற்றும் தகவல் முறைகள் என்பவற்றுக்கும் அது உதவியுள்ளது. ஆனால், இத்தகைய உதவிகள் நுண் மட்டத்திலும் நிறுவன மட்டத்திலும் மட்டுமே வழங்கப்பட்டு வந்தன. இது கைத்தொழில் துறையிலும் தேசிய மட்டத்திலான உற்பத்தித் திறன் விருத்தியிலும் அதிகளவில் தாக்கத்தை எடுத்து வரவில்லை. உற்பத்தித் திறன் விருத்திக்கான அதன் பங்களிப்பு அடிப்படையில் சிறிதளவிலேயே இருந்து வந்தது.

### உற்பத்தித் திறன் செயலகம்

உற்பத்தித் திறன் விருத்தி தொடர்பான பணிகளுக்கு ஆதரவளிப்பதற்கும் அவற்றை முன்னெடுத்துச் செல்வதற்குமென உற்பத்தித் திறன் கண்காணிப்பு முகவரகமொன்று ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். ஏனைய துறைகள், அமைச்சுக்கள் மற்றும் உற்பத்தித் திறன் இயக்கத்துக்கு நேரடியாக உதவும் முகவரகங்களுடன் அது தொடர்புகளை உருவாக்கிக் கொள்வதும் அவசியமாகும். இதற்கான மிகச் சிறந்த அமைப்பு இலங்கை தேசிய உற்பத்தித் திறன் தாபனமாகும். இது உற்பத்தித் திறன் இயக்கத்தின் செயலகமாகவும், நடவடிக்கைகளின் நடு மையமாகவும் செயற்பட முடியும்.

சிங்கப்பூரில் உற்பத்தித் திறன் விருத்தி இயக்கத்தில் 1992 தொடக்கம் தனியார் துறை முன்னணிப் பங்கினை வகித்து வந்துள்ளது. சிங்கப்பூர் முதலாளிமார் சம்மேளனம், சிங்கப்பூர் உற்பத்தியாளர் கழகம் மற்றும் சிங்கப்பூர் சில்லறை வியாபாரிகள் கழகம் என்பன வெவ்வேறு சந்தர்ப்பங்களில் இந்த இயக்கத்தை முன்னெடுத்துச் சென்றுள்ளன.

### உற்பத்தித் திறனில் விழிப்புணர்வை எடுத்து வருவதும் மேம்பாடும்

உற்பத்தித் திறனில் விழிப்புணர்வை உருவாக்குவதும் உற்பத்தித் திறன் மேம்பாடும் உற்பத்தித் திறன் தசாப்தம் முழுவதிலும் அதற்கு அப்பாலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும். 1993 இல் தேவமுநி ஆல் துவக்கி வைக்கப்பட்ட உற்பத்தித் திறன் இயக்கத்தின் முக்கிய குறிக்கோள், உற்பத்தித் திறன் தொடர

பான விழிப்புணர்வைத் தூண்டுவதாகும். இந்த முயற்சியில் நாங்கள் இப்பொழுது ஆரம்ப கட்டத்திலேயே இருந்து வருகின்றோம். எனவே, இந்த நிலையில், முகாமையாளர்கள், தொழிலாளர் போன்றோரிடையே இது தொடர்பான விழிப்புணர்வை உருவாக்குவதற்கு முழு அளவிலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. சமூகத்தில் வாழும் அனைத்துத் தரப்பினரும் "உற்பத்தித் திறன்" என்பதன் பொருளையும் முக்கியத்துவத்தையும் சரிவரப் புரிந்து கொள்ளவேண்டும். உற்பத்தித் திறன் குறித்த கருதுகோள்கள், நடைமுறைகள் மற்றும் நுட்பங்கள் என்பவற்றை மக்களிடையே பிரபல்யப்படுத்துதல், வேலை தொடர்பான சரியான அணுகுமுறைகளையும் உற்பத்தித் திறன் பழக்கங்களையும் ஏற்படுத்துதல், உற்பத்தித் திறன் இயக்கத்தில் ஒவ்வொருவரும் வகிக்க வேண்டியிருக்கும் பங்கை நிர்ணயித்தல் மற்றும் உற்பத்தித் திறன் என்பதனை ஒரு வாழ்க்கை முறையாக மாற்றுதல் என்பன எம்முன் உள்ள மிக முக்கியமான பணிகளாகும். சிங்கப்பூரில் 1981 தொடக்கம் 1986 வரையில் ஐந்து வருடங்களாக இக்கட்டம் இடம் பெற்றது.

இப்பணிகளில் பெரும்பாலானவை தொடக்கத்தில் அற்பமானவையாகத் தோன்றலாம்; ஆனால், ஒட்டுமொத்தமாக நோக்கும் பொழுது அவற்றின் ஒன்றிணைந்த தாக்கம் கணிசமான அளவில் இருந்துவர முடியும். இது ஊழியர் படையின் ஆக்கத் திறன் மற்றும் புத்தாக்க விருப்பு என்பவற்றை பயன்படுத்திக் கொள்வதற்கு உதவும்; அத்துடன் அது உற்பத்தித் திறன் கொண்ட வேலைக் கலாசாரமொன்றினை உருவாக்குவதுடன், இரு வழி தொடர்புமுறைக்கும் கூட்டுப் பணிக்கும் உற்சாகமளிக்கும். தொழிலாளர்களிடையே விருத்தியை நோக்கிய செயல் தூண்டலுக்கும் வழிவகுக்கும்.

தேசிய உற்பத்தித் திறன் வருடத்தின் பொழுது உற்பத்தித் திறன் தொடர்பாக விழிப்புணர்வை தூண்டுவதற்கு ஓர் இயக்கம் மேற்கொள்ளப்பட்டு வந்தது உண்மையே. ஆனால், சில அதிகாரிகள் கருதுவது போல, நாங்கள் அந்தக் கட்டத்தை தாண்டி வந்து விட்டோம் என்பது இதன் பொருளல்ல; உற்பத்தித் திறன் இயக்கம் தொடர்ந்து இருந்து வரும் வரையில் விழிப்புணர்வை உருவாக்க வேண்டிய தேவையும் நிலைத்திருக்கும். புதிய கருப்பொருட்கள், சுலோகங்கள் என்பன முன்வைக்கப் படும்பொழுது புதிய நிகழ்ச்சித்திட்டங்கள் உருவாக்கப்படும் பொழுது, விழிப்புணர்வை தூண்டும் பணி ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது.

## ஆர்வத்தை நிலையாக வைத்திருத்தல்

மாதிரிக் கம்பெனிகள் மற்றும் தேசிய உற்பத்தித் திறன் விருது பெற்றவர்கள் என்போரிடையே ஆர்வத்தினை தொடர்ந்து நிலைத்திருக்கச் செய்வது மற்றொரு முக்கிய விடயமாகும். நிறுவனங்கள், குழுக்கள் மற்றும் தனி நபர்கள் என்போரின் உற்பத்தித் திறன் முயற்சிகளுக்கு இப்பொழுது உரிய அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதில் முனைப்பான பங்கினை வகித்து வரக் கூடிய பெருந்தொகையான நிறுவனங்களையும் தனி நபர்களையும் நாம் கொண்டுள்ளோம். இந்த இயக்கத்தில் பங்கேற்பது குறித்து அவர்கள் பெருமிதமடைய முடியும். தமது அறிவையும் நிபுணத்துவத்தையும் அவர்கள் மற்றவர்களுடன் பங்கிட்டுக் கொள்வதும், உற்பத்தித் திறன் பழக்கங்களை வளர்த்தெடுப்பதற்கு உதவுவதும் பயன் உள்ளதாக அமையும்.

## பாடசாலைப் பிள்ளைகள்

உற்பத்தித் திறன் கருதுகோள்கள், நடைமுறைகள் மற்றும் நுட்பங்கள் என்பன பாடசாலை மற்றும் பல்கலைக் கழக பாடத்திட்டங்களில் உள்ளடக்கப் படுதல் வேண்டும். கல்வி அமைச்சும் உயர் கல்வி அமைச்சும் பாடசாலை மட்டத்தில் விதந்துரைக்கப்படும் பாட நூல்களில் உற்பத்தித் திறன் தொடர்பான கருதுகோள்களை அறிமுகப்படுத்த முடியும். உற்பத்தித் திறன் நடைமுறைகள் பாடசாலைகளுக்குள் எடுத்து வரப்படலாம். உதாரணமாக, பாடசாலைக் கட்டங்கள், காணி, தளபாடங்கள், உபகரணங்கள், இலவசப் பாடநூல்கள், மாணவர்களின் நேரம் மற்றும் முயற்சி போன்ற மூல வளங்களை செயல்திறனுடன் கூடிய விதத்தில் பயன்படுத்திக் கொள்ளும் பழக்கங்களை மாணவர்களிடையே ஏற்படுத்தலாம். இதற்கூடாக, மாணவர்கள் உற்பத்தித் திறன் பழக்கங்கள் கைவரப்பெற்று, அதனை ஒரு வாழ்க்கை முறையாக மாற்றிக் கொள்வதற்கு ஒரு வாய்ப்புக் கிட்டுகிறது. இது எமது பட்டதாரி மாணவர்களை பயனுள்ள ஒரு இளைஞர் தொகுதியாக ஆக்குவதுடன், எமது தொழிற்சாலைகளும் அலுவலகங்களும் தலைசிறந்த ஊழியர் படை ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கும் வகை செய்யும்.

தேவமுநி பாடசாலை மாணவர்களுக்கென உற்பத்தித் திறன் புதிர் போட்டி (1985), உற்பத்தித் திறன் சுவரொட்டிப் போட்டி (1996) போன்றவற்றை நடத்தியது. இது தவிர கருத்தரங்குகள், பயிலரங்குகள், மாநாடுகள், பாடசாலைப் பிள்ளைகளுக்கிடையிலான போட்டிகள், கலந்துரையாடல்கள், வானொலி உரைகள், கட்டுரைகள் என்பன உற்பத்தித் திறன் குறித்த விழிப்புணர்வை தூண்டுவதில் மிக முக்கிய பங்கினை ஆற்றி வருகின்றன. மேலும், விளம்பரம், சுவரொட்டிகள், கார்டூன்கள், வீடியோ தயாரிப்புக்கள், விவரணச் சித்திரங்கள், வானொலி விளம்பரங்கள், பாடல்கள் என்பனவும் முக்கிய பங்கு வகித்து வருகின்றன. உற்பத்தித் திறன் குறித்த விழிப்புணர்வைத் தூண்டும் பாத யாத்திரைகள் தேசிய மட்டத்திலும் நிறுவன மட்டத்திலும் உற்பத்தித் திறனை மேம்படுத்தும்.

## மனிதவள ஆற்றலை மேம்படுத்தல்

பல்வேறு மட்டடங்களில் உற்பத்தித் திறன் பயிற்றுனர்கள் மற்றும் ஏற்பாட்டாளர்கள் என்போரை அபிவிருத்தி செய்தல், நிறுவன மட்டத்தில் உற்பத்தித் திறன் விருத்திக் குழுக்களை உருவாக்குதல் என்பன பயனுள்ள சில வழிமுறைகளாகும். இவர்கள் இந்த முயற்சியில் ஏனையவர்களிடையே செயற்தூண்டலை எடுத்து வருவதுடன், அவர்களை வழிநடத்திச் செல்லவும் முடியும். அத்துடன், மற்றவர்கள் பின்பற்றக்கூடிய மாதிரிகளாகவும் இவர்கள் இருந்து வருவார்கள். அனுபவங்களை பகிர்ந்து கொள்வது மற்றொரு முன்னுரிமையாக உள்ளது.

தேவமுநி 1994 இல் "உற்பத்தித் திறன் விருத்திக்கான உத்திகள்" என்ற தலைப்பில் இரண்டாவது தேசிய

உற்பத்தித் திறன் பயிலரங்கினை நடாத்தியது. இது ஆசிய உற்பத்தித் திறன் தாபனத்தின் உதவியுடன் மாதிரி கம்பெனிகள் நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு வழிகோலியது. மேலும், இந்த பயிலரங்கு 'KAIZEN ' என்று அழைக்கப் படும் கருதுகோளை அறிமுகம் செய்தது. ஜப்பானின் பொருளாதாரச் சாதனைக்குப் பின்னணியில் இக் கருதுகோளே இருந்து வருவதாகக் கருதப்படுகின்றது.

மாதிரிக் கம்பெனிகள் நிகழ்ச்சித் திட்டம் என்பது, ஏற்கனவே உருவாக்கப் பட்டிருந்த உற்பத்தித் திறன் விழிப் புணர்வுக்கு செயல் வடிவம் கொடுத்த ஒரு திட்டமாக இருந்து வருகின்றது. வேலைத் தலத்தில் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்காக பல்வேறு உபாயங்களையும் செயல்படுத்துவதற் கூடாக மாதிரிக் கம்பெனிகளை வளர்த்தெடுக்க வேண்டியிருந்தது. உற்பத்தித் திறன் நுட்பங்களை பயன்படுத்தி ஒரு சில கம்பெனிகளை விருத்தி செய்து ஏனைய கம்பெனி களுக்கான ஆதாரங்களாக அவற்றைத் திகழச் செய்வதே மாதிரிக் கம்பெனிகள் திட்டத்தின் குறிக்கோளாகும்.

ஒரு மாதிரிக் கம்பெனி உற்பத்தித் திறன் செயலாற்றுகை மற்றும் ஒட்டுமொத்த வெற்றி என்பவற்றின் அடிப்படையில் ஏனைய கம்பெனிகளி லிருந்தும் வேறுபட்டு நிற்கின்றது. அது மனித மூலவளத்தின் தர மேம்பாடு, மூலதனம், மூலப்பொருள் மற்றும் வலு என்பவற்றின் தாக்கமான பயன்பாடு மற்றும் சந்தைகளை கவர்ந்திழுக்கக்கூடிய நவீன உற்பத்திச் செயல்முறை என்பவற்றின் அடிப்படையில் தொடரான பல முன்னேற்றங்களை சாதித்துக் கொண்டுள்ள ஒரு கம்பெனியாகும். மேலும், அங்கீகரிக்கப் பட்ட அதி உயர் தரங்களை சாதித்துக் கொண்டுள்ள ஒரு கம்பெனியாகவும் அது இருந்து வருகின்றது. இருந்த போதிலும், மேலும் விருத்தி நிலையை எடுத்து வருவதற்கான இடையறாத முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த மாதிரிக் கம்பெனிகள் '5S' என்றழைக்கப்படும் அடிப்படை நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்தியதற்கூடாக உற்பத்தித் திறனில் கட்புலனாகக் கூடிய விருத்திகளை எடுத்து வந்துள்ளன. சாதகமான வேலை அணுகுமுறைகளை அவை விருத்தி செய்து கொண்டுள்ளன.

மாதிரிக் கம்பெனி ஊழியச் செலவின் போட்டித் திறன், மூலதன மற்றும் பொருள் உற்பத்தித் திறன் மற்றும் சேர்க்கப்பட்ட பெறுமதி என்பவற்றை அதிகரித்துக் கொண் டுள்ளது. தொழிலாளர்களின் வருகை விகிதங்களை அது உயர்த்திக் கொண் டுள்ளதுடன், உயர்தரத்தை எட்டும் விதத்தில் செயல்முறைகள் மற்றும் முறைமைகள் என்பவற்றையும் விருத்தி செய்து கொண்டுள்ளது. ஆலோசனை களை செயல்படுத்தும் திட்டங்கள், ஈடுபாடும் பங்கேற்பும், விருத்தியாக்கப் பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் முறை, சந்தை ஆய்வு, வடிவமைப்பு மற்றும் உற்பத்தி என்பவற்றுக் கிடையிலான நெருக்கமான ஒருங்கிணைப்பு, சிறந்த வேலைச் சூழல் என்பன கம்பெனிகள் இதுவரையில் பெற்றுக் கொண்டுள்ள ஒரு சில பெறுபேறுகளாகும்.

இலங்கையின் கைத்தொழில் வரலாற்றில் முதல் தடவையாக இந்த மாதிரிக் கம்பெனிகளில் ஆதாயங்களை பகிர்ந்து கொள்ளும் முறை அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. சேர்க்கப்பட்ட பெறுமதியில் அதிகரிப்பு ஏற்பட்டதன் விளைவாகவே இது சாத்தியமாயிற்று. ஆதாயங்களை பகிர்ந்து கொள்ளும் இம்முறை ஊழியத்துக்கும் நிர்வாகத்துக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேம்படுத்துகின்றது. மாதிரிக் கம்பெனி ஒன்றை உருவாக்குவதில் உற்பத்தித் திறனே முக்கிய கூறாக உள்ளது. இத்திட்டம் ஊழியர்களின் ஆக்கத் திறன்களை தூண்டி விட்டுள்ளதுடன், சுய முன்னேற்றம், கற்றல் என்பவற்றிலான ஆர்வத்தையும் அதிகரிக்கச் செய்துள்ளது. அதுமட்டுமன்றி, உற்பத்தித் திறன் விருத்திக்கு ஆதாரமான சாதகமான வேலைக் கலாச்சாரமொன்றையும் அது எடுத்து வந்துள்ளது.

### கம்பெனி சார்ந்த உற்பத்தித் திறன் விருத்தி

கம்பெனி வாரியான உற்பத்தித் திறன் விருத்தி, விற்பனைக்கூட மட்டத்தில் உற்பத்தித் திறனை நடைமுறைப்படுத்துவதாகும். உற்பத்தித் திறனை நடைமுறைப்படுத்துவதற்கு கம்பெனிகளுக்கு உதவியளிக்கப்படுதல் வேண்டும். இலங்கையில் உள்ள பல கம்பெனிகள் உற்பத்தித் திறன் விருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கு போதி யளவிலான மூலவளங்களை அல்லது நிபுணத்துவத்தை கொண்டிருக்கவில்லை. எனவே, இந்த நிலையில் அக் கம்பெனிகளுக்கு வெளி உதவி தேவைப்படுகின்றது. பயிற்சி, ஆலோசனை, உற்பத்தித் திறன் அளவீடுகள் மற்றும் நிதி உதவி ஆகிய வடிவங்களில் வெளி உதவி வருகின்றது. சிங்கப்பூரில் திறன்கள் அபிவிருத்தி நிதியத்துக்கூடாக நிதி உதவி அளிக்கப்பட்டு வருகின்றது.

### உற்பத்தித் திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

மொ.உ.உ. மற்றும் வேலை வாய்ப்புக்களின் உருவாக்கம் என்பவற்றுக்கான பங்களிப்பின் சார்பு ரீதியான முக்கியத்துவத்தின் அடிப்படையில் கைத்தொழில்களை தெரிவு செய்ய முடியும். இதனைத் தாக்கமான முறையில் மேற்கொள்வதற்கு உற்பத்தித் திறன் விருத்தி தொடர்பான பணிகள் கண்காணிக்கப்படுவதுடன், சிறந்த முறையில் நிர்வகிக்கப்படவும் வேண்டும். கம்பெனி அடிப்படையி லான உற்பத்தித் திறன் விருத்தியை செயற்படுத்துவதற்கும், விழிப்புணர்வை தூண்டுவதற்கும், பயிற்சித் தேவைகளை இனங்கண்டு கொள்வதற்கும் கம்பெனிகளுக்கு உதவியளிக்கப்படுவது அவசியமாகும். ஊழியர் பங்கேற்பு நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத் துதல், இருவழி தொடர்பாடலுக்கு வசதி செய்தல், கூட்டுப்பணி மற்றும் ஊழியர்களின் யோசனைகள் என்பன இந்த நிகழ்ச்சிநிரலில் சேர்த்துக் கொள்ளப்படும்.

இந்த நிகழ்ச்சித்திட்டங்களில பலவற்றை ஏற்கனவே உள்ள செலவு ஒதுக்கீடுகளில் மாற்றங்கள் எவற்றையும் மேற்கொள்ளாது மிக உளிதில் விருத்தி செய்ய முடியும். உற்பத்தித் திறனை விருத்தி செய்து கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட கம்பெனிகளுக்கு உதவுவதில் ஊக்குவிப்பாளரின் பங்கினை நிறைவு செய்வதற்கென உற்பத்தித் திறன் விருத்திக் குழுக்கள் உருவாக்கப்படுதல் வேண்டும். இந்த குழுக்களும் உற்பத்தித் திறன் செயல்வீரர்களும் ஏனையவர்கள் பின்பற்றக்கூடிய முன்மாதிரிகளாக இருந்து வருவார்கள். நுண்மட்ட உற்பத்தித் திறன் போக்குகள், ஊழியப் பயன்பாடு, வேலை ஒழுங்கமைப்பு, தொழிலாளர் பங்கேற்பு, பயிற்சித்

தேவைகள் என்பன இத்தகைய குழுக்களின் பொறுப்புகளாக இருந்துவரும். தொழிலாளர்களையும் முகாமையாளர்களையும் பயிற்றுவித்தல், உற்பத்தித் திறன் அளவீட்டு நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்தித் திறன் குறிகாட்டிகளைத் தயாரித்தல், வேலைத்தலத்தை நல்ல நிலையில் பராமரித்தல், தரம் மற்றும் வேலை ஒழுங்கு என்பவற்றை விருத்தி செய்தல், இயந்திரங்களின் செயல்பாட்டை விருத்தி செய்தல், பொருட்களின் வீண் விரயத்தை குறைத்தல், வேலைத் தலத்தில் பாதுகாப்பினை உறுதிப் படுத்துதல், வாடிக்கையாளர் திருப்திக்கு முக்கியத்துவமளித்தல் என்பன இக்குழுவின் முக்கிய பணிகளாக இருந்து வரும்.

### தொழில்நுட்பமும் முறைமைகளில் ஏற்படும் மாற்றங்களும்

உற்பத்தித் திறன் விருத்தி முயற்சிக்கு தொழில்நுட்ப மாற்றங்களும் முறைமை மாற்றங்களும் அவசியமாகும். கம்பெனிகள் உற்பத்தித் திறனை விருத்தி செய்யும் முயற்சியில் மனித மூலவள அபிவிருத்தியில் மட்டுமே தங்கியுள்ளது எனக் கூறுவது முற்றிலும் தவறானதாகும். மனித மூலவளங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் மட்டும் ஒரு கம்பெனி உற்பத்தித் திறனை விருத்தி செய்து கொள்ள முடியாது. உற்பத்தித் திறன் என்பது ஊழிய உற்பத்தித் திறனுக்கு இணையானது எனக் கருதுவது ஒரு தப்பெண்ணமாகும். ஊழியம் என்பது பல உள்ளீடுகளில் ஒன்றாகும். மூலதனம், வலு, பொருட்கள் மற்றும் ஊழியம் என்பவற்றின் மொத்தக் கலவையே மொத்தக் காரணி உற்பத்தித் திறனுடன் சம்பந்தப்பட்டுள்ளது. ஊழிய உற்பத்தித் திறன் என்பது தனியொரு காரணி மட்டுமே ஆகும்.

சில கம்பெனிகள் தமது மனித மூலவள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து பெருமையுடன் பேசி வருகின்றன. காலத்துக்கொவ்வாத பழம் பாணியிலான முகாமை நுட்பங்களை தாம் முற்றிலும் களைந்துள்ளதாகவும் அவை கூறுகின்றன. மனித மூலவளங்களை அபிவிருத்தி செய்யும் பொழுது மூலதனம், வலு, பொருட்கள் மற்றும் நிலம் போன்ற மூல வளங்களின் பாவனை தானாகவே செல்திறனை பெற்றுக் கொள்ளும் எனக்கூறுவது பொய்யான ஒரு கூற்றாகும். மனித மூலவளங்கள் மட்டுமன்றி ஏனைய அனைத்து வகையான மூலவளங்களும் ஒரு நிறுவனத்தை பொறுத்தவரையில் பெறுமதிமிக்கவையாகும். ஒரு கம்பெனி மனித மூலவளங்களை அபிவிருத்தி செய்த போதிலும் மூலதன நிர்வாகம், பொருட்களைக் கையாளுதல், போக்குவரத்து, வலு நுகர்வு, பழம் பாணியிலான முறைகள் மற்றும் தொழில் நுட்பம் என்பவற்றில் காணப்படும் குறைபாடுகள் உற்பத்தித் திறன் விருத்திக்கு இடையூறுகளாக இருந்து வர முடியும்.

உற்பத்தித் திறன் குறித்த விழிப்புணர்வை உருவாக்குதல், உற்பத்தித் திறனை நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதனை அளவிடுதல் என்பன உற்பத்தித் திறன் இயக்கத்தின் முக்கியமான மூன்று கூறுகளாகும். ஏனைய நாடுகளுடன் இலங்கையின் போட்டியிடும் ஆற்றலை ஒப்பிட்டு நோக்குவதற்கு கைத்தொழில்கள் மற்றும் பொருளாதாரத்தின் ஏனைய துறைகள் என்பவற்றின் உற்பத்தித் திறன் மட்டம் கண்காணிக்கப்பட்டு அளவிடப்படுவது அவசியமாகும். போட்டி விலைகளில் சிறந்த தரம்வாய்ந்த பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வது என்பதே உயர் உற்பத்தித் திறன் என்பதன் பொருளாகும். இது விற்பனையை அதிகரித்து, முதலீடுகளை கவர்ந்திழுத்து, வாணிபத்தை விரிவுபடுத்துகின்றது. இதன் அனுகூலங்கள் இதனுடன் சம்பந்தப்பட்டுள்ள அனைத்துத் தரத்தினருக்கும் கிட்டும்.

இது தேசிய மட்டத்தில் கைத்தொழிலும் பொருளாதாரத்தின் ஏனைய பல்வேறு துறைகளும் கண்காணிக்கப்பட்டு அளவிடப்படுவதற்கு உதவுகின்றது. மேலும், கம்பெனிகளுக்கு இடையில் ஒப்பீடுகளை மேற்கொள்வதற்கும் இந்த அளவீடுகள் வாய்ப்பளிக்கின்றன. உற்பத்தித் திறன் அளவீட்டின் மற்றொரு முக்கியமான அம்சம் வேதனத்தை நிர்ணயிப்பதற்கு அல்லது வேதனங்களை உற்பத்தித் திறனுடன் தொடர்புபடுத்துவதற்கு அவசியமான தகவல்களை அது வழங்குவதாகும். வேதனங்கள் அதிகரிக்கப்படுவதன் விளைவாக நாங்கள் சிறந்த செயலாற்றுகையை எதிர்பார்க்க முடியாது. உற்பத்தித் திறன் விருத்தியும் உயர் செயலாற்றுகையும் முதலில் இடம் பெற வேண்டும்.

### உற்பத்தித் திறன் முயற்சிகளுக்கான தேசிய அங்கீகாரம்

நிறுவனங்களுக்கிடையிலான ஒப்பீடும் உற்பத்தித் திறன் அளவீடும் நிறுவனங்களின் உற்பத்தித் திறன் விருத்தி முயற்சிகளுக்கு தேசிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு வகை செய்கின்றன. தேசிய உற்பத்தித்திறன் விருதுகள் தலைசிறந்த உற்பத்தித் திறன் நடைமுறைகளைக் கொண்டுள்ள கம்பெனிகளுக்கு அங்கீகாரம் வழங்குகின்றன. தமது வேலைத் தலங்களில் உற்பத்தித் திறனை கணிசமான அளவில் விருத்தி செய்து கொள்வதற்காகப் பங்களிப்புச் செய்துள்ள குழுக்கள் மற்றும் தனி நபர்கள் ஆகியோர்களையும் உள்ளடக்கும் விதத்தில் இது விரிவாக்கப்படுதல் வேண்டும். கூட்டு குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்காக ஒன்றாக இணைந்து பணியாற்றும் தலைசிறந்த குழுக்களுக்கு இந்த வகையைச் சேர்ந்த விருதுகள் வழங்கப்படலாம்.

தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் 1993 இல் துவக்கி வைக்கப்பட்டதிலிருந்து 12 கம்பெனிகள் இவ்விருதுகளைப் பெற்றுக் கொண்டுள்ளன. அதே வேளையில், 28 கம்பெனிகளுக்கு திறமை விருதுகள் அளிக்கப்பட்டுள்ளன. உற்பத்தித் திறன் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்தில் 88 பாடசாலை பிள்ளைகளுக்கும், 4 பாடசாலைகளுக்கும் விருதுகள் வழங்கப் பட்டுள்ளன. இது தவிர 5 பேருக்கு தனி நபர் விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

விருதுகளை பெற்றுக் கொள்ளும் கம்பெனிகளுக்கும் தனி நபர்களுக்கும் கல்விச் சுற்றுலா வாய்ப்புக்களும் அளிக்கப்படுகின்றன. மேலும், அவர்களுடைய உற்பத்தித் திறன் விருத்தி முயற்சிகளும் ஏனைய வகையிலான முன்னேற்றங்களும் பிரசுரங்கள் மற்றும் விவரணப் படங்கள் என்பவற்றுக்கூடாக ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றன.

உற்பத்தித் திறன் இயக்கம் முழு நாட்டினதும் செயல்முனைப்பான, பரந்த வீச்சிலான பங்கேற்பினையும் அர்ப்பணிப்புணர்வினையும் வேண்டி நிற்கின்றது. இந்த முயற்சியில் அரசாங்கம், ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்கள் ஆகிய அனைவரும்

( 31 ஆம் பக்கம் பார்க்க)

# உற்பத்தித் திறன் மற்றும் தரம் என்பவற்றுக்கூடாக நிறுவன மேம்பாடு

**சுனில் ஜீ. விஜேசிங்க**
(முகாமைத்துவ ஆலோசகர் மற்றும் முகாமைப் பணிப்பாளர்,
புரொடக்டிவிட்டி
டெக்னிக்கல்ஸ் லிமிட்)

'உற்பத்தித் திறன்' மற்றும் 'தரம்' போன்ற பதங்கள் எமது குடிமக்களில் கணிசமான பிரிவினரால் இன்னமும் சரிவரப் புரிந்து கொள்ளப்படவில்லை. தொழில் முயற்சி மட்டத்தில் மட்டுமன்றி தேசிய மட்டத்திலும் உற்பத்தித் திறனையும் தரத்தையும் விருத்தி செய்யும் முயற்சிகள் எதிர்கொள்ளும் மிக முக்கியமான இடையூறுகளில் ஒன்றாக இது உள்ளது. 'உற்பத்தித் திறன்' என்ற பதம், மக்கள் மாடாக உழைக்கும் தொழிற்கூடங்கள், கடின உழைப்பு, களைப்படையச் செய்யும் நீண்ட நேர வேலை போன்ற காட்சிகளை பெரும்பாலானவர்களின் மனக்கண் முன்னால் எடுத்து வருகின்றது. நவீன கைத்தொழில் அமைப்புக்கள் உருவாவதற்கு முன்னர் நிலவி வந்த பழங்கால தொழில்நுட்ப முறைகளைப் பொறுத்தவரையில் இந் நிலைமை தான் நிலவி வந்தது. இன்று நிலைமை முற்றிலும் மாற்றமடைந்துள்ளது. சிறந்த தொழில்நுட்பம், மூலவளங்களின் செயல்திறன் மிக்க உபயோகம் மற்றும் சிறந்த நிர்வாக கட்டமைப்புக்கள் என்பவற்றால் இப்பொழுது உற்பத்தித் திறன் உயர்த்தப்பட்டுள்ளது.

உற்பத்தித் திறன் உயர்ந்த வாழ்க்கைத் தரமொன்றை எடுத்து வரும் என்பதும், தமது மூலவளங்களை உற்பத்திசார் முறையில் உபயோகித்துக் கொண்ட நாடுகளே இப்பொழுது செல்வந்த நாடுகளாக இருந்து வருகின்றன என்பதும், உயர் உற்பத்தித் திறனுக்கூடாக மட்டுமே உயர் வேதனங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதும் இப்பொழுது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. உற்பத்தித் திறன் என்பது, தன்னளவில் ஒரு முடிவுப் பொருளாக இருக்கவில்லை; தொழில் முயற்சியொன்றில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு உயர்ந்த வாழ்க்கைத் தரமொன்றை எடுத்து வருவதற்கான ஒரு வழிமுறையாகவே அது உள்ளது. உற்பத்தித் திறன் என்பது தொழிலாளர்களைச் சுரண்டும் நடைமுறை அல்ல; உற்பத்தித் திறனின் அனுகூலங்களை நியாயமான முறையில் பகிர்ந்தளிக்கும் ஒரு முறையுடன் நேரடியாகப் பிணைக்கப்பட்டுள்ளது.

ஜப்பானில், ஜப்பான் உற்பத்தித் திறன் மையம் ஸ்தாபிக்கப்பட்டமையை அடுத்து 1955 இல் உற்பத்தித் திறன் இயக்கம் துவக்கி வைக்கப்பட்டது. அதன் வழிகாட்டுக் கோட்பாடுகள் வருமாறு:

1. விருத்தி செய்யப்பட்ட உற்பத்தித் திறன் அதிகரித்த அளவிலான வேலை வாய்ப்புக்களுக்கு வழிகோலுவதுடன், உயர் அளவிலான தொழில் பாதுகாப்பையும் வழங்கும்.
2. பின்பற்றப்படும் உற்பத்தித் திறன் விருத்தி முறைகள், ஊழியம் மற்றும் முகாமை என்பவற்றுக்கிடையில் கலந்தாலோசிக்கப்பட்டு முடிவாக்கப்படுதல் வேண்டும்.
3. விருத்தியாக்கப்பட்ட உற்பத்தித் திறனின் விளைவாக கிடைக்கும் ஆதாயங்கள் நுகர்வோர், தொழிலாளர் மற்றும் நிர்வாகம் என்போருக்கிடையே சரிசமமாக பகிரப்படுதல் வேண்டும்.

எனவே, உற்பத்தித் திறன் என்ற விடயம் தொழிலாளர்களைச் சுரண்டிக் கொழுக்கும் ஒன்றல்ல என்பதனை இது தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

'தரம்' என்ற பதமும் பரவலாக தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. அது செல்வ நிலையுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளதுடன், தரம் என்பது செல்வந்தருக்கு உரிய ஒன்று என்றும், இலங்கை போன்ற வறிய நாடுகள் தரத்தை விருத்தி செய்து கொள்வதற்கு முயற்சிக்க வேண்டிய அவசியமில்லை என்றும் பெரும்பாலானவர்கள் கருதுகின்றனர். யதார்த்தத்தில், தரம் குறித்த நவீன கருதுகோள் சார்புரீதியான ஒன்றாக இருந்து வருகின்றது. அதாவது, தரத்தின் மட்டம் வாடிக்கையாளரின் தேவையிலேயே தங்கியுள்ளது. மேலும், தரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கான விருப்பு மனிதகுலம் சுமார் பத்து இலட்சம் வருட காலமாக மேற்கொண்டு வந்த ஒரு பயணம் என்பதையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும். ஆதி கால மனிதனும் கூட தனது வேட்டைக் கருவிகளின் தரத்தை விருத்தி செய்து கொள்ள விரும்பினான். வர்த்தகப் பண்டமொன்றின், தரம் குறித்த கருதுகோள் ஆரம்பகால அணுகுமுறையிலிருந்து இப்பொழுது கணிசமான அளவில் மாற்றமடைந்துள்ளது.

இன்று தரக் கட்டுப்பாடு குறித்த கருதுகோள் உற்பத்திப் பொருளின் தரத்தைப் பரிசோதிக்கும் குறுகிய அணுகுமுறையிலிருந்து மிகப் பரந்த மட்டத்திலான "தொழில் முயற்சித் தரம்" என்ற கருதுகோளாக மாற்றமடைந்துள்ளது. தொழில்முயற்சி அதன் முறைமைகளும் கலாசாரமும் உயர் தரத்தில் இருந்து வந்தால் அதன் உற்பத்திப் பொருட்களும் சேவைகளும் இயல்பாகவே உயர் தரத்தில் இருக்கும் என்ற நம்பிக்கையை இது அடிப்படையாகக் கொண்டுள்ளது. உற்பத்தித் திறன் மற்றும் தரம் ஆகிய கருதுகோள்களை தவறாக புரிந்து கொண்டுள்ளமையின் காரணமாக, பெரும்பாலான தொழிலாளர்களும் நடுமட்ட முகாமை அணியினரும், உற்பத்தித் திறனையும் தரத்தையும் ஒரே நேரத்தில் முன்னெடுத்துச் செல்ல முடியாது என வலியுறுத்தி வருகின்றனர். உயர்மட்ட உற்பத்தித் திறனை சாதித்துக்கொள்வதற்கு தரத்தை விட்டுக் கொடுக்க வேண்டும்; அல்லது உயர் தரத்தை எட்டுவதற்கு உற்பத்தித் திறனைத் தியாகம் செய்ய வேண்டும் எனப் பலர் கூறி வருகின்றனர். ஆனால், இன்று உற்பத்தித் திறனையும் தரத்தையும் சேர்த்து, அவற்றை ஒருங்கிணைக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்றில் முன்னெடுத்துச் செல்வதற்கான இயக்கம் வலுவடைந்து வருகிறது.

தரம் என்பது குறிப்பிட்ட ஒரு உற்பத்திப் பொருளுக்கு அல்லது ஒரு

அலகுக்கு மட்டும் வரையறுக்கப்பட்ட ஒரு விடயமல்ல; மாறாக அது எல்லா இடங்களுக்கும் பொருந்திச் செல்லும் ஒரு கருத்தோளாக இருந்து வருவதுடன், ஒன்றுடன் ஒன்றை பிணைத்துச் செல்கின்றது. அது வாடிக்கையாளர் தேவைகளை ஒரு பண்டமாக அல்லது ஒரு சேவையாக மாற்றிக் கொள்ளும் கருதுகோளுடன் ஆரம்பித்து, கொள்வனவுகளின் தரம், உற்பத்தியின் தரம், விற்பனைகளின் தரம், விற்பனைக்குப் பின்னரான தரம் என விரிந்து செல்கின்றது. அதாவது, 100% சரியானது சாத்தியம் என எல்லோரும் நம்பும் ஒரு சூழலில் தரக் கலாசாரமொன்று அவசியமாகும். ஒவ்வொரு அடுத்த கட்டமும் உங்கள் நிறுவனத்துக்குள்ளேயே கூட உங்கள் வாடிக்கையாளராகும்.

மூலவளத்தின் ஒவ்வொரு அலகிலிருந்தும் அதிகளவுக்கு பெறுமதி மிக்க வெளியீட்டைப் பெற்றுக் கொள்வதே உற்பத்தித் திறனின் பொருளாகும். அதாவது, பணத்தின், நிலத்தின், நேரத்தின், சக்தியின், மூலப் பொருளின் ஒவ்வொரு அலகிலிருந்தும் கூடிய மதிப்புமிக்க வெளியீட்டைப் பெற்றுக் கொள்வது என இதனை விளக்கலாம். உற்பத்தித் திறன் என்பது வெறுமனே உற்பத்தியாக மட்டும் இருந்து வரவில்லை; அது பயன்படுத்தப்பட்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட மூலவளங்கள் தொடர்பாக கிடைக்கும் உற்பத்தி அல்லது வெளியீடாகும். அது உள்ளீடு தொடர்பான வெளியீட்டின் விகிதாசாரமாகும்; அல்லது வேறு வார்த்தைகளில் கூறுவதானால் உற்பத்தித் திறன் = வெளியீடு/உள்ளீடு ஆகும். உற்பத்தித் திறனை, ஒன்றில், ஒரு உள்ளீட்டுக் காரணி மட்டும் கவனத்தில் எடுக்கப்படும் தனிக் காரணி உற்பத்தித் திறன் நியதிகளில் அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உள்ளீட்டுக் காரணிகள் உள்ளடக்கப்படும் பல்காரணி உற்பத்தித் திறன் நியதிகளில் மதிப்பிடப் படலாம். கைத்தொழில் நிறுவன மொன்றில் தனிக்காரணி உற்பத்தித் திறனை கவனத்தில் எடுப்பது வழமையாகும். ஊழிய உற்பத்தித் திறன் தனிக் காரணி உற்பத்தித் திறன் அளவீடாக உள்ளது. இங்கு ஊழியம் உள்ளீடாக பயன்படுத்தப்படுகிறது. பொருள் உற்பத்தித் திறன், வலு உற்பத்தித் திறன் மற்றும் மூலதன உற்பத்தித் திறன் என்பன முறையே பொருள், வலு மற்றும் மூலதனம் என்பவற்றின் உள்ளீட்டுக் காரணிகளாக பயன்படுத்தப்படுகின்றன. மேலும் வெளியீடுகளையும் உள்ளீடுகளையும் பௌதீக அலகுகளின் நியதிகளில் அல்லது நிதிசார் அலகுகளின் நியதிகளில் அளவிட்டுக் கொள்ளலாம். உற்பத்தி செய்யப்பட்ட அலகுகள், வெளியீட்டு கிலோகிராம்கள், வெளியீட்டு லீட்டர்கள், ஓடிய பயணிகள் கிலோ மீட்டர்கள் என்பன வெளியீட்டின் பௌதீக அலகுகளாகும். மனித மணித்தியாலங்கள், உபயோகிக்கப்பட்ட மூலப் பொருட்களின் நிறை, நுகரப்பட்ட வலு கிலோவோட் முதலியவை உள்ளீட்டு நியதிகளாகும். வெளியீட்டின் நிதிசார் வழிமுறைகள் உற்பத்தியின் ரூபாய் பெறுமதி அல்லது வெளியீட்டின் சேர்க்கப்பட்ட பெறுமதியாகும். அதே வேளையில், பொருட் செலவு, ஊழியச் செலவு, வலுச் செலவு முதலியவை உள்ளீடுகளாக உள்ளன. எனவே, சிறந்த உற்பத்தித் திறன் விகிதா சாரங்களின் தொகுதியொன்றைக் கொண்டிருப்பது முதல் படியாக உள்ளது. ஏனெனில், உற்பத்தித் திறன் நியதிகள் தொடர்பாக நீங்கள் எந்த இடத்தில் இருக்கிறீர்கள் என்பதனைக் கண்டறிந்து கொள்ளக்கூடிய ஒரே வழி இதுவாகும்.

இன்றைய போட்டிச் சூழ்நிலையில், ஒரு நிறுவனம், முதலீட்டின் மீது நல்ல ஆதாயத்தைப் பெற்றுக் கொள்வதன் மூலமும் திருப்தியடைந்த வாடிக்கையாளர் தொகுதியொன்றை வைத்திருப்பதன் மூலமும் மட்டுமே மேம்பாட்டினைச் சாதித்துக் கொள்ள முடியும். உற்பத்தித் திறனும் தரமும் மிகுந்த முனைப்புடன் முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதே இதன் பொருளாகும். மூலப் பொருள், ஊழியம், வலு, நிலம் அல்லது இடப்பரப்பு என்பவற்றின் ஒவ்வொரு அலகினதும் உற்பத்தித் திறன் விருத்தி செய்யப்படுதல் வேண்டும். உள்ளீடுகள் குறைக்கப்படும் அதே வேளையில் வெளியீடுகள் அதிகரிக்கப்படுதல் வேண்டும்.

உற்பத்தித் திறன் விருத்திச் செயன்முறையின் இரண்டாவது படி: உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வருமான மூலாதாரங்கள் இருந்து வந்தால் அவற்றில் எந்த வருமான மூலாதாரம் முக்கியமானது என்பதைக் கண்டறிந்து கொள்வதற்காக அவை தொடர்பான ஒரு பகுப்பாய்வை மேற்கொள்வதாகும். அந்நிலையில், அந்தந்த மூலாதாரத்துக்கு உரிய முன்னுரிமையை வழங்க முடியும். விலை/தரம் என்பவற்றில் ஏற்படும் மாற்றங்களின் தாக்கத்தைக் கண்டறிவதற்காக இந்த மூலாதாரத்தை மேலும் பகுப்பாய்வு செய்யலாம். இது பொதுவாக வெளியீடுகளின் மதிப்பை அதிகரிப்பதுடன் சம்பந்தப்பட்டுள்ளது.

அடுத்த விடயம் வெளியீட்டுக் குறைப்பாகும். முக்கியமான செலவுகளை நிர்ணயம் செய்து கொள்வதற்காக செயற்பாட்டுச் செலவுகள் ஆய்வு செய்யப்படுதல் அவசியமாகும். இந்த இடத்திலேயே பல கைத்தொழில் அதிபர்கள் தவறு செய்கின்றார்கள். தனது தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் குறைவாக உள்ளது என முகாமையாளரொருவர் ஒரு முறை என்னிடம் குறை கூறினார். நான் இது தொடர்பான மேலும் விசாரணைகளை மேற்கொண்ட பொழுது அவருடைய ஊழியச் செலவு மொத்தச் செலவில் 5% ஆக மட்டுமே இருந்து வருவதைக் காண முடிந்தது. நேரடிப் பொருட்கள் 70% ஆக இருந்தன. எனவே, பொருட் செலவைப் புறக்கணித்து, ஊழிய உற்பத்தித் திறன் குறித்து மட்டும் கவலைப்படுவது ஏன்? செலவுகளின் சார்பு ரீதியான முக்கியத்துவம் கைத்தொழிலுக்கு கைத்தொழில் வேறுபடுகின்றது. ஊழியச் செறிவு மிகுந்த சில கைத்தொழில்களில் ஊழியம் மிக முக்கியமாக இருக்கலாம். அதே வேளையில், சூளை வகையைச் சேர்ந்த கைத்தொழில்களில் வலுச் செலவு மிக உயர்வானதாக இருக்கலாம். உயர் தொழில்நுட்பக் கைத்தொழில்களில் உபகரணங்களின் தேய்வுச் செலவு முக்கிய கூறாக உள்ளது. இச்சந்தர்ப்பத்தில் இயந்திராதிகளின் உபயோகம் முக்கிய இடத்தைப் பெற்றுக் கொள்கிறது.

முன்னுரிமைகள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவற்றை மேலும் பகுப்பாய்வு செய்ய முடியும். உதாரணமாக, பொருள் மிக முக்கிய கூறாக இருந்து வந்தால் அதன் செலவைக் குறைப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிவதற்கென விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். தரம் பாதிப்படையாத விதத்தில் மலிவான பொருட்களைப் பயன்படுத்த முடியுமா? பதிலீட்டுப் பொருட்களை பயன்படுத்த முடியுமா? பொருள் தேவையைக் குறைக்கும் விதத்தில் வடிவமைப்பை மாற்றியமைக்க

முடியுமா ? வீண் விரயத்தைக் குறைக்க முடியுமா? கழிவுகளை குறைக்க முடியுமா ? அதே பொருளை மலிவான ஒரு மூலத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியுமா? போன்ற கேள்விகளை எழுப்புவது முக்கியமாகும்.

ஊழியச் செலவைக் கையாள்வது தொடர்பாக, பின்வரும் முறைகளில் கவனஞ் செலுத்தப்படுதல் வேண்டும் :

*வேலைச் சூழலை விருத்தி செய்தல்*

வெளிச்சம், வெப்ப நிலை, காற்றோட்டம் மற்றும் இரைச்சல் என்பன இதனுடன் சம்பந்தப்பட்டுள்ளது. மோசமான வெளிச்சம் உற்பத்தித் திறனைக் குறைத்து, களைப்பை அதிகரிக்கின்றது. பல்வேறுபட்ட வேலைகளுக்கும் தேவைப்படும் வெளிச்சத்தின் அளவு வேறுபட்டதாக இருந்து வருவதுடன், அந்த அளவுகளுக்கேற்ற விதத்தில் அது வழங்கப்பட வேண்டும். வெப்ப நிலையும் உற்பத்தித் திறனைப் பாதிக்கின்றது. உயர் வெப்பமான அல்லது கடும்குளிர் சூழல் மோசமானதாகும். வெப்ப நிலை ஒரு குறிப்பிட்ட ஒரு புள்ளிக்கு கீழ் குறைக்கப்படும் பொழுது தட்டச்சு மற்றும் தரவு உள்ளீட்டு வேலைகளின் வேகம் குறைவடைகின்றது என்பதனை ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. காற்றோட்டம் குறைவாக இருப்பதும் பிராணவாயுக் குறைபாடு மற்றும் நச்சு வாயுக்களின் சுவாசம் என்பவற்றுக்கூடாக உற்பத்தித் திறனைக் குறைத்து விடுகின்றது. இரைச்சல் கவனத்தைத் திசை திருப்புவதுடன், எச்சரிக்கை மணிகள் மற்றும் அபாயச் சங்கொலி என்பவற்றின் ஓசைகளை கேட்காமல் செய்து விடுகின்றது. மேலும், இடையறாது உயர் இரைச்சலை எதிர்கொள்வதானது செவிப்புலன் மீது நிரந்தரமான சேதத்தை எடுத்து வருகின்றது.

*வேலை நேரம்*

வேலை செய்யும் நேரத்தின் போது, நீண்ட வேலை நேரத்தின் பின்னர் நீண்ட இடைவேளை கொடுப்பதற்குப் பதிலாக, அடிக்கடி சிறுசிறு இடைவேளைகளை வழங்க வேண்டும் என்பதே நவீன பரிந்துரையாகும். களைப்பு ஏற்பட்ட பின்னர் இடைவேளை வழங்குவதிலும் பார்க்க களைப்பு ஆரம்பிக்கும் போதே அதனை வழங்குவது தாக்க முள்ளதாக இருக்கும்.

*பொருத்தமான கருவிகளின் பாவனை*

உற்பத்தித் திறனின் முன்னோடிகளில் ஒருவரான பெரடரிக் டேலர், சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்னர், பொருத்தமான கருவிகள் மூலம் உற்பத்தித்திறனை எவ்வாறு அதிகரிக்க முடியும் என்பது குறித்து உலகுக்கு சிறந்த உதாரணமொன்றை வழங்கியிருந்த போதிலும், பல வேலைத் தலங்களில் இன்னமும் பொருத்தமற்ற கருவிகள் உபயோகிக்கப்பட்டு வருவதனை நாம் பார்க்கிறோம்.

**வேலைத் தலத்தை சிறந்த முறையில் வடிவமைத்தல்**

மனிதனை இயந்திரத்துக்குப் பொருத்துவதிலும் பார்க்க, இயந்திரம் மனிதனுக்கு இசைவானதாக பொருத்தப்பட வேண்டும். இதன் விளைவாக, களைப்பு குறைவடைவதுடன் தொழிலாளர்களின் உடல் அசைவுகள் இயல்பாகவும் அமைகின்றன. இது உற்பத்தித் திறனை அதிகரிக்கின்றது. எனவே, வேலை செய்யும் மேசை மற்றும் வேலைத்தலம் என்பன அசைவுப் பொருளாதாரத்தின் கோட்பாடுகளைப் பயன்படுத்தி விருத்தி செய்யப்படுதல் வேண்டும்.

*முறைமைகளை விருத்தி செய்தல்*

விருத்தி செய்யப்பட்ட வேலை முறைகள் தேவையற்ற உடல் அசைவுகள், தேவையற்ற நடவடிக்கைகள் என்பவற்றை நீக்குவதன் மூலமும் ஒரே நேரத்தில் செய்யக்கூடிய விதத்தில் செயல் முறைகளை ஒன்றாக இணைப்பதன் மூலமும் நேரம், இடம், ஆள் ஆகியவற்றை மீள ஒழுங்குபடுத்துவதன் மூலமும் ஒரு தொழிலின் வேலை அளவை கணிசமான அளவில் குறைக்க முடியும். உற்பத்திசார் நடவடிக்கையில் இரு கரங்களையும் உபயோகிப்பதானது பாரம்பரிய வேலைகளில் பொதுவாக புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளது. தச்சர்கள் ஒரு கையை பலகையைப் பிடித்துக் கொள்வதற்கும் மறுகையை வாளைப் பிடித்துக் கொள்வதற்கும் உபயோகிப்பது இலங்கையில் காணக்கூடிய ஒரு பொதுவான காட்சியாகும். பலகையைப் பிடித்து வைத்திருப்பதற்கு ஒரு பிடிமானத்தை உபயோகித்து ஆக்கபூர்வமான வேலைகளைச் செய்வதற்கு இரு கைகளையும் உபயோகிக்க முடியும். வேலைத் துண்டொன்றை கையால் பிடித்துக் கொள்வது உற்பத்தித் திறன் அதிகரிப்புக்கு உதவாது.

*உற்பத்தித் திறன் கொண்ட வேலையாள் ஒருவரை உருவாக்குதல்* அடிக்கடி புறக்கணிக்கப்பட்டு வரும் ஒரு காரணி வேலையாட்களின் போஷாக்கு மட்டமாகும். காலையில் நடுப்பகுதியிலும் பிற்பகுதியில் நடுப்பகுதியிலும் இடைவேளைகளில் தொழிலாளர்களுக்கு தேநீரும் பிஸ்கட்டும் வழங்குவது கூட அவர்களுடைய உற்பத்தித் திறனில் சாதகமான தாக்கத்தை எடுத்து வர முடியும் என்பதனை ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. சில நிறுவனங்கள் தாமே தொழிலாளர்களுக்கு ஊட்டச் சத்துக்களைக் கூடக் கொடுத்து அனுகூலமான பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டுள்ளன.

*செயல்தூண்டல்* செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் போன்ற நிதிசார் வழிமுறைகளுக்கூடான செயற்தூண்டலும், மிகச் சிறந்த வேலைச் சூழலொன்றை அளிப்பது போன்ற நிதிசாரா வழிமுறைகள் மூலமான செயற்தூண்டலும் உற்பத்தித் திறனைக் கணிசமான அளவில் விருத்தி செய்ய முடியும். அத்துடன், அது அனைவரும் ஒத்துழைப்புடன் வேலை செய்யும் சூழலொன்றையும் தோற்றுவிக்கலாம்.

*5S முறை* '5S' என்று அழைக்கப்படும் முறை ஜப்பானில் பின்பற்றப்பட்டு வரும் வேலைத்தலத்தை ஒழுங்குபடுத்தும் முறையாகும். இது 5 படிமுறைகளில் செயல்படுத்தப்படுகின்றது. இரைச்சலைக் குறைத்தல், ஒழுங்கு முறையை உருவாக்குதல், சுத்தத்தை விருத்தி செய்தல், தரப்படுத்தல் மற்றும் கட்டுப்பாடு என்பன எந்த ஒரு நிறுவனத்தினதும் உற்பத்தித் திறன் அதிகரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் முக்கிய கூறுகளாக இருந்து வருகின்றன என சிபார்சு செய்யப்படுகிறது.

ஒரு நிறுவனத்துக்குள், உற்பத்தித் திறன் மற்றும் தரம் என்பவற்றை

( 33 ஆம் பக்கம் பார்க்க)

# தொழில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு என்பன உற்பத்தித் திறன் மீது எடுத்து வரும் தாக்கங்கள்

டாக்டர். டப். ஆர். டி. அல்விஸ்
(தொழில் சுகாதார பிரிவு, தொழில் அமைச்சு)

உற்பத்தித் திறன் என்பது பொதுவாக வெளியீட்டு அலகுகள் உள்ளீட்டு அலகுகளுடன் கொண்டிருக்கும் தொடர்பாக வரையறுத்துரைக்கப்படுகிறது. உற்பத்தி நிறுவகமொன்றிலோ அல்லது சேவை நோக்குடைய நிறுவகமொன்றிலோ காணப்படும் ஒரு பொதுவான பிரச்சினை, உள்ளீடுகள் வேறுபட்டும் பரந்தும் காணப்படுவதால் புறவயமான அளவீடு ஒன்றைப் பெற்றுக் கொள்ளல் சிரமமானது என்பதாகும். எனவே, தொழிலாளர்களின் எண்ணிக்கை அல்லது உழைப்பு மனித மணித்தியாலங்களின் எண்ணிக்கை அல்லது ஊழியச் செலவு என்பவற்றை உள்ளீடுகையாகக் கொண்ட உழைப்பின் உற்பத்தித் திறனே வழமையாக அளவிடப்படுகின்றது. ஆகவே, உற்பத்தித் திறன் என்பது மனித வளங்களிலேயே நேரடியாகத் தங்கியுள்ளது. மனிதனின் விளைத்திறமையைத் தூண்டுவது மனிதனிடம் அமைந்து காணப்படும் பல்வேறு சிறப்பியல்புகளாகும். அவையாவன அவன் பெற்றுள்ள கல்வி, அனுபவம், பயிற்சி ஆகியவையும் அத்துடன் கூடவே உண்மையில் அவனது உடனலமுமாகும். பொதுவாக நல்ல ஆரோக்கியமான நிலையில் உள்ளவர்களுக்கே தொழில்கள் வழங்கப்படுகின்றன.

பெரும்பாலான மக்கள் உற்பத்தித் திறனுக்கு உடனலம் அளிக்கும் உறுதியான பயன்களை உணர்ந்து கொள்வதில்லை. உடனலம் குன்றிக் காணப்படும் பொழுது யாது நிகழும் என்பதைச் சிந்திக்கவும், வேலைக்கு வராதிருத்தல், நேரம் பிந்தி வருகை தரல், குறைவான வெளியீடு, கூடுதலான தவறுகள், உற்பத்தியினதும், சேவைகளினதும் தரம் குறைதல், உயர் வைத்தியச் செலவுகள் என்பவை அதிகரிக்கும். தொழில் முயற்சியின் மீது இவை ஏற்படுத்தும் விளைவு குறித்து நாம் விரித்துரைக்க வேண்டியதில்லை. அவை தெட்டத் தெளிவானவை. ஆனால், துரதிர்ஷ்ட வசமாக கைத்தொழில்கள் மீது குன்றிய உடனலம் ஏற்படுத்தும் செலவினை நாம் வழமையாகக் கணிப்பதில்லை.

சமுதாயத்தைப் பிடிக்கும் பொதுவான நோய்களினால் தொழிலாளரின் உடனலம் பாதிக்கப்படலாம். வேலைத் தலத்தில் அதன் பொருளாதார விளைவும் உணரப்படும். அத்துடன், ஏறெனவேயுள்ள ஒரு சுகவீனம் சிற்சில வேளைகளில் வேலையினால் தீவிரமடைந்து "வேலையுடன் தொடர்புபட்ட நோய்" எனக் குறிப்பிடப்படும் இயலாமையை உண்டுபண்ணும். எடுத்துக்காட்டாக ஆஸ்துமா, தோலழற்சி என்பவற்றினால் பிடிக்கப் படும் குணமுடைய ஒரு தொழிலாளி வேலையின்போது நிகழும் ஏதேனும் தாக்கத்தினால் நோய்க்கு ஆட்படலாம். தொழிலாளரின் உடலைம் அவன் செய்யும் வேலையின் தன்மையினால் அல்லது அவன் கையாளும் பதார்த்தங்களினால் அல்லது அவன் வேலை செய்யும் சூழலில் காணப்படும் பாதகமான காரணிகளினால் பாதிக்கப்பட்டு, அதன் விளைவாக "தொழில் சார்ந்த நோய்கள்" தோன்ற முடியும். எனவே, நீண்ட கால நேரத்தில் நோய்களைத் தடுத்தல் வேலைத் தலத்திற்குப் பயனுள்ளதாக அமையும். அதே சமயம் தொழிலாளரின் உடனலத்தை விருத்தி செய்தலும் அனுகூலமானது. போஷனை, குடும்ப உடனலம், சிறந்த வாழ்க்கைப் பாங்குகள், உடற்பயிற்சி, மதுபான ஒழிப்பு போன்றவற்றை மேம்படுத்தல், வேலைத் தலத்தில் கவனிக்கப்பட வேண்டிய உடனல மேம்படுத்தற் செயற்பாடுகள் சிலவாகும்.

மறுபுறம், விபத்துகளும் சுகவீனமும் தொழில் முயற்சியின் இலாபங்களைப் பாதிக்கும். வேலைகொள்வோர் பெரும்பாலும் விபத்தொன்றின் நேர்ச் செலவை அதாவது, சிகிச்சைச் செலவு, நட்டஈடு என்பவற்றை மட்டும் கருத்திற் கொள்வர். உண்மையில் வேலை கொள்வோர் சிலர் தொழிலாளர்களுக்கு காப்புறுதியைப் பெற்றுக் கொடுப்பதுடன் திருப்தி காண்கின்றனர். ஆனால், இது தொடர்பாக மறைமுகச் செலவுகள் இல்லையா? விபத்தொன்றைத் தொடர்ந்து வரும் போக்குவரத்துச் செலவு, நேர இழப்புச் செலவு, லீவு, தொழிலாளர் மீது செய்த முதலீட்டின் இழப்பு, புதியவர்களை ஆட்சேர்க்கும் செலவு, விபத்தைத் தொடர்ந்து வேலை நிறுத்தச் செலவு, உற்பத்திப் பொருள்களுக்கும் இயந்திரத் தொகுதிகளுக்கும் ஏற்படும் சேதம், சட்ட நடவடிக்கைச் செலவு என்பவை பற்றி நாம் எப்பொழுதாவது சிந்தித்ததுண்டா? நேரடிச் செலவு மேலோட்டமானது ; மறைமுக செலவு மறைந்திருப்பது, அளவிறந்தது. இது உழைப்பின் செலவுடன் சேர்ந்து தொழில் முயற்சியின் உற்பத்தித் திறனையும் இலாபங்களையும் பாதிக்கும். இதற்கு மேலாக அது தேசிய பொருளாதாரத்தின் மீது ஒரு பளுவையும் எடுத்து வரும். ஆரோக்கியமானதும் பாதுகாப்பானதுமான வேலைச் சூழலை வழங்குதல் உடனலக் கேட்டையும் விபத்துகளையும் தடைசெய்யும். சௌகரியமான ஒரு வேலைக் சூழல் தொழிலாளர் மனவுறுதியை அதிகரிக்கச் செய்வதுடன் கைத்தொழிற் தொடர்புகளைச் சிறக்கச் செய்யும்; தவறுகைளக் குறைக்கும்.

## தொழில்சார் ஆபத்துக்கள்

வேலைத்தலத்திலே தொழிலாளர்களின் நலனைப் பாதிக்கும் ஆபத்துகள் யாவை ? எந்த வகையான வேலையும் ஏதேனுமோர் ஆபத்தை அல்லது பிறிதோர் ஆபத்தைக் கொண்டிருக்கும். இவ்வாபத்துக்கள் தொடக்கத்தில் கட்டுப்படுத்தப்படக் கூடியவையாக இருக்கும் என்பதைக் கவனித்தல் முக்கியமானது. நாம் அக்கறை கொள்வது தரப்பட்டுள்ள நிலைமைகளின் கீழ் ஏற்படும் ஆபத்து பற்றி அன்றேல் இவ்வாபத்து உடனலக் கேட்டினை ஏற்படுத்தக்கூடிய நிகழ்தகவு பற்றியேயாகும். எடுத்துக்காட்டாக, மின்சாரம் ஆபத்து வாய்ந்தது. ஆயினும், நாம் அதனைப் பரந்த

அளவிற் பயன்படுத்துகிறோம். அது மனித உடலுடன் தொடுகை பெறும் பொழுதே ஆபத்தினை விளைவிக்கின்றது. அதனையே நாம் கட்டுப்படுத்துதல் வேண்டும்.

வேலைத் தலத்திலான ஆபத்துக்களை பரந்த அளவில் பின்வருமாறு வகைப்படுத்தப்படலாம்:

- பௌதிக ரீதியானவை
- இரசாயன ரீதியானவை
- உயிரியல் ரீதியானவை
- உளவியல்-சமூக ரீதியானவை
- மனித வேலைச் சூழல் உறவு ரீதியானவை.

## பௌதிக ஆபத்துகள்

அவை வெப்பம், ஒளி, இரைச்சல், அதிர்வு, வளிமண்டல அமுக்கம், கதிர்வீச்சு என்பனவாகும்.

தொழிலாளர் சௌக்கியத்துக்கு முக்கியமானது வெப்பச் சூழலாகும். மனிதன் வெப்பச் சமநிலையொன்றைப் பேணி வருகிறான். வேலை செய்யும் பொழுது அவன் வெப்பத்தைத் தோற்றுவிக்கிறான். அது சூழலினுள் எளிதாக விடுவிக்கப்படுகின்றது. சூழலின் வெப்ப நிலைமைகள் இவ்விடுவித்தலுக்கு உதவுவதாக இருத்தல் வேண்டும். வேலையானது பளுவுடன் கூடியதாக இருக்கும்பொழுது கூடுதலான வெப்பம் தோற்றுவிக்கப்படுகின்றது. பிரதிகூலமான சூழல் நிலைமைகளுடன் தொழிலாளி உடல் வெப்பநிலையைப் பேணுவதற்காக வியர்வையை வடிக்க ஆரம்பிக்கிறான். நிலைமாற்றத்தின் போது மனிதன் உடலிலிருந்து வியர்வையாக ஏறத்தாழ 4 லிற்றரளவு நீரை இழக்க முடியும். இது பதிலீடு செய்யப்படாவிட்டால் பேரிடர் வாய்ந்த விளைவுகளை ஏற்படுத்த முடியும். உடல் நீரின் இழப்புடன் குறைந்ததோர் அளவில், வேலையின் பயப்பினைப் பாதிக்கும் வகையில் உடம்புசார் களைப்பு ஏற்படுகின்றது. அலுவலகமாயினும் சரி தொழிற் சாலையாயினும் சரி சௌகரியமான வீச்சில் வெப்ப சூழலைப் பேணுதல் வேலையின் வினைத்திறமையிலும் குறிப்பிடத்தக்க விளைவினை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

தகவல்களின் ஏறத்தாழ 80% ஆனவற்றை நாம் எமது கண்களினூடாகவே பெற்றுக்கொள்வதால் வேலை செய்வதற்குப் போதுமான வெளிச்சம் அவசியம். பெரும்பாலான வேலைகளுக்கு திரவியங்கள், பொருள்கள், பொறித்தொகுதி என்பவை தெளிவாகக் காட்சியளித்தல் வேண்டும். குறைவான ஒளி, குன்றந்த வெளியீட்டுக்கும் கூடுதலான தவறுகளுக்கும் வழிவகுக்கும். தொழிலாளர் விகாரமான உடற்றோற்ற நிலைகளில் நின்று வேலை செய்யும் பொழுது அது உற்பத்தித் திறனை இறுதியில் பாதிக்கக்கூடியவாறு கழுத்து நோ, களைப்பு போன்ற கோளாறுகளை ஏற்படுத்தும். வெளிச்சத்தை மேம்படுத்துவதன் மூலம் மட்டும் உற்பத்தித் திறன் 10% இனால் அதிகரித்தமையும் தவறுகளின் வீதம் 30% இனால் குறைக்கப்பட்டமையையும் ஆய்வுகள் காட்டியுள்ளன.

சிறந்த ஒளியேற்றம் என்பது கூடுதலான வெளிச்ச அலகுகள் உயர்ந்த மின்சாரச் சிட்டைகள் என்பதைக் கருதுவதில்லை. பெரிய, உயர்ந்த யன்னல்கள் மூலம் பகல் வெளிச்சத்தையும் கூரைத் தகடொன்றை ஒளிக்கசிவுடைய ஒரு திரவியத்தைக் கொண்டு பதிலீடு செய்வதன் மூலம் மூகட்டு வெளிச்சத்தையும் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும். கண்களைக் கூச வைக்கும் வெளிச்சம் தொழிலாளருக்கு மிக்க அசௌகரியத்தை ஏற்படுத்தும். எனவே, யன்னல்களுக்கு மறைப்பினைப் பயன்படுத்துதல், வெளிச்ச மூலத்தையும் வேலை மேற்பரப்புகளையும் தகுந்த இடங்களில் அமைவு பெறச் செய்தல் என்பவற்றின் மூலம் கண்கூசும் ஒளியைத் தவிர்க்க முடியும். பொருத்தமான பின்னணியைத் தெரிவு செய்தல் மூலம் பார்வையின் கூர்மையும் பாரிய அளவில் மேம்படுத்தப்படலாம். வெளிச்ச மூலங்கள் நிழல் விழுவதைத் தடுக்கக் கூடியவாறும் அதி சிறந்த அளவில் காட்சியை பெற்றுக் கொள்ளக் கூடியவாறும் சரியான இடத்தில் அமைவு பெற வேண்டும். வெளிச்ச உபகரணங்களை ஒழுங்காகப் பேணி வருதல் இன்றியமையாதது. தொழிலாளர்களின் பார்வையை வெள்ளைகள் வாயிலாகத் திருத்தவேண்டிய தேவையும் சிலசமயங்களில் ஏற்படலாம்.

எமது வேலைத் தலங்களில் பொதுவாகக் காணப்படும் ஒரு பிரச்சினை இரைச்சலாகும். இடைக்கிடை எழுப்பப்படும் தாழ்ந்த செறிவுடைய இரைச்சல் உளத் திறன்களைப் பயன்படுத்த வேண்டிய ஒரு வேலையைக் குழப்ப முடியும். மறுபுறம் தொழிற்சாலைகளிலான உயர் செறிவு கொண்ட சத்தம் உடனல விளைவுகள் பலவற்றை உண்டுபண்ணும். எட்டு மணித்தியால காலம் அல்லது அதனிலும் கூடிய காலம் நீடிக்கும் 85 90 டெசிபல்களுக்கு மேற்பட்ட இரைச்சல் மட்டங்கள் பல ஆண்டுகளுக்குப் பின் செவிட்டுத் தன்மையைத் தோற்றுவிக்கக் கூடியவை. உயர் சத்தமுடைய சூழல்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் துணிவு குறைவானதாகும். எச்சரிக்கை அலறல்கள் பின்னணிச் சத்தத்தினால் மறைக்கப்படுவதால் அத்தகைய சூழல்கள் விபத்துகளுக்கும் வழிகோல முடியும். உயர் சத்தம் குருதிக் கலன்களை ஒடுங்கச் செய்து அதன் மூலம் குருதி அமுக்கத்தை உயர்த்தும்.

சத்தத்தைக் கட்டுப்படுத்துவதில் முதலாவது நடவடிக்கையாக அமைய வேண்டியது, பொறியியல் ரீதியான கட்டுப்படுத்தல் நடவடிக்கைகள் மூலம் தோற்றுவாயினிடத்தில் சத்தத்தைக் குறைத்தலாகும். அடுத்ததாக தடைகளையும் சுவர்களிலும் உட்கூரைகளிலும் ஓசையை உறிஞ்சும் திரவியங்களை பயன்படுத்துவதன் மூலம் ஓசை அலைகள் பரவுவதைத் தடுப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இறுதியான பாதுகாப்பு நடவடிக்கையாக அமையக்கூடியது செவிப் பாதுகாப்பு உபகரணங்கள் போன்ற சுய பாதுகாப்பு வழிகளைப் பயன்படுத்துவதும் ஓசைக்குத் தாக்கமுறும் காலத்தை வரையறுப்பதுமாகும்.

கதிர்வீச்சு ஆபத்து இரு வகைப்பட்டது : ஒன்று எக்ஸ் கதிர்கள் போன்ற அயனாக்கக் கதிர்வீச்சு மற்றது செங்கீழ்க் கதிர்ப்பும் கழியூதாக் கதிர்ப்பும் போன்ற அயனாக்காத கதிர்ப்பாகும். செங்கீழ்க் கதிர்வீச்சு வெப்பமேற்றிய செக்கச் சிவந்த பொருள்களிலிருந்து வெளிவிடப்படுகின்றது. அத்தகைய கதிர்வீச்சு வெளிப்பட்டு நிற்றல் கண் வில்லையில் ஒளிபுகாவியல்பு அல்லது கண்புரை (கற்றாக்ட்) போன்றவற்றைத் தோற்றுவித்து, வாழ்க்கையின் ஆரம்ப காலத்திலேயே குருட்டுத் தன்மைக்கு வழிவகுக்கும். கழியூதா ஒளி வழமையாக காய்ச்சியிணைத்தலின் போது வெளிவிடப்படுகிறது. அது கண்களில் தீவிரமான அழற்சியை ஏற்படுத்தி பல நாட்காலம் வேலைக்கு வரமுடியாத நிலையை விளைவிக்கும். எனவே, இத்தகைய ஆபத்துக்களுக்குத் தம்மை வெளிப்படுத்தி நிற்கும் தொழிலாளர்கள்

சகல வேலைகளிலும் பொருத்தமான கண் பாதுகாப்புச் சாதனங்களை அணிதல் இன்றியமையாததாகும்.

## இரசாயன ஆபத்துக்கள்

அலுவலகங்கள், வைத்திய சாலைகள், பாடசாலைகள், விவசாய பண்ணைகள், தொழிற்சாலைகள் என்பவை உட்பட வேலைத் தலங்கள் அனைத்திலும் வேறுபட்ட அளவுகளில் இரசாயனப் பொருட்கள் பல பயன் படுத்தப்பட்டு வருகின்றன. இரசாயனப் பொருள்கள் அனைத்தும் உள்ளார்ந்த ரீதியில் தீங்கு பயக்கக் கூடியவை. அது நஞ்சாக அமையுமா அல்லது பரிகாரமாக அமையுமா என்பதைத் தீர்மானிப்பது பயன்படுத்தப்படும் அதன் வேளையொன்றிற்கான அளவாகும். இரசாயனப் பொருள்கள் எமது வாழ்வில் நன்மைக்கான மாற்றங்களைச் செய்துள்ளன; ஆயினும், அவை எச்சரிக்கையுடனேயே பயன்படுத்தப் படுதல் வேண்டும். இரசாயனப் பொருள்கள் சில ஏனையவற்றைக் காட்டிலும் கூடிய நச்சுத்தன்மை வாய்ந்தவையாக அறியப்பட்டு வழமையாக ஆபத்து மிகுந்த இரசாயனப் பொருள்களாக விவரிக்கப்படுகின்றன. இரசாயனப் பொருள்கள் சருமத்தி னூடாகவோ சுவாசத் தொகுதியி னூடாகவோ அல்லது வாயினூடாகவோ மனித உடலைச் சென்றடைகின்றன. தீயவிளைவுகள் உடனடியாகத் தோன்றலாம்; அல்லது சிலவேளை களில் 25-30 ஆண்டுகளுக்குப் பின்னரும் தோன்றலாம். விளைவுகள் எளிய தோல் அழற்சி தொடக்கம் ஒவ்வாமை, மூச்சடைப்பு, புற்றுநோய் என்பவை வரை வேறுபட்டவையாக உள்ளன. வேலைத் தலங்களில் இரசாயனப் பொருள்கள் சேர்தல் தீ அபாயத்தையும் ஏற்படுத்தக்கூடியதாகும். அது பொறித் தொகுதி, உற்பத்திப் பொருள்கள் என்பவற்றுக்குப் பாதகமான விளை வினைத் தர முடியும்.

இரசாயனப் பொருள்களினால் விளையும் ஆபத்துக்களைக் கட்டுப் படுத்துவதில் அடிப்படையான தேவைப்பபாடு திட்டமிடற் கட்டங்களில் இரசாயனப் பொருளை முதலில் இனங்கண்டு செயற்படுவதாகும். இயலுமாயின் நச்சுத்தன்மை வாய்ந்த இரசாயன பொருள்களை நச்சுத்தன்மை யற்ற அல்லது நச்சுத்தன்மை குறைந்த இரசாயன பொருள்களால் பிரதியீடு செய்யலாம். அவ்வாறில்லாவிடில், இரசாயனப் பொருளை தொழிலாளரின் தொடுகைக்கு உட்படாது தடுப்பதற் கான முயற்சிகள் மேற்கொள்ளப்ப படுதல் வேண்டும். சிறந்த காற்றோட்ட வசதியளித்தல் இன்றியமையாததாகும். இரசாயனப் பொருட்களை களஞ்சியப் படுத்துவதில் கடுமையான பாதுகாப்பு விதிகள் அனுசரிக்கப் படுதல் வேண்டும். இரசாயனப் பொருள்களைக் கையாளும் தொழிலாளர்களுக்கு அதில் பயிற்சி யளிக்கப்பட வேண்டியது டன் அவர்கள் கையாளும் இரசாயனப் பொருள்களின் விளைவுகள் குறித்து அவர்களுக்கு அறிவூட்டப்படுதல் வேண்டும். அவசர நிலைகளுக்கு ஆயத்தமாக இருத்தல் விபத்துக்களின் விளைவுகளைப் பெரு மளவிற் குறைக்க உதவும்.

## உள-சமூக ஆபத்துக்கள்

வேலையின் போதான பல காரணிகள் தொழிலாளரின் உள நலனைப் பாதிக்கமுடியும். மகிழ்ச்சியில்லா ஒரு தொழிலாளரிட மிருந்து நாம் சிறந்த பயனை எதிர்பார்க்க முடியாது. வேலையின் தன்மை, நிறுவகத்தில் நபரொருவர் வகிக்கும் இடம், தொழில் அபிவிருத்தி, நெருக்கடி வாய்ந்த நிலைகள், வேலைச் சூழல், நிறுவகத்தின் கட்டமைப்புப என்பபன ஒருவரது உள நலனைப் பாதிக்க முடியும். எனவே, திருப்தி யினத்தையும் மன உளைச்சலையும் ஏற்படுத்தும் வேலைசாரா காரணிகளை இனங்காண வேண்டியது அவசிய மாகும். அவற்றை நீக்கி, வேலையைக் கூடிய அளவில் திருப்திகரமானதாக ஆக்குதல் வேண்டும்.

## மனிதர்-வேலைச் சூழல் உறவு சார்ந்தவை

இது தொழிலாளருடன் வேலையையும் பொறிகளையும் பொருந்த வைத்தலைக் குறிக்கும். கால ஓட்டத்தில் பொறிகளும் வேலையும் துரிதமாக மாற்றமடைந்து வந்துள்ளன. ஆனால், மனிதனின் மாதியமைப்பு அதி நீண்ட காலமாக ஒரே நிலையிலேயே இருந்து வருகிறது. அனைவரும் ஒரே மாதிரியானவர்களும் அல்லர்; சிலர் ஏனையோரைக் காட்டிலும் உடல் உள ரீதியில் பருத்தவர்களும் பலம் வாய்ந்தவர்களுமாவர். வேலையைத் திட்டமிடும் பொழுது இவ் வேறுபாடுகள் கருத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். மனித வினைத்திறனை மேம்படுத்து வதற்கும் மனித சக்தியின் வீண் உபயோகத்தைக் குறைப்பதற்கும், மனிதர் வேலைச் சூழல் உறவுத் தத்துவங்கள் கருத்திற் கொள்ளப் படலாம்.

## வேலைத்தல வடிவமைப்பு

உற்பத்தித் திறன் வாய்ந்த வேலைக்கு நன்கு வடிவமைக்கப்பட்ட வேலைத்தலம் முக்கியமானதாகும். தொழிலாளர்கள் வழமையாக ஒத்த ஒரே தொழிற்பாடுகளை பல்வேறு தடவைகள் திரும்பத் திரும்பச் செய்ய வேண்டி யுள்ளது. அவற்றை அவர்கள் துரிதமாகவும் எளிதாகவும் செய்ய முடியுமாயின் உற்பத்தித் திறன் உயரும்; தரமும் மேம்படும். ஒரே தொழிற் பாடுகளை நூறு தடவைகளுக்கு மேல் அவர்கள் மீண்டும் மீண்டும் செய்ய வேண்டியிருப்பதால் சிறிது சிறிதான திருத்தங்கள் மூலம் எய்தப்படும் நன்மையும் பல மடங்குகள் பெருக்க மடையும். வேலைசார் விகாரமான உடற்தோற்ற நிலைகளும் அசைவுகளும் மிகுந்த களைப்பு, தாழ்ந்த உற்பத்தித் திறன், தாராளம் என்பவற்றைக் கருதும். வேலை மேற்பரப்புகளில் எளிய தருத்தங்களைச் செய்தல் அன்றேல் கருவிகளையும் பொருள்களையும் எளிதில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக வைத்தல் என்பன பாரிய முழுமையான பயனைத் தரமுடியும்.

## வேலைசார் உடற்றோற்ற நிலைகள்

உட்கார்ந்திருத்தலோ நிற்றலோ எதுவாயினும் வேலைசார் உடற்றோற்ற நிலை சௌகரியமானதாகவும் நெகிழ் தன்மை வாய்ந்ததாகவும் இருக்க வேண்டும். இல்லாவிடின் அது களைப்பு, தசை எலும்புக் கூட்டுக் கோளாறுகள், குறைந்த வெளியீடு என்பவற்றுக்கு வழி வகுக்கும். தொழிலாளர்களிடமிருந்து அதிசிறந்த வேலைபபப் பயனைப் பெற்றுக் கொள்வதற்கு வேலை நிறைவேற்றப் படும் உயரம் ஆளின் உயரத்திற்கும் வேலையின் தன்மைக்கும் பொருத்தமான தாகவும் சௌகரியமானதாகவும் இருத்தல் வேண்டும். வேலைக்கு அமரும் ஆசனம் தொடர்பில் சிறப்பான கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். பாரமான சுமைகளைத் தூக்குவதில் சரியான உடற்றோற்ற நிலையை பேணுதலும் பலம் மிக்க தசைகளைப் பயன்படுத்துதலும் தசைக்கு ஏற்படக்கூடிய சேதங்களைத் தடுக்கும்.

33 ஆம் பக்கம் பார்க்க)



17095

# தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் - 1996

கைத்தொழில் உற்பத்தித் துறைக்கான தேசிய உற்பத்தித் திறன் விருதுகள் வழங்கும் திட்டம் 1993 இல் வணிக முகாமைக்கான தேசிய நிறுவனத்தால் (NIBM) தொடக்கி வைக்கப்பட்டது. இத்திட்டம் 1996 இலும் நான்காவது வருடமாக செயற்படுத்தப் பட்டது. ஆசிய உற்பத்தித் திறன் தாபனத்தின் உதவியுடன் இத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## குறிக்கோள்

உற்பத்தித் திறன் விருதுகளின் பிரதான குறிக்கோள், உற்பத்தித் திறன் செயலாற்றுகையில் போட்டி விருத்தி நிலையைத் தூண்டுவதும், ஒட்டுமொத்த உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கான நிறுவனங்களின் முயற்சிகளுக்கு தேசிய அங்கீகாரம் அளிப்பதன் மூலம் இலங்கையின் கைத்தொழில் துறையின் உற்பத்தித் திறன் தொடர்பான விழிப்புணர்வினை மேம்படுத்துவதுமாகும். இது தவிர இத்திட்டம் பின்வரும் குறிக்கோள் களையும் கொண்டுள்ளது.

- ❒ பல்வேறு நிறுவனங்களுக்கிடையே உற்பத்தித் திறன் விழிப்புணர்வை மேம்படுத்தல்.
- ❒ நிறுவனங்கள் உற்பத்தித்திறனை முகாமை செய்வதற்கு தூண்டுதல் அளிப்பதும், குறைந்த உற்பத்தித் திறனுக்கான காரணங்களை கண்டறிந்து அவற்றுக்கு உதவி செய்து வழிகாட்டுதலும்.
- ❒ உற்பத்தித் திறனின் பல்வேறு காரணிகள் தொடர்பாகவும், கைத்தொழில் மட்டத்திலான உற்பத்தித் திறன் சுட்டெண்களைத் தொகுத்தல்.

## திட்டம்

1. இத்திட்டம் கைத்தொழில் துறையில் செயல்பட்டு வரும் நிறுவனங் களுக்கான ஒரு போட்டி வடிவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. சார்பு ரீதியில் ஒவ்வொரு நிறுவனத்தினதும் உற்பத்தித் திறன் மட்டங்களையும் உற்பத்தித் திறன் வளர்ச்சியையும் நிர்ணயம் செய்து, தேசிய விருதுகளை வழங்குவதற்காக இப்போட்டி நடாத்தப்படுகின்றது.
2. போட்டி நடாத்தப்படுவதற்கு 3 வருடங்களுக்கு முன்னர் உற்பத்தியைத் துவக்கிய இலங்கையின் கைத்தொழில் அலகுகளில் இருந்து ஒவ்வொரு வருடமும் உற்பத்தித் திறன் பெறுபேறுகள் குறித்த வருடாந்த தரவுகளும், தகவல்களும் திரட்டப்படுகின்றன. பங்கேற்கும் நிறுவனங்கள் தேசிய வணிக முகாமை நிறுவனத்தினால் வழங்கப்படும் வினாக்கொத்தில் சம்பந்தப்பட்ட தகவல்கள் அனைத்தையும் வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகின்றன.
3. இவ்விருதுகள், முன்னைய இரு வருடங்களின் உற்பத்தித் திறன் செயலாற்றுகையுடன் ஒப்பிடும் பொழுது போட்டி நடத்தப்படும் ஆண்டின்போது சாதித்துக் கொள்ளப்பட்டுள்ள உற்பத்தித் திறன் செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்றது.
4. பங்கேற்கும் நிறுவனங்கள் (ஐந்தொகை மற்றும் இலாப நட்ட கணக்கு என்பவற்றை உள்ளடக்கிய) வருடாந்த கணக்குகளின் பிரதிகளையும் கடந்த 3 வருடங்கள் தொடர்பான விவரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.
5. போட்டியில் பங்கேற்கும் நிறுவனங்கள் சரியான, உண்மையான தகவல்களை வழங்கும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

## அளவுகோல்

நிறுவனங்களின் உற்பத்தித் திறன் செயல்பாடு தொடர்பான மதிப்பீடு உற்பத்தித் திறனின் அளவு ரீதியான மற்றும் தர ரீதியான அளவு கோல்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.

### 1. அளவு ரீதியான அளவுகோல்கள்

உற்பத்தித் திறன் விருத்தி தொடர்பான மதிப்பீடும், அதற்கூடாக விருதுகளும் நிறுவனமொன்றின் மனித வலு, பொருட்கள், மூலதனம் மற்றும் வலு போன்ற முக்கிய உள்ளீடுகளின் மொத்த காரணி உற்பத்தித் திறன் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டுள்ளன. இக்காரணிகள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விதத்தில் நிறைவேற்றப்படுகின்றன.

### 2. தர ரீதியான மதிப்பீடுகள்

உயர் அளவில் உற்பத்தித் திறனை சாதித்துக் கொள்வதற்கு மிகக் கவனமான மூலவளத் திட்டமிடல் அவசியமாகும். மிக முக்கியமாக உயர் முகாமையின் முழு அளவிலான அர்ப்பணிப்பும், அனைத்து ஊழியர்களினதும் ஈடுபாடும் இதற்கு அவசியமாகும். எனவே, உற்பத்தித் திறனை விருத்தி செய்வது தொடர்பாக நிறுவனம் எடுக்கும் முன் முயற்சிகளும் இந்த விடயத்தில் கவனத்தில் எடுக்கப் படுகின்றன.

### 3. உற்பத்தித் திறன் விழிப்புணர்வு

- ❒ தரம் மற்றும் தரம் தொடர்பான விழிப்புணர்வு
- ❒ புத்தாக்க முயற்சிகள்.
- ❒ பயிற்சி மற்றும் மனித மூலவள அபிவிருத்தி
- ❒ ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்.
- ❒ பங்கேற்புக் கலாசாரம்

என்பன தர மதிப்பீடு தொடர்பாக கவனத்தில் எடுக்கப்படும் பிரதான அளவுகோல்களாகும்.

## தெரிவு

1. பொருட்கள், மூலதனம், வலு மற்றும் ஊழியம் ஆகிய நான்கு காரணிகள் தொடர்பாகவும் ஈட்டிக் கொள்ளும் புள்ளிகளையும், தர ரீதியான மதிப்பீட்டையும் அடிப்படையாகக் கொண்டு ஒட்டுமொத்த உற்பத்தித் திறன் புள்ளியை வைத்து விருதுக்குரியவர்கள் தெரிவு செய்யப்படுகின் றார்கள்.
2. கைத்தொழிற் துறை, கழகங்கள், நிறுவனங்கள், அரசாங்கம் மற்றும் தேசிய வணிக முகாமை நிறுவனம் என்பவற்றின் நிபுணர்களைக் கொண்ட ஒரு குழு வெற்றியீட்டு கின்றவர்களை தெரிவு செய்கின்றது.
3. வழங்கப்பட்டுள்ள ஏதேனும் ஒரு தகவலை பரீட்சித்துப் பார்ப்பதற்கு அல்லது மேலும் ஏதேனும் தகவல்களைக் கேட்டுப் பெறுவதற்கு தனது தற்றுணிபில் சம்பந்தப்பட்ட அலகுக்கு விஜயம் செய்வதற்கு நடுவர் குழு தீர்மானிக்கலாம்.
4. இந்த விருதுகளுக்கென பத்து நிறுவனங்கள் தெரிவு செய்யப் படுகின்றன.

# தேசிய உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் உள்ள இடையூறுகள்

பிராங்ளின் அமரசிங்க
செயலாளர் நாயகம்
இலங்கை முதலாளிமார் சம்மேளனம்

ஜோஸப் புரொகேபெங்கே கூறுகிறார் : "ஒரு நாட்டின் போட்டித் திறனும் தாக்கத் திறனும் அதன் தொழில் முயற்சிகளின் உற்பத்தித் திறனின் எளிமையான அதே அளவினதாக இருந்து வரவில்லை". அது அவ்வாறு இருக்கவும் முடியாது. அரசாங்கம் நாட்டைச் சரியாக நிர்வகிக்காவிட்டால், இறுதியில், தொழில் முயற்சியாளர்கள் உற்பத்தித் திறனற்றவர்களாக மாறும் ஆபத்தும் உள்ளது. தேசிய உற்பத்தித் திறன் பல்வேறு அரசியல், சமூக, கலாசார மற்றும் மிக முக்கியமாக பொருளாதார சக்திகளிலேயே தங்கியுள்ளது. இவையனைத்தும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. உற்பத்தித் திறன் மீது அரசாங்கம் நேரடியாகவும் அதே போல மறைமுகமாகவும் தாக்கத்தை எடுத்து வருகிறது.

அரசாங்கத்தின் நேரடித் தலையீடு பாதைகள், தொலைத் தொடர்புகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதிலும், நிர்வாக அமைப்பிலும் இடம் பெறுகிறது. அது உற்பத்தித் திறன் ஊக்குவிப்புக்கள் மற்றும் தனியார் துறைக்கான திட்டங்கள் என்பவற்றையும் உள்ளடக்குகிறது. கருதுகோள்களை ஜனரஞ்சகப்படுத்துதல் மற்றும் மேம்படுத்தல், உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நிறுவனங்களுக்கு ஆதரவளித்தல் என்பவற்றிலிருந்து மறைமுக அரசாங்கத் தலையீடு வருகிறது.

இத்தகைய ஆதரவு வழிமுறைகளை பேரண்ட உற்பத்தித் திறன் காரணிகள் என அழைக்க முடியும். தேசிய உற்பத்தித் திறனில் நாம் விருத்தி நிலையை எடுத்து வர வேண்டுமானால், இவை அத்தியாவசியமாகும். அரசாங்கத்தினால் மட்டுமே பேரண்ட மட்டத்தில் உற்பத்தித் திறனை விருத்தி செய்ய முடியும் என இனங் காணப்பட்டுள்ளது. அதற்கு அரசாங்கம் பின்வரும் துறைகளில் கவனஞ் செலுத்த வேண்டியுள்ளது:

1. அமைப்பு ரீதியான மாற்றம்.
2. கல்வி மற்றும் பயிற்சிக் கொள்கை
3. ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்.
4. உள்கட்டமைப்பும் தொழில்நுட்ப இடமாற்றமும்.
5. சுற்றுச்சூழல்
6. வலு
7. சர்வதேச வணிகம்.
8. அரசியல் சூழ்நிலை
9. ஆதரவான சட்ட சீர்திருத்தங்கள்

உலக வங்கியுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட "2000 ஆவது ஆண்டில் இலங்கை நடவடிக்கைக்கான ஒரு நிகழ்ச்சிநிரல்" என்ற ஆவணம் முக்கியமான பல விடயங்களை முன்வைக்கிறது.

> "இலங்கையின் பொருளாதாரச் செயலாற்றுகையை மீளாய்வு செய்யும் பொழுது முக்கியமான சில கொள்கைத் துறைகளை கண்டு கொள்ள முடிகிறது. பலவீனமான பேரண்டப் பொருளியல் முகாமை, தனியார் துறை அபிவிருத்திக்கான சட்ட மற்றும் ஊக்குவிப்பு முறைகளில் உள்ள குறைபாடுகள், இறுக்கமான ஒழுங்குவிதிகள் மற்றும் பொருத்தமற்ற விவசாய மற்றும் நிதிசார் துறைக் கொள்கைகள் என இவற்றை விளக்கலாம். ஆதரவான நிறுவனக் கட்டமைப்பொன்றை உருவாக்குவதில் பொதுத் துறைக்குள்ள ஆற்றல் எழுச்சியடைந்து வரும் ஒரு பிரச்சினையாகும்."

நான் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருக்கும் துறையான கைத்தொழில் உறவுகளில் இங்கு கவனஞ் செலுத்த விரும்புகிறேன். கைத்தொழில் உறவுகள் இரு முக்கிய அம்சங்களில் அதாவது, முதலாளிமார் மற்றும் தொழிலாளர்களில் கவனஞ் செலுத்தி வந்த போதிலும், கைத்தொழில் உறவுகளின் ஒட்டுமொத்த சூழ்நிலையையும் நாங்கள் கவனத்தில் எடுப்பது அவசியமாகும். இது குடும்பங்கள், பொதுமக்கள், அதிகார வர்க்கம், முதலாளிமார் மற்றும் தொழிலாளர்களின் அமைப்புக்கள், சர்வதேச முகவர்கள், வாடிக்கையாளர்கள், தொடர்பு சாதனங்கள் போன்ற சக்திகளை கவனத்துக்கு எடுத்து வருகின்றது. இச்சக்திகளின் வெளி நிர்ப்பந்தங்களுக்குட்பட்டு முடிவுகள் எடுக்கப்படுகின்றன. பல முதலாளிமாரினால் இந்நிலைமையை கிரகித்துக் கொள்ள முடிவதில்லை.

முதலில் அதிகார வர்க்கத்தையும், அரசியல்வாதிகளையும் நோக்குவோம். இச் சக்திகள் கைத்தொழில் உறவுகளில் மிதமிஞ்சிய அளவில் தலையீடுகளை மேற்கொண்டு வருவதனால் தொழில்முயற்சி மட்டத்தில் கூட்டாகப் பேரம் பேசும் நிலை குறைவாகவே காணப்படுகின்றது. தொழில் முயற்சி மட்டத்திலான அதிக அளவிலான பேச்சு வார்த்தைகளும், பேரம் பேசுதலும் தொழில் முயற்சி மட்டத்திலான உற்பத்தித் திறனை பாதித்து பல இடையூறுகளை களைந்திருக்க முடியும்.

தற்போதைய முறையில் தொழில் நிபந்தனைகள் பொதுவாக சட்டவாக்கங்களாக இருந்து வருகின்றன. நாட்டில் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் பெரும்பாலான ஊழியர்களின் வேதனங்களை நிர்ணயித்து வரும் வேதனங்கள் சபையைப் பொறுத்த வரையில் வாழ்க்கைச் செலவு காரணிகளையும் அரசாங்கத்தின் முடிவுகளையும் அடிப்படையாகக் கொண்டு காலத்திற்குக் காலம் வேதனங்கள் நிர்ணயஞ் செய்யும் ஒரு நிலையையே நாங்கள் பார்க்கிறோம். இவை உற்பத்தித் திறன் தொடர்பான அளவீடுகளாக இருந்து வரவில்லை. மாறாக, வெறுமனே அரசியல் காரணங்களுக்காகவே பொதுத் துறையில் வேதனங்கள் அதிகரிக்கப் படுகின்றன.

அரசாங்கத்தின் கைத்தொழில்மயமாக்கல் உத்தி 1989 இல் வேதனங்களை உற்பத்தித் திறனுடன் பிணைப்பதாக வாக்குறுதி அளித்திருந்த போதிலும் அப்படி எதுவும் நடந்து விடவில்லை. அரசியல் விருப்பும் அர்ப்பணிப் புணர்வும் கொண்ட அதிகார வர்க்கம் இது வரையில் காணப்படவில்லை. உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கான அதிகாரிகளின் முயற்சிகளுக்கிடையே அல்லது அரசியல் முயற்சிகளுக்கிடையே எத்தகைய ஒருங்கிணைப்பும் நிலவி வரவில்லை. உற்பத்தித் திறன் வருடாமாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த

1996 ஆம் வருடத்தின் போது இரு முக்கிய அமைச்சுக்களாக இருந்து வரும் தொழில் அமைச்சு மற்றும் கைத்தொழில் அமைச்சு என்பவற்றுக்கிடையே உண்மையான ஒத்துழைப்பு நிலவி வரவில்லை. வருடத்தின் பிற்பகுதியில் தொழில் அமைச்சில் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அந்த ஒத்துழைப்பில் முக்கியமான அர்ப்பணிப்பு எதனையும் காண முடியவில்லை.

எவ்வாறிருந்தபோதும், சமூக பங்காளர்களுடன் மிக நெருக்கமாகப் பணியாற்றுவதற்கு தூண்டுதல் வழங்குவதற்கென மிகச் சிறிய அளவிலேயே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. மாறாக, அதிகாரத்தில் அமர்ந்திருந்தவர்களிடம் இருந்து வந்த குழப்பமூட்டும் சமிக்ஞைகள் சமூக பங்காளர்களிடையே ஏற்கனவே நிலவி வந்த மோசமான உறவுகளை மேலும் பிளவுபடுத்தியது. சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு முத்தரப்புவாதம் அவசியம் என சர்வதேச தொழில் தாபனம் ஆதரித்து பேசி வருகின்றது. இந்த முத்தரப்பு வாதம் செயற்படுவதற்கு அரசாங்கம் களத்திலிருந்து வெளியேறி சமூகப் பங்காளர்கள் பொதுக் குறிக்கோள்களை இனங்கண்டு கொள்வதற்கு உதவும் வகையில் ஆதரவளிக்கும் ஒரு பங்கினை அது வகித்து வருவது அவசியமாகும். அரசாங்கம் பக்கம் சார்ந்ததாக இருந்து வந்தால் அல்லது கடுமையான அதிகார கெடுபிடிகளை பின்பற்றி வந்தால் ஜனநாயக அரசு ஒன்றில் பயனுள்ள எதுவும் ஏற்பட முடியாது.

அரசாங்க அதிகாரிகளைப் பொறுத்த வரையில் திறன்கள் மற்றும் தொழில் திறமை என்பன குறித்து ஒரு மதிப்பீடு அவசியமாகும். தொழில் திணைக்களம் போன்ற சிறப்பு திணைக்களங்களின் தேவைகள் குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். இந்த அமைச்சில் பணி புரிவதற்கு சில விசேஷ திறன்கள் வேண்டியுள்ளன. உதாரணமாக, மத்தியஸ்த மற்றும் சமரசப் பேச்சுவார்த்தைகளை நடத்தும் பொறுப்பை பயிற்றப்படாத ஒருவரிடம் விட முடியாது. தொழில் திணைக்களத்தால் பொதுவாக மேற்கொள்ளப்படும் சட்ட விளக்கமளித்தல் போன்ற பணிகளைப் பொறுத்த வரையில் இந்நிலைமை மேலும் தீவிர நிலையை அடைகின்றது.

உற்பத்தித் திறன் என்பது தொழில் முயற்சி மட்டத்தில் பேசித் தீர்க்க வேண்டிய ஒரு விடயமாகும். சம்பள அதிகரிப்புக்களுக்குப் பதிலாக உற்பத்தித் திறன் அதிகரிப்பு குறித்து தொழில் முயற்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும் தரப்பினருடன் தொழில் திணைக்களம் தலையிட வேண்டியுள்ளது. பெரும்பான்மை தொழில் சங்கங்களுடன் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்களுக்கு சிறு எண்ணிக்கையினர் சவால் விட்டு அவற்றைக் குலைத்துவிடக்கூடிய நிலையில் இருந்து வருவதனால் தொழில் அமைதிக்கும் அது பங்கம் விளைவிப்பதாக உள்ளது.

மேலும், மோசமான போக்குவரத்து, வீட்டு வசதிகள் இன்மை, பொருத்தமான கல்வி நிறுவனங்கள் மற்றும் மருத்துவ சேவைகள் என்பன கிடைக்காமை போன்றவற்றாலும் வேலைத்தலங்களில் உற்பத்தித் திறன் மீது தாக்கம் ஏற்படுகிறது. இப்பிரச்சினைகள் தொடர்பாக தனியார் துறை வேலை கொள்வோர் ஏன் கவனஞ் செலுத்த வேண்டும். தாமதமாக வேலைக்கு வருவதற்கு பொதுவாக போக்குவரத்துப் பிரச்சினையே காரணமாக காட்டப்பட்டு வருகிறது. குறிப்பாக, இரவு நேரங்களில் போக்குவரத்து வசதிகள் குறைவாக இருந்து வருவதனால் மாற்று நேர வேலையில் தொழிலாளர்களை ஈடுபடுத்துவதும் சாத்தியமில்லை. இது தவிர, வேலைக்குச் சமூகமளிப்பதிலும் வேலை முடிந்து வீட்டுக்குத் திரும்பிச் செல்வதிலும் சிரமங்களை அனுபவித்து வரும் தொழிலாளர்களிடமிருந்து சிறந்த உற்பத்தித் திறனை எதிர்பார்க்க முடியாது.

வீடமைப்பு தொடர்பான மோசமான திட்டமிடல் மற்றும் ஊக்கமிழக்கச் செய்யும் வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டங்களால் வேலை கொள்வோர் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதிகளை வழங்குவதில் தயக்கம் காட்டுதல் என்பவற்றின் விளைவாக பெருந்தொகையான தொழிலாளர்கள் தூர இடங்களில் இருந்து வேலைக்கு வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். இது நேரந் தவறுதல், வராமலிருத்தல், வேலை செய்யும் பொழுது களைப்பு என்பன காரணமாக திறமைக் குறைவு போன்ற தவிர்க்க முடியாத வகையில் குறைந்த உற்பத்தித் திறனை எடுத்து வருகின்றன.

ஊழியர்கள் வழக்கமாக தனியார் மருத்துவச் சேவைகளை நாட வேண்டியிருப்பதனாலும், கல்வியின் நேரடி மற்றும் மறைமுகச் செலவுகள் உயர்ந்து வருவதனாலும் இவற்றை ஈடு செய்வதற்காக அனுகூலங்களை அல்லது வேதனங்களை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தங்களை வேலை கொள்வோர் எதிர்கொண்டு வருகின்றனர். ஒரு தொழிலாளி தனக்கு உரித்தான வாழ்க்கைத் தரத்தைப் பேணி வரக்கூடிய விதத்தில் தனக்கு வேதனம் வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுப்பது நியாயமானதாகும்.

இது சம்பளத் தொகுப்புக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் செயலாற்றுகையுடன் பிணைப்பு குறைவாக இருத்தல் போன்ற முக்கியமான பிரச்சினைக்கு எம்மை இட்டுச் செல்கிறது. சிங்கப்பூரிலும் அண்மைக் காலத்தில் மலேசியாவிலும் நெகிழ்ச்சித்தன்மையுடன் கூடிய வேதன முறைகள் பின்பற்றப்பட்டு வந்துள்ளன. தொழிலாளி தனது சம்பளத்தின் நிலையான ஒரு கூறினைக் கொண்டிருப்பதுடன் மிகுதி சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் ஆரோக்கிய நிலையுடன் இணைந்து தளம்பிச் செல்கிறது. சில நிறுவனங்கள் தளம்பிச் செல்லும் பகுதியை உற்பத்தித் திறனை நோக்கி திருப்பி விடுகின்றன; சில இலாபத்தை நோக்கி திருப்பி விடுகின்றன. என்னவாக இருந்தாலும், ஊழியர்கள் தாம் உருவாக்கும் செல்வத்திலும் அல்லது நிறுவனம் எதிர்நோக்கும் மோசமான கால கட்டங்களிலும் பங்குகொள்ள வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.

உற்பத்தித் திறன் என்பது தொழிலாளர்களைப் பொறுத்த ஒரு விடயமாக இருந்து வருகின்றது என்றும், தொழிலாளர்களிடையே வேலை ஒழுக்கம் இல்லாதிருப்பது உள்ளார்ந்த ஒரு குறைபாடாக உள்ளது என்றும் சில முதலாளிமார் கருதி வருகின்றனர். இது நியாயமற்றதும் ஏற்றுக் கொள்ள முடியாததுமான ஒரு வாதமாகும். சில வருடங்களுக்கு முன்னர், பத்து தெரிவு செய்யப்பட்ட கம்பெனிகளில் உற்பத்தித் திறனை உயர்த்தும் ஒரு திட்டம் செயற்படுத்தப்பட்டது. இக் கம்பெனிகள் இந்நிகழ்ச்சித்திட்டத்தில் ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் ஈடுபடும் என்ற நம்பிக்கையிலும், இவற்றின் முன்மாதிரியை பின்னர் ஏனைய

( 31 ஆம் பக்கம் பார்க்க)

# பொதுத்துறையில் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் எதிர்நோக்கும் சவால்

கலாநிதி சுதந்த ரணசிங்க

(மூத்த விரிவுரையாளர், முகாமைப் பட்டப் பின்படிப்பு நிறுவனம்)

இலங்கையின் சமூக பொருளாதார பின்புலத்தில் பொதுத் துறை வகித்து வரும் பங்கு சுதந்திரத்தின் பின்னர் முக்கியமான பல மாற்றங்களை எதிர்கொண்டுள்ளது. சட்ட ஒழுங்குப் பராமரிப்பு மற்றும் வருவாய் சேகரிப்பு என்பவற்றுக்கான ஊடகம் என்ற முறையில் பொதுத் துறை முன்னர் வகித்து வந்த பங்கு இப்பொழுது மாற்றம் கண்டுள்ளது. மாற்றங்களை எடுத்து வரும் முகவர் என்ற ஒரு புதிய பங்கினை இப்பொழுது அது ஏற்றுள்ளது. இந்த நிலை பொதுத் துறையினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளின் அளவு, அது உள்ளடக்கியுள்ள நிறுவனங்கள் மற்றும் ஆளணி என்பவற்றின் அளவு என்பவற்றில் பெருமளவுக்கு விரிவாக்கத்தை எடுத்து வந்துள்ளது. பொதுத் துறை இப்பொழுது அத்தியாவசிய சேவைகளை மட்டும் வழங்கிவரும் ஒரு துறையாக நோக்கப்படுவதில்லை. மூலவளங்களை விநியோகிக்கும் ஒரு துறையாகவும், உள்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியை மேற்கொள்ளும் ஒரு துறையாகவும், கொள்கை தலையீடுகளுக் கூடாக சமூக பொருளாதார அமைப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு துறையாகவும் அது நோக்கப்பட்டு வருகின்றது.

தற்பொழுது இலங்கையின் பொதுத் துறை, தேசிய மற்றும் மாகாண மட்டத்திலான பல்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள், பொதுக் கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள், அதிகார சபைகள், வங்கிகள் முதலிய வர்த்தக அடிப்படையிலான பெருந் தொகையான நிறுவனங்கள் என்பவற்றையும், அதேபோல பொலிஸ், ஆயுதப் படை என்பவற்றையும் தன்னகத்தே உள்ளடக்கியுள்ளது. உள்ளூராட்சி அமைப்பும் பொதுச் சேவைகளின் கண்காணிப்பின் கீழ் வருவதனால், நகரசபைகள், பிரதேச சபைகள் என்பவற்றையும் பொதுத் துறையின் விரிவான வகைப் படுத்தலுக்குள் நாங்கள் சேர்த்துக் கொள்ளலாம்.

எனவே, இந்த நிலையில், ஒரு சராசரி பிரஜையின் வாழ்க்கை, பிறப்பு தொடக்கம் இறப்பு வரையில் பொதுச் சேவைகளின் செல்வாக்குக்கு உட்பட்டே இடம்பெற்று வருகின்றது. பொதுச் சேவைகளின் விநியோகத்தில் காணப் படும் செயல் திறனின் மட்டமும் அதேபோல் மூலவளப் பயன்பாடும் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் முக்கியமான ஒரு தாக்கத்தை கொண்டிருக்க முடியும் என்பது தெளிவாகும். இக்கட்டுரை, இந்தப் பின்புலத்தில் நின்று, பொதுத் துறையின் உற்பத்தித் திறனை விருத்தி செய்வதுடன் சம்பந்தப்பட்ட முக்கியமான சில பிரச்சினைகளை முன்வைப் பதற்கும், மேலும் கலந்துரையாடலை தூண்டுவதற் கென, மாற்றங்கள் தொடர்பான கருத்துக்களை முன்வைப் பதற்கும் முயற்சிக்கின்றது.

## உற்பத்தித் திறனை விருத்தி செய்தல் என்ற சவால்

உற்பத்தித் திறன் என்பது, குறிப்பிட்ட ஓர் அளவு மூலவளங்கள் அல்லது உள்ளீடுகள் என்பவற்றின் விகிதாசாரத்துக்கேற்ப வெளியீட்டின் அளவினைக் கணிக்கும் ஒரு வழிமுறை யாகும். எனவே, இந்த வகையில், உற்பத்தித் திறன் வாடிக்கையாளருக்கு மதிப்பினை உருவாக்கும் கருத்தினை எடுத்துச் செல்கின்றது. இங்கு தரப்பட்டுள்ள வரைபடம் 1 இன் பிரகாரம், உயர்ந்த அல்லது தாழ்ந்த மட்டத்திலான உற்பத்தித் திறனை ஈட்டுதல் என்பது வெளியீட்டுக்கு ஊடாக வாடிக்கை யாளரின் மதிப்பினை உருவாக்கும் அளவில் தங்கியிருக்கும் ஒரு காரணியாக உள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், வெளியீடு (அதாவது, உற்பத்திப்பொருள் அல்லது சேவை) தனது பணத்துக்குரிய மதிப்பினைத் தரவில்லை என வாடிக்கையாளர் கருதினால் உற்பத்தித்திறன் (பயனுள்ள வெளியீடு) குறைவாகவே இருந்து வந்துள்ளதென வாதிடலாம். இந்த விடயத்தை மேலும் விளக்கும் பொருட்டு, பொதுத் துறையிலிருந்து ஓர் உதாரணத்தை எடுத்து நோக்குவோம்.

பிரஜை ஒருவர் தேசிய அடையாள அட்டை ஒன்றைப் பெற விரும்பினால், சம்பந்தப்பட்ட கிராம அதிகாரியிடமிருந்து விண்ணப்பப் படிவத்தை அவர் முதலில் பெற வேண்டும். அப்படிவத்தை உரிய முறையில் பூர்த்தி செய்து, புகைப்படம் மற்றும் முத்திரை என்பவற்றுடன் கிராம அதிகாரியிடம் கையளிக்க வேண்டும். அவர் அதனை பிரதேச செயலகத்துக்கு அனுப்பி வைப்பார். அங்கு ஒரு இலிகிதரினால் இந்த ஆவணம் மேலும் பரிசீலிக்கப்பட்டு, ஆட்பதிவு ஆணையாள ருக்கு அனுப்பி வைக்கப்படும். அங்கிருந்து தேசிய அடையாள அட்டை (வெளியீடு) விண்ணப்பதாரருக்கு (வாடிக்கையாளர்) தபாலில் அனுப்பி வைக்கப்படும். இதற்குப் பல மாத காலம் எடுக்கும். இந்த கால தாமதம் காரணமாக வாடிக்கையாளர் இடைக்காலத்தில் பலவித சிரமங்களை எதிர்நோக்குவார். போதாக்குறைக்கு இறுதியில் தனது கைக்கு கிடைக்கும் அடையாள அட்டையில் பெயர் உச்சரிக்கப்பட்டிருக்கும் விதத்தில் ஒரு எழுத்துப் பிழையிருக்கலாம். இந்த எழுத்துப் பிழை வெளியீட்டின் (தேசிய அடையாள அட்டையின்) வாடிக்கை யாளர் மதிப்பினை மேலும் குறைத்து விடும். எனவே, இங்கு உற்பத்தித் திறன் தாழ்ந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது.

பாரம்பரியமாக, குறிப்பிட்ட ஒரு தொகை உள்ளீடுகளுக்கான பயனுள்ள வெளியீடுகளின் விகிதாசாரமாக உற்பத்தித் திறன் கருதப்பட்டு வருகிறது. எனவே, ஒன்றில் உள்ளீடுகளை நிலையாக வைத்திருக்கும் அதே வேளையில் வெளியீட்டினை அதிகரிப்பதன் மூலம், உள்ளீடுகளின் அளவினைக் குறைத்து அதே அளவான வெளியீட்டினைப் பெற்றுக் கொள்வதன் மூலம் அல்லது உள்ளீடுகளைக் குறைத்துக் கொள்ளும் அதே வேளையில் வெளியீடுகளை அதிகரித்துக் கொள்வதன் மூலம் உற்பத்தித் திறனை அதிகரித்துக் கொள்ள முடியும் என்று நம்பப்படுகிறது. இங்கு இறுதியான கூறப்பட்ட வழிமுறை அரசாங்கத் துறையைப் பொறுத்தவரையில் மிகவும் கடினமான ஒரு தெரிவாக உள்ளது. அதாவது, உள்ளீடுகளைக் குறைத்து வெளியீட்டினை அதிகரித்துக் கொள்வதற்கான முயற்சிகள் அரசாங்கத் துறையில் மேற்கொள்ளப்படுவது மிக அரிதாகும்.

மேலும், உள்ளீடுகளை வெளியீடுகளாக நிலைமாற்றம் செய்யும் நிகழ்வுப்போக்கின் பரஸ்பரம் ஒன்றுடனொன்று சம்பந்தப்பட்டுள்ள பல்வேறு காரணிகளின் ஒரு பின் விளைவாகவும் உற்பத்தித் திறனை நோக்க முடியும். இறுதியில் ஒரு வெளியீட்டின் உற்பத்திக்கு வழிகோலும் வேறுபட்ட தனிநபர்களுக்கும் செய்முறைகளுக்கும் இடையில் நிலவி வரும் தொடர்பு இதில் மிக முக்கியமானதாகும். வாடிக்கையாளருக்கு பெறுமதியை அளிக்கக்கூடிய வெளியீடொன்றுக்கு இறுதி வடிவம் கொடுப்பதற்கு தனிநபர் முயற்சி மற்றும் சம்பந்தப்பட்ட செயல்முறைகள் என்பவற்றுக்கிடையில் சரியான அளவிலான ஒரு கலவை அமைய வேண்டும். அரசாங்கத் துறையில் வெளியீடுகளை எடுத்து வரும் நிகழ்வுப்போக்கில் பாரிய அளவிலான மூலவளங்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும், மோசமான முகாமை காரணமாக மனித முயற்சிக்கும் சம்பந்தப்பட்ட செயல்முறைகளுக்கும் இடையில் சரியான அளவிலான கலவை இடம் பெற்றிருக்கவில்லை என்பதனை அனுபவம் காட்டுகின்றது. எனவே, பொதுத் துறையின் திறனையீனம் மற்றும் மோசமான சேவை விநியோகம் என்பன குறித்து பொதுமக்களும் அதேபோல அரசியல்வாதிகளும் அடிக்கடி குறை கூறி வருகின்றனர்.

**அரசாங்கத் துறையில் உற்பத்தித் திறனில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்**

அரசாங்கத் துறையில் உயர் அளவிலான உற்பத்தித் திறனை சாதித்துக் கொள்ளும் பொருட்டு கிடைக்கக் கூடியதாக இருக்கும் மூலவளங்களை செயல்திறனுடனும் (அதாவது, சரியான விதத்திலும்) தாக்கமான முறையிலும் (அதாவது, சரியான நோக்கங்களுக் காகவும்) பயன்படுத்திக் கொள்ளக் கூடியவாறு பொது நிர்வாக முறை நெறிப்படுத்தப் படுவது அவசியமாகும். மேலும், வாடிக்கையாளர் பெறுமதி அல்லது பொது வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவு செய்வதில் ஆழ்ந்த அக்கறை காட்டப்படுதல் வேண்டும். பொதுத் துறையில் செயல்திறன் மட்டத்தையும் தாக்கத்தின் அளவையும் பல்வேறு காரணிகள் பாதித்து வருகின்றன.

மூலவளங்கள் எத்தகைய நோக்கங்களுக்காக முடக்கப்பட்டுள்ளன, மற்றும் மூலவளங்களைப் பயன்படுத்தும் முறைகள் என்பவற்றைச் சுற்றியே உற்பத்தித் திறன் விவாதத்தின் மிக முதன்மையான ஒரு பிரச்சினை கலந்துரையாடப்பட்டு வருகின்றது. பொதுத் துறையில் செயல்பட்டு வரும் தாபனங்கள் ஒரு தெளிவான நோக்கினையும், குறிக்கோளினையும் கொண்டிருந்தால் மட்டுமே இப் பிரச்சினைகளை தீர்த்து வைக்க முடியும். மக்களுக்கு உண்மையான வழிகாட்டுதல்களை வழங்குவதற்கு குறிப்பாக ஒரு தரிசனம் அவசியமாக உள்ளது என ஜோன் கோட்டர் குறிப்பிடுகின்றார். ஆனால், பல்வேறுபட்ட நிலைமைகளில் முன் முயற்சியைத் தூண்டுவதற்கும், பொருத்தமான விதத்தில் செயற்படுவதற்கும் அது தெளிவற்றதாக உள்ளது எனவும் அவர் கூறுகின்றார். தலைமைத்துவத்திலிருந்து வரும் ஒரு தரிசனம் குறிக்கோள்களை சாதித்துக் கொள்வதற்காக மக்களை சரியான வழியில் இட்டுச் செல்லும் ஒரு காரணியாக உள்ளது. மறுபுறத்தில், திட்டமிடப்பட்ட பணி குறிப்பிட்ட தாபனம் ஈடுபட்டுள்ள தொழிலைச் சுட்டிக்காட்டுகின்றது. எனவே, அது மூலவளங்களை முடக்குவதற்கான குறிக்கோள்களை உருவாக்கிக் கொள் வதற்கும், திட்டங்களைத் தயாரித்துக் கொள்வதற்குமான வழிகாட்டுதலை வழங்குகின்றது.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பொதுத் துறை நிறுவனங்கள் ஒரு தரிசனத்தினாலோ அல்லது பணித் திட்டத்தினாலோ வழிநடத்தப்பட்டு வருவதாகத் தெரியவில்லை. மாறாக, அவை வெறுமனே உயிர் வாழ்ந்திருப்பதற்கான வழியைத் தெரிவு செய்து கொண்டிருப்பது போல் தோன்றுகிறது. எனவே, இந்த நிறுவனங்களில் முடிவெடுக்கும் அதிகாரத்தில் அமர்ந்திருப்பவர்கள் "நாங்கள் இப்பொழுது செய்வதனை ஏன் செய்கின்றோம்" மற்றும் "நாங்கள் இதனை செய்யும் விதத்தில் ஏன் செய்கின்றோம்?" போன்ற அடிப்படைக் கேள்விகளை எழுப்புவார்கள் என எவரும் எதிர்பார்க்க முடியாது. எனவே, உற்பத்தித் திறன் விருத்தியைப் பொறுத்தவரையில் பொதுத்துறை நிறுவனங்கள் மிக முக்கியமான அடிப்படை மாற்றங்கள் எதனையும் மேற்கொள்ளும் என எதிர்பார்க்க முடியாது.

உற்பத்தித் திறனில் தாக்கத்தை எடுத்துவரும் மற்றொரு முக்கிய காரணி இந்நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களாகும். இலங்கையின் அரசாங்கத் துறையில் சுமார் 600,000 பேர் வேலையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இத் துறைக்கு 1997 இல் 18,600 கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளதுடன், இதில் வேதனங்கள் 17 சதவீதமாக உள்ளன. அரசாங்க ஊழியர்களின் உற்பத்தித் திறன், அவர்களுடைய தொழில் திறன்களிலும், அதே போல செயலாற்ற வேண்டும் என்ற அவர்களுடைய தூண்டுதலிலும் தங்கியிருக்கும். அரசாங்க உத்தியோகங்களுக்கான சம்பளங்கள் சார்புரீதியில் குறைந்த அளவில் இருந்து வருவது உண்மைதான்; ஆனால், அத்துறையில் கிடைக்கும் தொழில் பாதுகாப்பு, சமூக அந்தஸ்து மற்றும் சமூக பாதுகாப்பு போன்ற காரணங்களின் நிமித்தம் தகுதியும் அனுபவமும் பெற்றுக் கொண்டுள்ளவர்களை அது இன்னமும் கவர்ந்திழுத்து வருகிறது. எனினும், பெரும்பாலான அரசாங்க ஊழியர் களிடையே தன்னிச்சையான செயல் தூண்டல் மிகவும் தாழ்ந்த மட்டத்திலேயே இருந்து வருகின்றது. செயலாற் றுகையை அடிப்படையாகக் கொண்ட வெகுமதி முறைகள் இல்லாமலிருப்பது இதற்கான முக்கிய காரணமாக இருக்கலாம்.

இக்கட்டுரையாளர் கலந்துரை யாடிய அரச ஊழியர்களில்

பெரும்பாலானவர்கள் தெரிவித்த ஒரு கருத்து, அரச சேவையில் (ஒரு வரையறுக்கப்பட்ட சேவைகளில் தவிர) செயலாற்றுகையுடன் இணைந்த விதத்தில் வெகுமதிகள் வழங்கப்படுவதில்லை என்பதாகும். பதவியுயர்வுகள் பணிமூப்பு அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றன. செயலாற்றுகையை அடிப்படையாகக் கொண்ட பதவியுயர்வுத் திட்டங்கள் இருந்து வரவில்லை. மேலும், பெரும்பாலான அரச ஊழியர்கள் தமது அன்றாடக் கடமைகளை மேற்கொள்வதில் ஒரு விதமான மந்த கதியிலேயே இயங்கி வருகிறார்கள். இன்று நிலவி வரும் அரச சேவை வேலைக் கலாசாரத்தில் துரித சேவைக்கு இடமில்லை. சிறந்த செயல்பாட்டுக்கு வெகுமதி அல்லது மோசமான செயல்பாட்டுக்கு தண்டனை என்பவற்றுடன் இணைந்த விதத்தில் செயல்பாட்டைக் கண்காணிக்கும் ஒரு முறை இல்லாதிருப்பதே இதற்கான காரணமாக இருக்கலாம்.

வெவ்வேறு தொழில்களுக்குப் பொருந்தக்கூடிய செயல்பாட்டுக் குறிகாட்டிகள் பிரயோகிக்கப்படாமையும், அதன் விளைவாக, செயல்பாட்டு மதிப்பீட்டு முறையொன்று இல்லாதிருப்பதும் அரச துறையின் தற்போதைய தாழ் மட்ட செயலாற்றுகைக்கு பங்களிப்புச் செய்துள்ளன. பின்வரும் காரணங்களின் நிமித்தம் அரச துறையில் தெளிவான செயலாற்றுகைக் குறிகாட்டிகளை வகுத்துக் கொள்ள முடியாதுள்ளது என வாதிக்கப்படுகிறது:

1. (அ) (அரசாங்க சேவைகளுக்கு பணம் செலுத்த முடியாதிருப்பதனால், அச்சேவைகளிலிருந்து பயன் பெறுவதிலிருந்து எவரும் விலக்கப்படுவதில்லை மற்றும் (ஆ) (பொதுப் பொருட்களின் அதே வழங்கலை பலர் கூட்டாக நுகர்ந்து வருவதனால்) போட்டி நிலை நிலவாமை போன்ற காரணங்களால் தெட்டத் தெளிவான வெளியீட்டு அலகுகள் நிலவி வராமை.
2. தெளிவாக வரையறுக்கப்பட்ட உற்பத்திக் கருமம் குறைவாக இருத்தல். உற்பத்தி நிகழ்வுப் போக்கொன்றில் போல உள்ளீடுகளையும் அதேபோல வெளியீடுகளையும் அளவிடுவதில் உள்ள சிரமம்.
3. பன்முகப்பட்ட குறிக்கோள்கள், மற்றும்
4. வெளிக் காரணிகளின் எதிர்ட்டு நிலை: அதாவது, ஒரு நிறுவனத்தின் செயல்திறன் மற்றொரு நிறுவனத்தின் செயல் திறனில் தங்கியிருக்க முடியும்.

ஆனால், அரச துறையில் செயல்பாட்டு குறிகாட்டிகள் மற்றும் செயல்பாட்டு வெகுமதி முறைகளை அபிவிருத்தி செய்யாதிருப்பதை நியாயப்படுத்துவதற்கு மேற்கண்ட காரணங்களை முன்வைக்கக் கூடாது. வேலைச் செயலாற்றுகை என்பது, நிர்வாகம் ஒரு வேலையைச் செய்வித்துக் கொள்வதற்கும், வெற்றியை தோல்வியிலிருந்து பிரித்துக் கண்டறிவதற்கும், வெற்றிக்கு வெகுமதியளித்து தோல்விக்கு வெகுமதியளிப்பதைத் தவிர்ப்பதற்கும், வெற்றியிலிருந்து படிப்பினைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், தோல்விகளைத் திருத்திக் கொள்வதற்கும், பொது மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கும் இயலச் செய்து வருவதனால் அது (அதாவது, வேலையின் செயலாற்றுகை) மதிப்பிடப்பட வேண்டும் என்று "Reinventing Government" (1992) என்ற மிக முக்கியமான நூலில் ஒஸ்போர்ன் மற்றும் கெப்லர் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

வாடிக்கையாளர் திருப்தி அளவை உயர் உற்பத்தித் திறனின் ஒரு குறிகாட்டியாகக் கருத முடியுமாயினும், அரசாங்க சேவைகளைப் பொறுத்த வரையில் 'வாடிக்கையாளர்' குறித்த கருதுகோள் சற்றுச் சிக்கலான ஒன்றாக இருந்து வருவதனைக் காண முடிகிறது. ஒருபுறம், அரசாங்க சேவைகளை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர் எவரும் இல்லை; மறுபுறம், அரச ஊழியர்கள் பொது மக்களை தமது வாடிக்கையாளர்களாக கருதுவதில்லை. இந்நிலையில், வாடிக்கையாளர்களை அலட்சியப்படுத்தும் ஒரு போக்கு தோன்றலாம். சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் அரச சேவை உயர் அளவில் வாடிக்கையாளர்களை நோக்கி நெறிப்படுத்தப்பட்டவையாக இருந்து வருகின்றன. இது தொடர்பாக இலங்கை பெறுமதிமிக்க பல படிப்பினைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அரச துறையின் இன்றைய குறைந்த மட்டத்திலான உற்பத்தித் திறனுக்குப் பங்களிப்புச் செய்துள்ள மற்றொரு முக்கிய காரணி, சம்பந்தப்பட்ட நடைமுறைகளில் புத்தாக்கமும் மாற்றமும் அறவே இல்லாதிருப்பதாகும். இவ்விடயம் குறித்து பல அரச நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட பெருந்தொகையான ஆய்வுகள், அரச சேவையின் தற்போதைய நடைமுறைகளில் சில வழக்கொழிந்தவையாக இருந்து வருகின்றன என்பதனையும், அவை இன்றைய தேவைகளுக்கு உகந்தவையாக இருந்து வரவில்லை என்பதனையும் எடுத்துக் காட்டியுள்ளன. பல்வேறு சான்றிதழ்கள், உரிமங்கள் மற்றும் அனுமதிப் பத்திரங்கள் என்பவற்றை வழங்குவதில் அரச சேவையில் பின்பற்றப்பட்டு வரும் நடைமுறைகள் பொது மக்களுக்கு சிரமத்தையும் தொல்லைகளையும் அளிப்பனவாக இருந்து வருகின்றன.

அரச சேவையில் பெறுபேறுகளிலும் பார்க்க "அதிகார கட்டமைப்புகளுக்கு" உயர் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதனைக் காண முடிகிறது. எனவே, இந்நிலையில் பெறுபேறுகளையும் மீறி அதிகாரிகளின் படித்தரங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றின் மேலாதிக்கம் நிலவி வருகின்றது. இதன் விளைவாக, தவிர்க்க முடியாத வகையில் முடிவெடுப்பதில் தாமதங்கள் ஏற்படுகின்றன. இத்தகைய தாமதங்கள் காரணமாக பொதுமக்கள் தமக்கு நியாயமாகச் சேர வேண்டிய பல அனுகூலங்களை இழக்க நேரிட்டுள்ளது. கடந்த தசாப்தங்களின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டு உதவி மற்றும் கொடைகள் என்பவற்றை சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளாமை காரணமாக ஏற்பட்ட இழப்பு இதற்கான ஓர் உதாரணமாகும்.

மேலும், விவேகமற்ற முறையிலான மூலவளப் பகிர்வு பொதுத்துறை நிறுவனங்களின் ஆற்றலைப் பாதித்துள்ளது. நன்கு வளர்ச்சியடைந்துள்ள நகரப் பிரதேசங்களில் மனித வளமும், பௌதீக வளங்களும் அபரிதமாக செறிந்திருப்பதனையும், வளர்ச்சி குன்றிய கிராமப் பிரதேசங்களில் அரச நிறுவனங்கள் மிகக் கடுமையான மூலவள இடர்ப்பாடுகளின் கீழ் செயற்பட்டு வருவதனையும் நாம் காண முடிகிறது. கொழும்பு நகரில் உள்ள அரசாங்க கட்டடங்களில் மோசமான நிர்வாகம் காரணமாக அலுவலக இடப் பரப்பு குறைந்த அளவில் பயன் படுத்தப்பட்டு வருகின்றது. அதேபோல அம்பாறை, மொனராகலை, பதுளை போன்ற தொலைதூர இடங்களில் பிரதேச

செயலகங்கள் போன்ற முக்கியமான அரச அலுவலகங்களில் கூட போதிய இடவசதி இல்லை. ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், தொழில்நுட்ப தர ஊழியர் போன்ற தேர்ச்சி பெற்ற மனித வளம் "கஷ்டப் பிரதேசங்கள்" என்று அழைக்கப்படும் பிரதேசங்களில் தேவையான அளவில் கிடைப்பதில்லை. ஆனால், மேல் மாகாணம் போன்ற வளர்ச்சியடைந்துள்ள பிரதேசங்களில் இந்த மனித வளம் தேவைக்கும் அதிகமாக ஒன்று திரண்டிருப்பதனைக் காண முடிகிறது. கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றுவதற்குத் தயாராக இருக்கும் அரச ஊழியர்களுக்கு வேறுபட்ட ஊக்குவிப்புக் கொடுப்பனவுத் திட்டங்கள் வழங்கப்பட்டால் இந்நிலை மாற்றமடையும் என ஒருவர் வாதிடலாம்.

**பொதுத் துறையில் உற்பத்தித் திறன் விருத்தி தொடர்பான அணுகுமுறைகள்**

கடந்த காலத்தில் பல்வேறு வழிமுறைகளுக்கூடாக அரச சேவையின் செயல்பாட்டை விருத்தி செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. 1988 இன் நிர்வாகச் சீர்திருத்த கமிட்டியின் சிபாரிசுகள் மற்றும் செயல்பாட்டினை மதிப்பிடும் முறைகளை அறிமுகம் செய்து வைப்பதற்கான தற்போதைய முயற்சிகள் என்பன இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கைகளில் சிலவாகும். ஆனால், அரச சேவை விநியோக முறையில் இன்னமும் புலப்படத்தக்க மாற்றமெதுவும் ஏற்பட்டிருக்கவில்லை என்பதே பொதுசனங்களின் கருத்தாக உள்ளது.

உற்பத்தித் திறன் என்ற விடயம் ஊழியர்களின் கண்ணோட்டத்திலன்றி வாடிக்கையாளர்களின் கண்ணோட்டத்திலேயே அணுகப்படுதல் வேண்டும். சுருங்கச் சொல்வதானால், சம்பந்தப்பட்ட நடைமுறைகளில் அடிப்படையான தீவிர மாற்றங்களை எடுத்து வருவதன் மூலம் மட்டுமே அரச துறையில் உற்பத்தித்திறன் விருத்தியை மேம்படுத்த முடியும். எனவே, புத்தாக்கமும் புதிய சிந்தனையுமே இதற்கான துவக்கப் புள்ளிகளாக இருந்து வர வேண்டும். புதிய சிந்தனை கொண்டவர்களால், குறிப்பாக "வாடிக்கையாளருக்கு கிட்டும் அனுகூலங்கள் என்ன?" என்ற நிலைப்பாட்டில் நின்று சிந்திப்பவர்களாலேயே அரச துறை நிறுவனங்கள் வழிநடத்தப்பட வேண்டும். இந்த வகையான சிந்தனை, உள்ளீடுகளிலும் பார்க்க பெறுபேறுகள் மீதே அதிக அழுத்தத்தைச் செலுத்துகின்றது.

அரச அமைப்புக்களில் மக்கள் தொடர்ந்தும் தங்கியிருக்கும் நிலையைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் முயல வேண்டும். தாமாகவே சில கருமங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் அவர்களுக்கு இடமளிக்க வேண்டும். அரச துறையால் தற்பொழுது வழங்கப்பட்டு வரும் சேவைகளில் சிலவற்றை தனியார் துறையிலிருந்து அல்லது மக்கள் அமைப்புக்களிலிருந்து பெற்றுக் கொள்வது ஒரு வழியாகும். உதாரணமாக, உள்ளூராட்சி சபைகள், குப்பைகளை அகற்றும் வேலைகளை தனியார் துறையிடம் கையளிக்க முடியும். ஒரு சில வளர்ச்சியடைந்த நாடுகளில் இப்பணியை தனியார் துறை மிகவும் திறமையான முறையில் மேற்கொண்டு வருகின்றன.

பொதுத் துறையில் உயர் உற்பத்தித் திறனை சாதித்துக் கொள்வதற்கு முடிவெடுப்பதில் உள்ள தாமதங்களை தவிர்ப்பது முக்கியமாகும். இப்பிரச்சினையை இரு வழிகளில் தீர்க்க முடியும். முதலில் அதிகார ஏறுவரிசை அமைப்பினைக் குறைத்து சமவரிசை தாபனங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கைகளை எடுக்கலாம். இரண்டாவதாக, நடு மட்டங்களிலும் கீழ் மட்டங்களிலும் உள்ள ஊழியர்களுக்கு முடிவெடுக்கும் அதிகாரத்தை வழங்க முடியும். இது கீழ்மட்ட ஊழியர்கள் செயற்தூண்டல் பெற்றுக் கொள்வதற்கும் வகை செய்யும். அதிகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் ஊழியர்கள் உயர் அளவில் பொறுப்புணர்வைக் காட்டி வருகின்றார்கள் என்பதனை ஆய்வுகள் காட்டியுள்ளன. அதே வேளையில், நிர்வாக அமைப்பின் பல்வேறு பாகங்களுக்கிடையில் அதிகளவிலான ஒருங்கிணைப்பைக் கட்டியெழுப்புவதிலும் கூடிய கவனஞ் செலுத்தப்பட்டு வருதல் அவசியமாகும். தற்போதைய நிர்வாக அமைப்பில் பல்வேறு திணைக்களங்கள், பிரிவுகள் மற்றும் அலகுகள் என்பவற்றுக்கிடையில் குறைந்த அளவிலான தொடர்பே நிலவி வருகின்றது.

ஊழியர்கள் தமது செயலாற்றுகையை அதிகரித்துக் கொள்வதற்கான தூண்டுதலைப் பெற்றாலேயொழிய உற்பத்தித் திறன் விருத்தியில் முக்கியமான மாற்றங்கள் எவற்றையும் எடுத்து வர முடியாது. இந்தப் பின்னணியில், செயல்பாட்டை அடிப்படையாகக் கொண்ட வெகுமதித் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படுவது அவசியமாகும். சிறந்த செயல்பாட்டுக்கு சம்பள உயர்வு, ஊக்குவிப்புக்கள், புலமைப் பரிசில்கள் மற்றும் திறமைப் பதவியுயர்வு போன்ற வழிகள் மூலம் வெகுமதி அளிக்கலாம். அதேபோல, செயல்பாட்டு இலக்குகளை நிறைவு செய்யத் தவறுபவர்கள் தொடர்பாக எதிர்மறை நடவடிக்கைகள் அவசியமாகும். அரசாங்க ஊழியர்களின் பதவிக் காலம் தொடர்பாகவும் ஒரு மீள் சிந்தனை அவசியமாக உள்ளது.

அரசாங்க சேவையின் பணிக் கலாச்சாரமும் பணி ஒழுக்கமும் "நிரந்தரத் தொழில்" என்ற கருத்தின் செல்வாக்கினை ஓரளவுக்குக் கொண்டுள்ளது. கடமைப் பொறுப்புக்களை வேண்டுமென்றே புறக்கணிப்பது கூட ஒருவருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு போதியதாக இருப்பதில்லை எனச் சிலர் சிந்திக்கத் தலைப்படுகின்றனர். மாறாக, அரசாங்க ஊழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமனஞ் செய்யப்பட்டால் அதாவது, காலத்துக்குக் காலம் செயல்பாட்டு மதிப்பீட்டின் அடிப்படையில் பதவிக்காலம் புதுப்பிக்கப்படுவதாக இருந்தால் செயல்திறனை மேம்படுத்திக் கொள்வதற்காக அவர்கள் தாமாகவே முயற்சிப்பார்கள். ஒப்பந்த அடிப்படையில் நியமனம் பெறுபவர்களுக்கு உயர் சம்பளங்களும் பிற அனுகூலங்களும் வழங்கப்பட்டால் நல்ல சாதனையாளர்களை பொதுத் துறைக்குள் ஈர்க்க முடியும்.

**முடிவுரை**

இன்னும் இரண்டு வருடங்களில் உதயமாகவிருக்கும் புதிய ஆயிரமாவது ஆண்டு, அபிவிருத்திச் சவால்களைப் பொறுத்த வரையில் மிகவும் நிர்ணயகரமான ஒரு காலகட்டமாக இருக்கும் புதிய தகவல் யுகத்தின் தேவைகளை நிறைவு செய்வதற்கு இலங்கையின் அரசாங்க சேவை புதிய அறிவையும் திறன்களையும் புதிய முறைகளையும் அதேபோல நவீன பாணியிலான பணிக் கலாசார மொன்றையும் சுவீகரித்துக் கொள்வது அவசியமாகும்.

# உற்பத்தித்திறன் விருத்தியும் அதனோடிணைந்த தர மேம்பாடும்

கலாநிதி என். ஆர். டி. சில்வா

உற்பத்தித் திறனில் விருத்தி நிலையை எடுத்து வருவது என்பது இப்பொழுது சிறப்பாக கவனத்தில் எடுக்கப்பட்டுவரும் ஒரு விடயமாக உள்ளது. உற்பத்திப் பொருட்களிலும் சேவைகளிலும் உற்பத்தித் திறன் விருத்தி செய்யப்பட வேண்டும் என்ற கருத்து இன்று உலக அளவிலும் தேசிய அளவிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கமும் கடந்த சில வருடங்களாக இதனை உயர் அக்கறைக்குரிய ஒரு பிரச்சினையாக அங்கீகரித்திருந்தது. இந்தப் பின்னணியில், 1996 ஆம் வருடம் உற்பத்தித் திறன் ஆண்டாக பிரகடனம் செய்யப்பட்டதுடன், அதனையடுத்து வரும் தசாப்தம் உற்பத்தித் திறன் தசாப்தம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. மூலவள உள்ளீடுகளின் ஓர் அலகுக்கு கிடைக்கும் (பொருட்கள் / சேவைகள்) வெளியீட்டின் அளவை அதிகரித்துக் கொள்வது என்பதே உற்பத்தித் திறனை உயர்த்துதல் என்பதன் பொருளாகும். அதனையடுத்து எழும் கேள்வி உற்பத்தித் திறன் அதிகரிப்பும் (பொருட்கள் மற்றும் சேவைகளின்) தர விருத்தியும் ஒன்றுடனொன்று முரண்பட்டதா அல்லது ஒன்றை யொன்று முழுமைப்படுத்தக் கூடியவையா என்பதாகும். அதாவது, அதியுயர் தரம் அதியுர் உற்பத்தித் திறனுடன் இணைந்து செல்லக் கூடியதா? அல்லது ஒன்றுடனொன்று முரண்படக் கூடியவையா என்பதாகும்.

இந்த புதிரான கேள்விக்கு பதிலளிக்க முயற்சிப்பதற்கு முன்னர், உற்பத்தித் திறன் கருதுகோள் தொடர்பாக நிலவி வரும் ஒரு சில தப்பெண்ணங்களை நாங்கள் கவனத்திலெடுப்பது அவசியமாகும். உற்பத்தித் திறன் என்பது கோட்பாட்டு ரீதியாக மிகவும் எளிமையான ஒரு கருத்தாகும். அது குறிப்பிட்ட ஒரு நடவடிக்கையில், வெளியீட்டினை எடுத்து வருவதற்குத் தேவைப்படும் உள்ளீடுகளின் கணிக்கத்தக்க அளவாகும். குறிப்பிட்ட ஒரு மட்டத்திலான உள்ளீட்டு மூலவளங்களிலிருந்து உச்சமட்ட தாக்கத் திறனை பெற்றுக் கொள்ளும் நோக்கில் உள்ளீடுகளுக்கும் வெளியீடுகளுக்கும் இடையிலான தொடர்பு நெறிப்படுத்தப்படுகின்றது.

உற்பத்தித் திறன் வணிக நடவடிக்கையுடன் தவிர்க்க முடியாத வகையில் பிணைக்கப்பட்டுள்ளது என்ற விடயத்தையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டியுள்ளது. வணிக நடவடிக்கையொன்றின் அடிப்படை பொருளாதாரக் குறிக்கோள், ஏற்றுக்கொள்ளத் தக்க இலாபமட்டமொன்றை சாதித்துக் கொள்வதும், அத்தகைய இலாப மட்டத்தை நிலைநிறுத்தி, விருத்தி செய்வதுமாகும். வணிக முயற்சிகள் அவசியமாகவே போட்டிச் சூழல் ஒன்றில் நடத்தப்பட்டு வருவதனாலும் இந்தச் சூழலில் வாடிக்கையாளர்களின் எதிர்பார்ப்புக்கள் இடையறாது அதிகரித்து வருவதனாலும் போட்டியிடும் திறனைப் பராமரித்து வருவதற்கூடாக மட்டுமே இலாப நிலையை நிலைநிறுத்திக் கொள்ள முடியும். இதற்காக மூலவளங்களை தாக்கமான முறையில் நிர்வகிப்பதற்கென தெளிவான ஒரு உத்தி அவசியப்படுகின்றது. உற்பத்தித் திறனை உற்பத்தியுடன் இணையாக நோக்குவது மற்றும் ஊழியத்தினை மட்டுமே ஓர் உள்ளீடாகக் கருதுவது போன்றவை உற்பத்தித் திறன் குறித்த தப்பெண்ணங்களாகும். இத்தப்பெண்ணங்களை போக்குவதற்காக உற்பத்தித் திறன் குறித்த பாரம்பரிய வரைவிலக்கணத்தை பின்வரும் முறையில் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

உற்பத்தித் திறன் – பொருட்களையும் / சேவைகளையும் வாடிக்கையாளர்களுக்கு ஏற்புடைத்தாய் வழங்குதல் சம்பந்தப்பட்ட மூலவளங்கள் அனைத்தையும் (உள்ளீடு) விவேக பூர்வமான முறையில் பயன்படுத்திக் கொள்ளல்.

இது பின்வரும் ஒவ்வொரு துறைகளிலும் உற்பத்தித் திறனுக்கு (உற்பத்தித் திறன் விருத்திக்கும்) கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதனை எடுத்துக் காட்டுகின்றது:

1. தொழில்நுட்ப முகாமை
2. சந்தைப்படுத்தலை உற்பத்தியுடன் பிணைப்பதற்காக செயற்பாடுகள் முகாமை.
3. செயற்படு மூலதன சுற்றோட்டத்தின் (அதாவது, கையிருப்புக்கள் மற்றும் கடன் தர வேண்டியவர்கள்) முகாமை.
4. சந்தைப்படுத்தல்.
5. கணக்கீடும் கட்டுப்பாடும்.
6. நிதி முகாமை.
7. வணிகக் கொள்கையின் உருவாக்கம்.

உற்பத்தித் திறன் தொடர்பான பிரச்சினையை பாரம்பரிய நிலைப்பாட்டிலிருந்து நோக்கும் பொழுது, ஒரு நிறுவனத்தின் வெளியீட்டினை நிர்ணயித்தல் போன்ற பல சிக்கலான நடைமுறைப் பிரச்சினைகளை அது எடுத்து வருகின்றது. கைத்தொழில் நிறுவனமொன்றின் வெளியீட்டினை பாரம்பரியமான வரைவிலக்கணத்தைப் பயன்படுத்தி நாங்கள் நிர்ணயித்துக் கொள்ள முடியும். ஆனால், அதே வேளையில் ஒரு வங்கி அல்லது ஓர் அரச முகவரகம் என்பவற்றின் வெளியீட்டினை நாம் அளவிடுவது எப்படி? பொருட்களை உற்பத்தி செய்யாத நிறுவனங்கள் உற்பத்தித் திறன் என்ற விடயத்தை மிகவும் தாக்கமான முறையில் கையாளத் தவறியுள்ளன. ஏனெனனில், அவர்களுடைய தொழிலின் இயல்புக்கு இப்பதத்தை தொடர்புபடுத்துவது இயலாத ஒரு காரியமாக இருந்து வருகின்றது.

நிறுவனங்களில் உற்பத்தித் திறனின் தாக்கத்தை மதிப்பிடுவதில் ஆக்கச் செலவு, உற்பத்தித் திறன் மற்றும் (பொருட்களும் சேவைகளும் விற்பனை செய்யப்பட்டு வரும்) விலைகள் என்பவற்றுக்கிடையே ஓர் அளவு ரீதியான தொடர்பு நிலவி வருகின்றது. இந்த விடயம் பல சந்தர்ப்பங்களில் சரிவர கிரகித்துக் கொள்ளப்படுவதில்லை. ஒரு வணிக நிறுவனம் அதன் இலாப மட்டத்தை குறித்த ஒரு காலப் பிரிவிலிருந்து அடுத்த காலப் பிரிவிற்கு பராமரித்து வர வேண்டுமானால் இந்த உறவு நிலவி வருவது அவசியமாகும்.

ஒரு நிறுவனம் உயர் விலைகளின் வடிவில் உள்ளீட்டு அலகுச் செலவுகளில் ஏற்படும் தேறிய தாக்கத்தை அதன் உள்ளீடுகளின் உற்பத்தித் திறன் அதிகரிப்புக்களின் மூலம் ஈடுசெய்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு உற்பத்தித் திறன் அதிகரிக்காவிட்டால் உள்ளீட்டுச் செலவு அதிகரிப்புக்களை உயர் விலைகளின் வடிவில் வாடிக்கையாளர்களே ஏற்க வேண்டியிருக்கும். எனவே, உள்ளீட்டுச் செலவு அதிகரிப்புக்களை உயர் விலைகளின் வடிவில் வாடிக்கையாளர்களே ஏற்கவேண்டியிருக்கும். எனவே, உள்ளீட்டுச் செலவுகளில் ஏற்படும் அதிகரிப்பினை ஒரு நிறுவனம் ஈடுசெய்து கொள்வதற்கு (விலை அதிகரிப்புக்களை தவிர) உள்ள ஒரே வழி உற்பத்தித் திறனைன விருத்தி செய்வதாகும். இவ்விதம் உற்பத்தித் திறனை விருத்தி செய்து கொண்டால் மட்டுமே சம்பந்தப்பட்ட நிறுவனம் போட்டிச் சூழலில் இலாபகரமாக இயங்கிவர முடியும்.

நாங்கள் இப்பின்புலத்தில் நின்று அதி உயர் உற்பத்தித் திறன் எதிர் அதி உயர் தரம் என்ற விடயத்தை இப்பொழுது பரிசீலனை செய்வோம். இவை இரண்டும் நிறுவனங்களின் போட்டித் திறனில் மிக முக்கியமான கூறுகளாக இருந்து வருகின்றன என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. இவை இரண்டிலும் ஏதாவது ஒன்றில் ஏற்படும் அதி உயர் நிலை இலாபங்களையும் பங்குகளின் மதிப்பையும் உயர்த்த முடியும். எனவே, அவை முக்கியத்துவம் வாய்ந்த உபாய ரீதியான குறிக்கோள்களாக உள்ளன. அதி உயர் உற்பத்தித் திறனின் விளைவாக செலவுகள் குறைவடையும் அதே வேளையில், அதி உயர் தரத்தின் விளைவாக கேள்வியும் வாடிக்கையாளர் விசுவாசமும் மேம்படுகின்றது. இவையிரண்டும் சுயேச்சையானவையாக இருந்து வந்தால் இரண்டில் ஏதாவது ஒன்றில் ஏற்படும் மேலான நிலை போட்டி அனுகூலத்தை எட்டுவதற்கான ஒரு மூலாதாரமாக இருக்க முடியும். இவை இரண்டுக்குமிடையில் ஒரு தொடர்பு நிலவி வருமிடத்து நிலைமை என்னவாக இருக்கும்? இது சாதகமானதாக இருந்தால் ஒன்றில் உயர் நிலையை எட்டியிருக்கும் நிறுவனங்கள் மேலதிகமாக அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ளும். பாதகமானவையாக இருந்து வந்தால் நிறுவனங்கள் பிரச்சினைகளை எதிர்கொள்ளும்.

உற்பத்தித் திறனும் தரமும் ஒன்றுக்கொன்று துணை நிற்பவை என்ற கருத்து இப்பொழுது மேலோங்கி நிற்கிறது. ஆனால், இந்த விடயங்கள் குறித்த எழுத்தாக்கங்களை (1954-1995) மதிப்பிடும் பொழுது தரம் மற்றும் உற்பத்தித் திறன் என்பவற்றுக்கிடையிலான தொடர்பின் இயல்பு குறித்து மிகவும் சிறு அளவிலேயே கருத்தொற்றுமை நிலவி வருவதனைக் காண முடிகிறது. எழுத்தாக்கங்களில் காணப்படும் இரண்டு பிரதான பலவீனங்கள் காரணமாக இத்தடுமாற்ற நிலை தோன்றியிருக்கலாம். முதலாவதாக, பிரசுரிக்கப்பட்டுள்ள அனைத்து ஆய்வு அறிக்கைகளும் கைத்தொழில் உற்பத்தித் துறை மீதே முழுக் கவனத்தையும் செலுத்தியுள்ளன. சேவைகள் துறை முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. தரம் குறித்த வரைவிலக்கணம் ஒரே சீரானதாக (அல்லது முழுமையாக) இருந்து வரவில்லை என்பது இரண்டாவது விடயமாகும். உற்பத்தித் திறன் உயர்வுக்கும் தர விருத்திக்குமிடையில் எதிர்மறையான தொடர்பு நிலவி வருகின்றது என வாதிடுபவர்கள் தரம் என்பதனை நம்பகத்தன்மை அல்லது விதிமுறைகளை முற்றிலும் அனுசரித்தல் என வரைவிலக்கணம் வழங்குகின்றனர். வாடிக்கையாளர்களே இறுதியில் தரத்தை நிர்ணயம் செய்கின்றார்கள் என்பதனையும் இவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

இந்த வேறுபாடுகளுக்கிடையே ஓர் இணக்க நிலையை எடுத்து வருவதற்கான முயற்சியில் தரம் தொடர்பாக இரு வேறுபட்ட பரிமாணங்கள் நிலவி வருகின்றன என்பதனை தெளிவாகக் காணமுடிகின்றது: (1) வாடிக்கையாளர்களின் தேவையை நிறைவு செய்யும் பண்புக் கூறுகள். (2) நம்பகத்தன்மை / குறைபாடுகள் இல்லாதிருத்தல். இவை ஒவ்வொன்றும் கருதப்படும் தரத்தின் மீது செல்வாக்குச் செலுத்துவதுடன், உற்பத்தித் திறனுடன் வெவ்வேறு விதத்தில் உறவுகளையும் கொண்டுள்ளன. ஜே.எம். ஜூரான்ஸ் என்பவர், தரம் தொடர்பாக பிரயோகிக்கக்கூடிய "பாவனைக்கு உகந்த நிலை" என்ற கருதுகோளை முன்வைத்தார். தரம் தொடர்பான வாடிக்கையாளர்களின் எண்ணக் கருக்கள் தரத்தின் இரு வேறுபட்ட பரிமாணங்களிலிருந்து பெறப்படுவதாக அவர் குறிப்பிடுகின்றார்: (1) குறைபாடுகள் இல்லாத நிலை (2) வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவு செய்யும் குறிப்பிட்ட பண்டத்தின் பண்புக்கூறுகள். உரிய காலத்தில் விநியோகம் செய்ய முடியாத நிலை, இயங்காத பொருட்கள் அல்லது களங்கமடைந்த தோற்றம் முதலியவற்றை அவர் உற்பத்திப் பொருளின் குறைபாடுகளாகக் குறிப்பிடுகின்றார். மறுபுறத்தில், ஒரு பண்டத்தின் பண்புக்கூறுகள் என்பவை வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவு செய்வதற்காக ஒரு பண்டத்தில் உள்ளடக்கப்படும் பண்புக் கூறுகளாகும். "பாவனைக்கு உகந்த நிலை" என்ற கருதுகோள் இவ்விரண்டு கூறுகளையும் சரியாக ஒருங்கிணைக்கின்றது.

உயர் அளவிலான உற்பத்தித் திறனையும் உயர்ந்த தரத்தையும் சாதித்துக் கொள்வதற்கான முயற்சிகள் எப்பொழுதும் ஒன்றுக்கொன்று இணையானவையாக இருந்து வருவதில்லை (ஜூரான்ஸ், 1989). அதே வேளையில், அதிக அளவிலான தரப்படுத்தலுடன் இணைந்த விதத்தில் உற்பத்தித் திறன் அதிகரித்துச் செல்கின்றது. அதிகளவுக்கு வாடிக்கையாளரை நோக்கிய அணுகுமுறையின் போது அது குறைந்து செல்லும் மாறாக, குறைபாடுகள் இல்லாத நிலை உற்பத்தித் திறன் அதிகரிப்புகளுடன் இணைந்து செல்லக்கூடியதாகும். உற்பத்தி நிகழ்வுப் போக்கில் குறைபாடுகளின் விகிதத்தை தாழ்ந்த மட்டத்தில் வைத்திருப்பதானது தரத்தின் தேறிய செலவினை குறைக் கின்றது என குரொஸ்பி (1979) வாதிடுகின்றார். அதிகளவிலான உற்பத்தித் திறன்களுக்குப் பங்களிப்புச் செய்யும் அதே காரணிகள் குறைபாடுகளை களைவதற்கும் பங்களிப்புச் செய்து வருகின்றன. உற்பத்தித்திறன் மற்றும் தரம் என்பவற்றுக்கிடையிலான உறவின் மீது செல்வாக்குச் செலுத்தும் ஒரு காரணி ஒட்டுமொத்த கருதப்படும் தரத்தின் மீது தரத்தின் இரு அடிப்படை பரிமாணங்களின் ஒவ்வொன்றும் செலுத்தி வரும் சார்புரீதியான பங்களிப்பாகும். நம்பகத்தன்மை/குறைபாடுகள் இல்லாத நிலை ஒட்டுமொத்த கருதப்படும் தரத்தை எடுத்து வரும் பொழுது இந்த உறவு சாதகமானதாக உள்ளது. மறுபுறத்தில், (நம்பகத் தன்மையைத் தவிர) பண்புக்கூறுகள் ஒரு பண்டத்தின் தரத்தை நிர்ணயம் செய்யும் பொழுது எதிர்மறையான உறவு தோன்றலாம்.

உற்பத்தித் திறன் மற்றும் தரம் என்பவற்றுக்கிடையிலான உறவில் செல்வாக்குச் செலுத்தக்கூடிய மற்றொரு காரணி உற்பத்திச் செயல் முறையின் இயல்பாகும். இவற்றுக்கிடையிலான சாதகமான உறவு பண்டத்தை எந்த

அளவுக்கு எளிதில் தரப்படுத்தலாம், உள்ளீடுகளில் எந்த அளவுக்குச் சிறப்புத் தேர்ச்சிகளைப் பெறலாம், தரத்தில் சீர்குலைவு ஏற்படாமல் ஊழியத்துக்குப் பதிலாக புதிய மூலதன உபகரணங்களை எவ்வாறு பதிலீடு செய்யலாம் போன்ற கேள்விகளிலேயே பெருமளவுக்குத் தங்கியுள்ளது.

( 24 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கம்பெனிகள் பின்பற்ற முடியும் என்ற எதிர்பார்ப்பிலும் இது மேற்கொள்ளப் பட்டது. இத்திட்டம் உபயோகமான பெறுபேறுகளை எடுத்து வரவில்லை. பல கம்பெனிகளில் துவக்கத்தில் காணப்பட்ட ஆர்வம் பின்னர் படிப் படியாக தளர்வடைந்தது. இம்முயற்சி யில் முன்னணியில் இருந்திருக்க வேண்டிய சில முகாமையாளர்கள் வேலையை விட்டுச் சென்றுள்ளார்கள் அல்லது வேறு பதவிகளை ஏற்றுள்ளார்கள் என்றும், அதன் காரணமாக தேவையான நடவடிக்கை களை செயற்படுத்த முடியவில்லை என்றும் சில கம்பெனிகள் காரணம் காட்டியுள்ளன. வேலை கொள்வோர் உற்பத்தித் திறனை அதிகரித்துக் கொள்ளும் விருப்பினைக் கொண்டிருந்த போதிலும் அத்தகைய முன்முயற்சிகளை எடுத்துச் செயற்பட்டு வர வேண்டிய முகாமையாளர்களிடைய அர்ப்பணிப் புணர்வு குறைவாக இருந்து வருகின்றது. செயல் தூண்டல், அங்கீகாரம் மற்றும் வெகுமதிகள் என்பன இல்லாதிருப்பதே இதற்கான காரணங்களாகும்.

ஏற்கனவே குறிப்பிட்டது போல அரசாங்கத்துக்கு சட்டரீதியான சீர்திருத்தங்களின் ஆதரவு தேவையாக உள்ளது. சில மாதங்களுக்கு முன்னர் வேலை வாய்ப்புக்களுக்கான செயலணி யொன்றை ஜனாதிபதி நியமனஞ் செய்தார். அச்சந்தர்ப்பத்தில் தொழில் அமைச்சு அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளில் அடிக்கடி எழுப்பப்பட்ட ஒரு விடயம் தொழில் சட்டங்கள் மிகப் பழமையானவை யாகவும், பரீட்சித்துப் பார்க்கப்பட்டவை யாகவும் இருந்து வருவதனால் அவை மாற்றப்படக் கூடாது என்பதாகும். ஆனால், முன்னர் நிலவி வந்த சமூக, பொருளாதார நிலைமைகள் இப்பொழுதும் அவ்வாறே நிலவி வருகின்றனவா ? இச்சட்டங்கள் உருவாக்கப்பட்ட காலந்தொட்டு உலக அளவில் மாற்றங்கள் இடம் பெறவில்லையா ? அவற்றின் இன்றைய பொருத்தப்பாட்டை மதிப்பிட வேண்டிய தேவை நிலவி வரவில்லையா ? இச்சட்டங்கள் உயர் அளவிலான உற்பத்தித் திறனை எடுத்து வருவதற்கு துணை புரிகின்றனவா போன்ற கேள்விகளை நாம் எழுப்ப வேண்டி யுள்ளது.

இந்தப் பின்னணியில், தொழிலை முடிவுக்குக் கொண்டு வரும் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம், கைத்தொழில் பிணக்குகள் சட்டம் மற்றும் வேதனச் சபைகள் கட்டளைச் சட்டம் என்பன எந்த அளவுக்கு பொருந்திச் செல்கின்றன ? அரசாங்கம் இப்பொழுது சர்வதேச தொழில் தாபனத்தின் உதவியுடன் தொழில் சட்டங்களை முறைப்படுத்தும் ஒரு முயற்சியை மேற்கொண்டு வருகின்றது. ஆனால், சமூகப் பொருத்தம் கொண்ட சட்டத் தொகுப்பு ஒன்று மட்டுமே பெறுமதி மிக்கதாக இருக்கும் என்ற எமது கோரிக்கைகளுக்கு மத்தியிலும் கூட, அரசாங்கம், தற்போதைய காலத்துக்கு கொவ்வாத சட்டங்களை மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ளவே விரும்புகின்றது.

வேலை கொள்வோரும் தொழிலாளர்களுக்கு அதிகாரத்தை அளிப்பதன் மூலம் தமது பங்குப் பணியை நிறைவேற்ற வேண்டும். இலங்கையில் கடந்த தசாப்தத்தின் போது ஊழியர்களின் கல்வி மட்டத்தில் மிகத் தீவிரமான ஒரு மாற்றம் இடம் பெற்றிருந்தது. சில நிறுவனங்கள் ஒரே கல்வி மட்டங்களைக் கொண்டிருப் பவர்களை உயர் தரங்களிலும் நடுத் தரங்களிலும் கீழ்த் தரங்களிலும் வேலையில் அமர்த்தியுள்ளன. இவர்களுக்கிடையில் காணப்படும் ஒரேயொரு வேறுபாடு ஆங்கில மொழி அறிவு அல்லது தொழிலில் பெறும் பயிற்சி என்பனவாகவே இருக்கும்.

உற்பத்தித் திறனை விருத்தி செய்வதற்கு கூட்டுப் பணி மற்றும் தொழில் முன்னேற்றத்துக்குப் பயிற்றுவித்தல் ஆகிய இரு வழி தொடர்பாடல் முறையில் கவனஞ் செலுத்துவது அவசியமாகும். தேசிய மட்டத்தில் அரசாங்கம் அதன் கல்விக் கொள்கையில் பள்ளிக் கல்விப்பாடத் திட்டத்தில் செயல்தூண்டல், தலைமைத் துவம், தொடர்பாடல் மற்றும் கூட்டுப்பணி போன்ற மனித மூலவள அபிவிருத்தி தொடர்பான கூறுகளை உள்ளடக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இங்கு சிபார்சு செய்யப்படுகிறது.

8 ஆம் பக்கத் தொடர்ச்சி)


களையும் கண்ணைக் கவரும் கடற் கரைகளையும் இலங்கை தன்வசம் கொண்டுள்ளது. உலகின் மிகச் சிறந்த தேயிலை இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்றது. மேலும், 2680 இலங்கையின் ஏனைய பொருட்கள் உலகெங்கிலும் வெற்றிகரமாக விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. அதுமட்டுமன்றி, இலங்கையின் மிக முக்கியமான ஏற்றுமதி சுங்கப் பதிவுகளில் பதிவு செய்யப்பட வில்லை. ஒருநாள் கிரிக்கட்டில் உலகச்சம்பியன் என்ற முறையில் நாடு ஈட்டிய சாதனைதான் அது.

(கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையில் இடம்பெற்றுவரும் "உற்பத்தித் திறனுக்கூடாக செழிப்பு" என்ற தலைப்பிலான பகிரங்க விரிவுரைத் தொடரில் 1997 மார்ச் 20 ஆந் திகதி நிகழ்த்தப்பட்ட உரையின் சுருக்க வடிவமே இக்கட்டுரையாகும்.)

( 15 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உற்பத்தித் திறனை விருத்தி செய்து கொள்ளக் கூடிய ஒரு அணுகுமுறையை வளர்த்தெடுக்க வேண்டியிருப்ப துடன், தாம் மேற்கொள்ளும் பணிகளின் இடையறாத முன்னேற்றத்தை எடுத்து வருவதற்கும் அவர்கள் ஆவாக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இக்கட்டுரையாளர் தேசிய வணிக முகாமை நிறுவனத்தில் மூத்த முகாமை ஆலோசகராகவும் வருடாந்த உற்பத்தித் திறன் மாநாட்டின் ஒருங்கிணைப்பாள ராகவும் பணியாற்றி வருகின்றார். இங்கு தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்துக்கள் அவருடைய சொந்தக் கருத்துக்களாகும். அவை தேவமுநி இன் கருத்துக்களை எந்த வகையிலும் பிரதிபலிக்கவில்லை.)



# வெளிநாட்டு வர்த்தகமும் அதன் சாதக பாதகங்களும்

ஒரு நாடு, அந் நாட்டுக்குள்ளேயே செயற்பட்டுவரும் பல்வேறு பொருளாதார அலகுகளுக்கிடையில் மேற்கொண்டுவரும் வர்த்தகம் உள்நாட்டு வர்த்தகம் என்றும், சர்வதேச அளவில இரு நாடுகளுக்கிடையில் அல்லது பல நாடுகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்டு வரும் வர்த்தகம் வெளிநாட்டு வர்த்தகம் என்றும் அழைக்கப்படுகின்றது. இன்றைய உலகின் வளர்ச்சியடைந்த, வளர்ச்சி குன்றிய அனைத்து நாடுகளும் பல்வேறு மட்டங்களில் சர்வதேச வர்த்தகத்தில் (அல்லது வெளிநாட்டு வர்த்தகத்தில்) ஈடுபட்டு வருகின்றன. இவ்விதம் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் தமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் ஒரு பகுதியை வெளிநாடுகளுக்கு அனுப்பி, அதன் மூலம் கிட்டும் பணத்தை உபயோகித்து தமது நாட்டில் உற்பத்தி செய்யாத அல்லது போதியளவில் உற்பத்தி செய்யாத (அல்லது சார்பு ரீதியில் குறைந்த விலையில் கிடைக்கக் கூடிய) பொருட்களையும் சேவைகளையும் வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்வதற்கு விரும்புகின்றன. வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏற்றுமதி, இறக்குமதி என்ற இரு கருமங்கள் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. தமது நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்களையும் சேவைகளையும் வெளிநாடுகளுக்கு அனுப்புவது ஏற்றுமதி என்றும், தமது நாட்டுக்குத் தேவையான பண்டங்களையும் சேவைகளையும் வெளிநாடுகளிலிருந்து பெற்றுக் கொள்வது இறக்குமதி என்றும் அழைக்கப்படுகின்றது.

ஒரு நாடு வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபடுவதன் மூலம சிறப்பு ஆதாயங்களை பெற்றுக் கொள்ளும் அதே வேளையில் இழப்புக்களையும் எதிர்நோக்க வேண்டியுள்ளது. வெளிநாட்டு வர்த்தகத்திலிருந்து கிடைக்கும் அனுகூலங்களை நோக்கும் பொழுது மூலவளங்களை சொந்தமாகக் கொண்டு, அவற்றின் மூலம் பொருட்களை உற்பத்தி செய்வதன் காரணமாக கிட்டும் அனுகூலங்களை முதலில் குறிப்பிடலாம். குறிப்பிட்ட ஒரு நாடு தன்வசமுள்ள வளங்களின் அடிப்படையில் சார்பு ரீதியில பெருமளவுக்கு சாதகமான முறையில் உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கும் ஓரிரு பண்ட வகைகளைக் கொண டுள்ளது. அதே வேளையில், மற்றொரு நாடு நீண்டகாலமாக உற்பத்தியில் ஈடுபட்டு வருவதன் மூலம் பெற்றுக் கொண்டுள்ள தனித்துவமான அனுபவங்களின் அடிப்படையில் சிறப்புத் திறன்களைப் பெற்று அனுகூலமான விதத்தில் பண்ட உற்பத்தியை மேற்கொண்டு சர்வதேச வர்த்தகத்தில் பங்குபற்றி பயனடைந்து வருகின்றது.

வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் ஒரு நாட்டுக்குக் கிட்டும் முக்கியமான அனுகூலம் சந்தை விரிவடைவதன் காரணமாக பாரிய அளவிலான உற்பத்திக்கு வாய்ப்புக் கிடைப்பதாகும். ஒரு நாடு உள்நாட்டுச் சந்தைக்காக மட்டும் உற்பத்தியை மேற்கொண்டு வந்தால் உள்நாட்டுச் சந்தையின் கேள்விக்கு ஏற்ற விதத்தில் மட்டுமே அது அதன் சந்தையை விரிவாக்கிக் கொள்ள முடியும். அந்த நிலையில், உள்நாட்டுச் சந்தையின் அளவுக்கு ஏற்ற விதத்தில் குறிப்பிட்ட கைத்தொழிலின் விரிவாக்கத்தை கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கும் சந்தை, அளவில் சிறியதாக இருந்து வருவதனாலும் அளவு ரீதியில் உற்பத்தி மட்டம் சிறியதாக இருந்து வருவதனாலும் பாரிய உற்பத்தியின் அனுகூலங்களை ஈட்டிக் கொள்வதற்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. பாரியளவு உற்பத்தியின் போது, உற்பத்திக் காரணிகளை கூடிய செயல்திறன் கொண்ட விதத்தில் உற்பத்தியில் ஈடுபடுத்திக் கொள்ளக்கூடியதாக இருந்து வருவதுடன், திறன் கூடிய பாரிய இயந்திர உபகரணங்களை உபயோகிக்கக் கூடியதாகவும் இருந்து வருவதனால் உற்பத்திச் செலவையும் பெருமளவுக்குக் குறைத்துக் கொள்வதற்கு வாய்ப்புக் கிடைக்கின்றது.

ஒரு நாடு வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்டு, சர்வதேச தொடர்புகளை வளர்த்துக் கொள்வதன் காரணமாக தனிமை நிலையிலிருந்து விடுபட்டு சர்வதேச சமூகத்தில் அறிமுகத்தைப் பெற்றுக் கொள்ளும் ஓர் உறுப்பினராவதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றது. இதற்கூடாக சர்வதேச சமூகம் உபயோகித்து வரும் மிகவும் முன்னேற்றகரமான செயல்திறன் கூடிய உற்பத்தி நுட்பங்களை அறிந்து கொள்வதற்கும், அவற்றை தமது உள்நாட்டு உற்பத்தி நடவடிக்கைகளில் உரிய விதத்தில் உபயோகித்துக் கொள்வதற்கும் ஆற்றல் கிட்டுகின்றது.

வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபடுவதன் மூலம் பொருளாதாரத்தின் உற்பத்தி ஆற்றல் அதிகரிப்பதன் காரணமாக நாட்டு மக்களின் நுகர்வுக்குக் கிடைக்கக் கூடிய பண்டங்கள் மற்றும் சேவைகள் என்பவற்றின் அளவும் அதிகரிக்கின்றது. மேலும், வெளியிலிருந்து மிகவும் அனுகூலமான விலைகளில் பண்டங் களைப் பெறக் கூடியதாக இருந்து வருவதனால் மக்களின் வாழ்க்கை நிலையும் மேம்பாடடைகின்றது எனக் கூறப்படுகின்றது. ஒரு நாடு வெளிநாட்டு வர்த்தகத்தின் கீழ் சார்பு ரீதியில் அனுகூலமான பொருட்களை உற்பத்தி செய்து அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம் அதிக வருமானங்களை பெறக்கூடிய நிலையில் இருந்து வந்தால், உள்நாட்டில் உற்பத்தி செய்வது அனுகூலமற்றதாக இருந்து வரும் பண்டங்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதற்கு அந்த ஏற்றுமதி வருமானங்களை பயன்படுத்தலாம். அதன் மூலம் மக்களின் நுகர்வுச் செலவினை தாழ்ந்த மட்டங்களில் வைத்திருப்பதற்கூடாக விலைவாசி மட்டத்தை குறைத்துக் கொள்ளவும் முடியும். எனவே, இவ்விதமாக அந்தந்த நாட்டின் இயற்கைச் சூழ்நிலை காரணமாக அல்லது நீண்ட காலமாக சிறப்பு வழியத் தேர்ச்சியைக் கொண்டிருப்பதன் காரணமாக உற்பத்தி செய்வதற்கு தகுதி பெற்றிருக்கும் பண்டங்களை மிதமிஞ்சிய அளவில் உற்பத்தி செய்து, உற்பத்தி மிகைகளை ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு ஒரு நாட்டுக்குக் கிட்டுகின்றது.

அந்தந்த நாட்டின் உற்பத்திக் காரணி உரித்து இயல்பு, பல்வேறு பொருட்களினதும் உற்பத்தியில் பயன் படுத்தப்படும் உற்பத்தி நுட்பங்களின் இயல்பு என்பவற்றுக்கு ஏற்ப சில நாடுகள் சில பண்டங்களை ஏனைய நாடுகளிலும் பார்க்க குறைந்த செலவில் உற்பத்தி செய்யக்கூடியவையாக இருந்து வருகின்றன. அந்த நிலையில், அந்நாடு ஒப்பீட்டு அனுகூல நிலையை அனுபவித்து வருகின்றது எனக் கூறப் படுகின்றது. இந்த வகையில் ஒப்பீட்டு

அனுகூலங்களைப் பெற்றிருக்கும் நாடுகள், சம்பந்தப்பட்ட பொருளை அபரிமிதமாக உற்பத்தி செய்து, அதன் மூலம் கிட்டும் மிகைகளை ஏற்றுமதி செய்து தமக்குத் தேவையான பொருட்களை வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்கின்றன. உள் நாட்டில் உற்பத்தி செய்வது ஒப்பீட்டு அனுகூலம் இல்லாததாக இருந்து வரும் பொருட்களையே இந்நாடுகள் இவ்விதம் இறக்குமதி செய்கின்றன.

இப்பொழுது வெளிநாட்டு வர்த்தகம் காரணமாக ஏற்படக்கூடிய பிரதிகூலங்களை நோக்குவோம். சர்வதேச மூலதன அசைவு காரணமாக பொருளாதாரமொன்றுக்குள் இடம் பெறக் கூடிய குறிப்பிட்ட சில தாக்கங்கள் இதில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. சர்வதேச வர்த்தகம் காரணமாக ஒரு நாட்டில் ஏற்படும் சர்வதேச மூலதன அசைவுகள் குறிப்பிட்ட சில துறைகளைப் பொறுத்த வரையில் சாதகமானவையாகத் தென்பட்ட போதிலும், ஒட்டுமொத்தமாக அவை ஒரு நாட்டுக்கு சாதகமானவையாக இருப்பதில்லை. இலங்கையைப் போன்ற ஒரு வளர்முக நாட்டின் கடந்த 150 வருட கால அனுபவத்தை கவனத்தில் எடுக்கும் பொழுது, வெளிநாட்டு மூலதனம் ஒரு நாட்டைப் பொறுத்தவரையில் முக்கியத்துவம் பெறுகின்றது எனக் கூறுவது ஒரு குறுகிய நோக்கிலான மதிப்பீடாகும் என்பதனைக் காண முடிகின்றது. தாம் முதலிட்டு செய்யும் துறைகளிலிருந்து கிடைக்கும் இலாபங்களை தடை எதுவுமின்றி தமது தாய் நாடுகளுக்கு அவர்கள் எடுத்துச் செல்லக் கூடியதாக இருந்துவரும் நிலையில், வருடாந்தம் பாரிய அளவிலான செல்வம் வெளிநாடுகளை நோக்கிச் செல்கின்றது. இவ்விதம் உள்நாட்டு மூலவளங்களை உபயோகித்து உற்பத்தி செய்யப்படும் பேரளவிலான செல்வம் வெளிநாடுகளுக்குச் செல்வதன் மிக மோசமான விளைவு, வளர்முக நாடுகள் சதாகாலமும் வளர்ச்சியடைந்த நாடுகளின் சுரண்டலுக்கு உட்பட்டிருப்பதாகும். வெளிநாட்டு வர்த்தகம் காரணமாக, உள்நாட்டு உற்பத்தி நடவடிக்கைகள் பெருமளவுக்கு நாசமடைவதற்கும் பாதிப்படைவதற்குமான போக்குகள் தோன்றுகின்றதென சிலர் கூறுகின்றனர். இன்றைய வளர்முக உலகின் பல நாடுகள் வெளிநாட்டு வர்த்தகத்தின் காரணமாகவே ஏற்றுமதி, இறக்குமதி பொருளாதாரமொன்றின் பால் ஈடுபாடு காட்டத் தொடங்கின என்பது அவர்களுடைய கருத்தாகும். இலங்கை 1948 இல் சுதந்திரம் அடைந்த காலத்தில் ஏனைய ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது சார்பு ரீதியில் உயர்ந்த பொருளாதார நிலை ஒன்றை அடைந்திருந்த போதிலும், ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்தில் தோன்றிய பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் இரட்டை நிலை காரணமாக, பெருந்தோட்டப் பொருளாதாரம் நாளுக்கு நாள் வளர்ச்சி கண்டுவந்த அதே வேளையில் உள்நாட்டு விவசாயத் துறை புறக்கணிப்புக்கு உள்ளாகியது. இந்தச் சூழ்நிலையில், இலங்கை தேயிலை, இறப்பர், தெங்கு போன்ற பிரதான விவசாய ஏற்றுமதிப் பண்டங்களையும் வேறு ஒரு சில பண்டங்களையும் ஏற்றுமதி செய்வதன் மூலம் தனக்குத் தேவையான நுகர்வுப் பொருட்களை இறக்குமதி செய்து வந்தது. இதன் காரணமாக, நாட்டின் மூலவள ஆதாரத்தின் அடிப்படையில் அனுகூலமான முறையிலும் இலகுவாகவும் உற்பத்தி செய்யக் கூடியவையாக இருந்த பல பண்டங்களின் உள்நாட்டு உற்பத்தி பாதிக்கப்பட்டது.

வெளிநாட்டு வர்த்தகம் காரணமாக ஒரு நாடு சர்வதேச அளவில் பெருமளவுக்குப் பிரசித்தமடைந்தாலும் அதனுடன் இணைந்த பல பிரதிகூலமான நிலைமைகளையும் இனங்கண்டு கொள்ள முடியும். சர்வதேச ரீதியில் வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் உயர் தரம் வாய்ந்த கைத்தொழில் பொருட்களினதும் நுகர் பொருட்களினதும் நுகர்வுக்கு மக்களைத் தூண்டுவது, வெளிநாடுகளை பின்பற்றுவது, வெளிநாடுகளின் தாக்கத்தை நாட்டுக்குள் எடுத்து வருவது என்பன இவற்றிலேயே ஏற்படுகின்றது. குறிப்பாக, அந்நியச் செலாவணி தொடர்பாக கட்டுப்பாடுகளை எதிர் கொண்டு வரும் நாடுகளை பொறுத்த வரையில் இது திருப்திகரமான ஒரு நிலையாக இருக்க முடியாது. மேலும், இதன் காரணமாக மக்களிடையே வருமான ஏற்றத்தாழ்வு அதிகரிக்கின்றது என்றும், இருப்பவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடையிலான இடைவெளி விரிவடைகின்றது என்றும் சிலர் சுட்டிக் காட்டுகின்றனர்.

( 18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையாகக் கொண்ட கலாசாரமொன்று ஸ்தாபிதமாகியிராவிட்டால் இந்த நுட்பங்கள் எவையும் பலனளிக்கப் போவதில்லை. இந்தக் கலாசாரத்தில் தொழிலாளர்கள் ஒவ்வொருவரும் சிறப்பாகப் பணியாற்றும் பொருட்டு சிறந்த, அதிக உற்பத்தித் திறன் கொண்ட வழிகளைத் தேடிக் கொண்டிருப்பார்கள், விருத்தியை நோக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும். அது எல்லாச் சந்தர்ப்பங்களிலும் வாடிக்கையாளரைத் திருப்திப்படுத்தும் ஒரு கலாசாரமாக இருந்து வருவதுடன், தரமான வேலை குறித்து பெருமிதம் கொள்கிறது. தற்போதைய நிலை சிறந்தது அல்ல என்பதும், அதனை மேலும் விருத்தி செய்ய முடியும் என்பதும் அதன் நம்பிக்கையாகும். இத்தகைய கலாசாரமொன்றுக்கு ஊடாகவே ஒரு நிறுவனம் தன்னை ஒரு தலைசிறந்த நிறுவனமாக உருவாக்கிக் கொள்ளும் பொருட்டு அனைத்து விதமான பகுப்பாய்வு நுட்பங்களையும், அனைத்து விதமான விருத்தி நுட்பங்களையும் பயன்படுத்த முடியும்.

( 21 ஆம் பக்கத் தொடர்ச்சி)

## நலன் பேண் வசதிகள்

வேலை தொடர்பான நலன்பேண் வசதிகள் பெரும்பாலும் புறக்கணிக்கப் படுகின்றன. அவற்றுள் பெரும் பாலானவை உடனலத்துடன் தொடர்பு பட்டவையாகும். வேலைநாள் ஒவ்வொன்றின் போதும் தொழிலாளர்கள் நீர் அல்லது தேநீர் பருக, உணவு உண்ண, தமது கைகளைக் கழுவ, மலசலம் கழிக்க, ஓய்வு பெற்றுக் களைப்பு நீங்க, வேலை நாளின் முடிவில் குறித்த வேலை உடைகளை மாற்றிக் கொள்ள வேண்டியவர்களாவர். அவை தொழிலாளர்களின் உடனலம், மனவுறுதி, ஊக்கம், வேலையில் திருப்தி, வருகை என்பவற்றை மேம்படுத்துவன வாகும். முதலுதவி அல்லது உடனலச் சேவைகள், போக்குவரத்து வசதிகள், பொழுதுபோக்கு வசதிகள், குழந்தைகளைக் கவனிக்கும் வசதிகள், தொழிற்சாலைக் குடும்ப ஒன்றுகூடல் வைபவங்கள் போன்ற பிற நலன்பேண வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல் தொழிலாளர் திருப்தியையும் உற்பத்தித் திறனையும் உயர்த்தக் கூடியவையாகும்.



லைமை அஞ்சல் அலுவலகத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு பெற்றுள்ளது.
பதிவு எண் : QD/15/News/97

# பொருளியல் நோக்கு

பொருளியல் நோக்கு, கடந்த இருபத்தியிரண்டு வருட காலமாக, சமகால அபிவிருத்தி மற்றும் சர்வதேச சமூக, அரசியல், பொருளாதார விவகாரங்கள் தொடர்பான கலந்துரையாடல்களுக்கான ஒரு களத்தினை அளித்து வந்துள்ளது. அது அண்மையில், சிறப்பு அக்கறைக்குரிய பல தலைப்புக்களை உள்ளடக்கிய விசேஷ அறிக்கைகளை வாசகர்களுக்கு வழங்கியுள்ளது.

- போக்குவரத்து : இன்றைய நிலை
- தென்னாசிய முன்னுரிமை வர்த்தக ஏற்பாடு
- பால் பண்ணைக் கைத்தொழிலின் பிரச்சினைகள்
- இலங்கையின் பொருளாதாரம் : பிரச்சினைகளும் வாய்ப்புக்களும்

பொருளியல் நோக்கு பிரதிகளை நாடெங்கிலும் உள்ள புத்தக நிலையங்களிலும் மக்கள் வங்கிக் கிளைகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்.

பிரதி விலை : ரூ. 20/- ஆண்டு சந்தா : ரூ. 240/-
ஆண்டு சந்தா (வெளிநாடு),

சார்க் நாடுகள் - US$ 30
உலகின் ஏனைய பாகங்கள் - US$ 35-

காசோலைகள் / காசுக்கட்டளைகள் "People's Bank Economic Review"என்ற பெயருக்கு வரையப்பட்டு கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும்:

ஆராய்ச்சிப் பணிப்பாளர், ஆராய்ச்சிப்பிரிவு,
மக்கள் வங்கி, தலைமையலுவலகம், கொழும்பு 2.
தொலைபேசி : 327082, 436940.

பொருளியல் நோக்கு - மக்கள் வங்கியின்
ஒரு சமூகப் பணித்திட்டம்

ரிய முறையில் "பொருளியல் நோக்கின்" பெயரைக் குறிப்பிட்டு, அதில் டம் பெறும் கட்டுரைகளை மேற்கோள் காட்டவோ மீளப் ரசுரிக்கவோ முடியும்.

printed at the sumathi Book printing (Pvt) Ltd. Colombo 14, Sri Lanka.

